வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 வைகாசி திங்கள் 18-ம் நாள் (…5—1964) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 18 | இதழ் 1




# நேருவுக்கு நேர் யாருமில்லை



## எங்கே தேடிக் காண்போம்?

—ஈழத்து இரத்தினம்—

அன்பாலே உலகத்தை அளந்து நின்று
அறிவாலே சிறப்புற்று வளர்ந்து நின்று
பண்பாலே உயர்ந்தோனாய் எழுந்து நின்று
பகைவர்க்கும் கை கொடுத்துப் பகைமை கொன்று
உண்மைக்குப் பொருளானான் நேரு என்பான்
உறுதிக்கும் உணர்வுக்கும் உவமை நின்று
வியப்புக்குள் எமைவீழ்த்தி புலம்பவிட்டு
வழிமாறிப் போய்விட்டான் வரவேமாட்டான்.

ஏறுநடை இளம் தோற்றம் வயதோ மூப்பு
என்றாலும் அஞ்சாத உள்ளத்தோற்றம்.
வீறுணர்த்தும் வாலிபத்தின் வனப்பும்; எந்த
வினைக்கும் மிரட்டலுக்கும் வெருளா நெஞ்சும்,
நூறு முறை சொன்னாலும் மாற்றம் இல்லா
நாளுக்கு நாள் மாறும் பேச்சும் அற்ற,
நாயகனும் நேருதனை நீக்கிவிட்டு
நேர்மையினை இனிஎங்கே தேடிக்காண்போம்?

## இரங்கற் கூட்டம்

ஆசியாவின் சோதி பாரதப் பிரதமர் பண்டிதர ஜவஹர்லால் நேரு அவர்களின் மறைவை யொட்டி கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் எதிர்வரும் யூன் 2 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் சபை மண்டபத்தில் ஓர் இரங்கற் கூட்டம் நடைபெறும்.

## உள்ளே......

அ. அமிர்தலிங்கம் பா. உ.
கட்டுரை

★

டி. எம். காளியப்பா எம். ஏ.
கட்டுரை

★

யூன் 5.

★

சிலப்பதிகாரம் ஒரு வழிநூல்
பாஷ்யம்

# சிக்கல் சூழ்ந்த வேளையில் மறைந்து விட்டார்

## செல்வா விடுத்துள்ள செய்தி

ஒரு பெருஞ் செல்வந்தரின் மகனாகத் தோன்றி இங்கிலாந்தில் பிரபுக்களின் மக்கள் படிக்கும் பாடசாலையில் கல்வி கற்று தாய்நாடு திரும்பியதும் சகல செல்வத்தையும் துறந்து நாட்டு விடுதலைக்காக உழைத்தவரான பண்டிதர் நேரு, இந்தியாவில் பல சிக்கல்கள் தோன்றியிருக்கும் இச்சமயத்தில் மறைந்து விட்டார். அவருக்கு நிகராக அவருடைய காலத்தில் வேறுஎவரும இருநததில்லை. தமிழ் பேசும் மக்களின் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் பண்டிதர் நேரு மறைந்ததையிட்டு சுதந்திரன் மூலம் விடுக்கும் விசேட அனுதாபச் செய்தியில் குறிப்பிடுகிறார். அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பண்டிதர் நேருவின் மரணத்தைப்பற்றிக் கூறும்பொழுது இந்தியாவுக்கு மாத்திரமல்ல உலகம் முழுவதுக்கும் ஒருபெரிய ஆத்மா தவறிப்போனதுஎன்றுதான் கூறலாம்.

அவரின் பெருமையைப் பார்க்கும்போது அவர் சுமார் பதினேழு வருடங்கள் இந்தியாவின் பிரதமராய் இருந்ததிலும் பார்க்க அதற்குமுன் அவர் மறியற்சாலையில் திரும்பத் திரும்ப வசித்ததையே உற்று நோக்கிப் பார்க்கவேண்டும். ஒரு பெரிய ஐசுவரியவானின் மகன், இங்கிலாந்திலே பிரபுக்களின் மக்கள் படிக்கிற பாடசாலையில் கல்விகற்றவர், இந்தியா திரும்பியதும் தன் தகப்பன் வீட்டின் சொகுசான சீவியத்தை வெறுத்துவிட்டு, அந்த நாட்களில் இந்தியாவின் சுயாதீனத்துக்கு போரிட்டுக் கொண்டிருந்த காங்கிரசில் சேர்ந்து; அப்படிச் சேருவதனால் விளையும் துன்பங்களையும் வறுமையையும் ஏற்று, உழைக்க ஆரம்பித்தார். அந்த நாட்களில் அவர்சிறையிலிருக்கும்போது தன்சீவிய நாட்களுள் இந்தியா சுயாதீனம் அடையும் என்றும் அச் சுயாதீன இந்தியாவின் பிரதமமந்திரியாக தான் உழைப்பேன் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை.

சுயாதீன இந்தியாவின்பிரதமராக அவர் அமெரிக்காவிற்குச் சென்றபோது அந்த நாட்டுப் பொதுமக்கள் அவரை ஏகோபித்து வரவேற்றபோது, ஓர் வெளிநாட்டுப் பிரதமர் தங்கள் மத்தியில் வந்துவிட்டார் என்று அல்ல, ஓர் பெரிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அந்த எதிர்ப்பின் பயனாக திரும்பத் திரும்ப சிறைச்சாலை புகுந்த ஒரு வீரன் தம் மத்தியில் காணப்படுகிறார் என்று மகிழ்ச்சி அடைந்து அவரை வரவேற்றார்கள்.

நேருவின் சீவியத்தில், தனிய ஓர் கிழக்குத் தேச மகனாக அவர் தோன்றவில்லை. மேற்குத்தேச கல்வி, சீர்திருத்தம், அந்நாட்டு நல்ல குணுதிசயங்களை உடையவராகவும் இருந்தார்.

அவர் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 17 வருட காலத்தில் அவருக்கு நிகராக வேறு ஒருத்தரும் இருந்ததேயில்லை. அந்தப் பதினேழு வருடமும் இந்தியாவைச் சுற்றியிருந்த நாடுகளில் அரசாங்கங்கள் மாறி மாறி ஏற்பட்ட போதும் இந்தியாவிலோ ஒரு குழப்பமும் இல்லாமல் ஜனநாயக முறையில் நாடு வளர்ந்துவந்தது.

இந்தியாவின் பால் பல சிக்கல்கள் சூழ்ந்திருக்குங் காலத்தில் அவர் மறைந்து விட்டார். இந்திய மக்களுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்கான
(G. C. E. Ord. Lev.)

புதுமுறையாகவும், இலகுவில் விளங்கக் கூடிய நடையிலும்

★ எண் கணிதம் ★ சரித்திரம் ★ பூமிசாஸ்திரம்
★ தமிழ் பாஷை ★ குடியியல் ★ இஸ்லாம்
★ 101 தமிழ் கட்டுரைகள் ★ உடநலவியல்

என்பனவற்றிற்கான, பரீட்சைப் பத்திரப் பயிற்சிக் கோவைகள் வெளியாகி உள்ளன.

விலை : 101 கட்டுரைகளும் ரூ. 10/-
மற்றும் பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5/-

இலவச விபரங்களுக்கு எழுதவும்.

சர்வகலாசாலை
போதனா கழகம்.

540, மருதானை வீதி. தொலைபேசி:
த. பெ. 1079. கொழும்பு. 91699



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை உலகிற்கு உணர்த்த எழுதுகிறேன்

மலையகத்து வாழ்க்கை முறையை வைத்து, வாழக் கூடிய நல்ல சிறுகதைகள் சிலவற்றைப் படைத்த ஒரு சிலரில் தெளிவத்தை ஜோசப் ஒருவராவர். எழுத்துலகில் அடி எடுத்து வைத்த குறுகிய காலத்திலேயே தனக்கென தனியொரு இடத்தை வகுத்துக் கொண்டவர். மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்கள் உரிமைகள் அனைத்தும் பெற்று முழுச் சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்ற எண்ணம் மட்டுமல்ல; அதற்காக உழைக்கவும் தயாராக உள்ளார் இவர்.



கட்டுரையாசிரியர்

'நீங்கள் ஏன் எழுதுகின்றீர்கள்' என்று நண்பர் 'சாரல்நாடன்' முன்பொரு முறை என்னைக் கேட்டிருந்தார். 'நான் ஏன் எழுதுகின்றேன்' என்று முதன் முறையாக அன்று தான் சிந்தித்தேன். சிந்தனை சிந்தனையாகவே தொங்கிற்று. பென்சில் கூரால் தலைத் தோலை சொறிந்துகொண்டு நண்பரின் கடிதத்திற்குப் பதில் எழுதினேன்—கேள்விக்கல்ல!

அன்று தட்டிக் கழித்த அதே கேள்வி 'எப்படி எழுத ஆரம்பித்தீர்கள்' என்ற ரூபத்தில் சுதந்திரன் ஆசிரியரிடமிருந்து வந்து நின்ற போது மீண்டும் தலைத் தோல் இதம் பெற்றது.

### யாருக்காக

'எப்படி எழுதத் தொடங்கினீர்கள்; ஏன் எழுதுகிறீர்கள்; யாருக்காக எழுதுகிறீர்கள்' என்பது போன்ற கேள்விக்கணைகளிலிருந்து எந்த எழுத்தாளனுமே தப்பிக்க முடியாது. இப்படிக் கேட்பார்கள் அதற்கு இப்படிச் சொல்லலாம் என்ற ஆயத்தங்களுடன் எந்த எழுத்தாளனும் இருக்கவும் முடியாது.

எழுத்தாளன் என்று தானும் பெயர் பெற வேண்டும் என்ற அசட்டு எண்ணத்துடன் தன்னைத்தானே நிர்ப்பந்தித்துக் கொண்டு—அல்லது தனக்குள்ள வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு—எழுதுவதால் எழும் எழுத்து 'அ' தெரியாத அப்பா, பச்சைப் பிள்ளையின் கையைப் பிடித்து; புத்தகத்தைப் பார்த்துக் கொண்டு, போட்ட 'அ'வின் அழகுடன் தான் மிளிரும்.

எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற எண்ணமோ, பத்திரிகைகளில் — அச்சில் — பெயரைப் பார்க்க வேண்டும் என்ற ஆரம்ப ஆசையோ எனக்கு இருந்ததில்லை.

ஆகவே பள்ளி நாட்களில் பாடசாலை ஏடுகளுக்கோ, நண்பர்கள் ஆர்வமிகுதியால் வெளியிடும் ஓரிரு சஞ்சிகைகளுக்கோ நான் எதையுமே எழுதவில்லை. எழுத வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு எழவில்லை. பள்ளிக்கு வருவேன் படிப்பேன்: வீட்டுக்குப் போவேன் விளையாடுவேன். அவ்வளவுதான்.

### முதற்பரிசு

நமது கல்லூரியிலிருந்தும் மாணவர்கள் பங்குபற்ற வேண்டுமே என்று வற்புறுத்தும் தமிழாசிரியர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அவ்வப்போது ஒரு சில கட்டுரைப் போட்டிகளில் பங்குகொள்வேன். முதல் முறையே எனக்கும் ஒரு பாராட்டுப் பத்திரம் கிடைத்த போது பெருமை பட்டுக் கொண்டவர் தமி

தெளிவத்தை

**ஜோசப்**

ழாசிரியர். 'பார்த்தாயா, மாட்டேன் என்றாயே!' என்று.

எழுத்தாளர்கள் என்றால் அவர்கள் ஏதோ ஒரு அபூர்வ இடத்திலிருந்து இறங்கி வந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். மதிப்பு மட்டுமல்ல அவர்கள் மேல் பக்தியும் கூட உண்டு.

1956 என்று நினைக்கின்றேன். பாடசாலை விட்டு விலகி 'தெளிவத்தையில்' வேலைக்குச் சேர்ந்த வருடம். 'உமா' என்ற அந்த மாத இதழ் வந்தது. ஓவிய மன்னன் மாதவன் அட்டைப் படம் வரைந்திருந்தார். உயிருள்ள ஓவியங்கள் அல்லவா அவருடையவை? அந்த அட்டையைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அது எனக்கு கதை சொல்லிற்று. அட்டையைப் பார்த்து நான் மனதில் பதித்துக் கொண்ட கதைக்கும் அவர்கள் எழுதியுள்ள கதைக்கும் எத்தனை ஒற்றுமை உளது என்று பார்ப்பதற்காக அட்டைப் படக் கதையைத் தேடினேன். என்ன ஆச்சர்யம்! அவர்கள் அட்டைப் படத்திற்குக் கதை கேட்டிருந்தார்கள். பரிசு 50/= ரூபாயோ என்னவோ. நினைவில்லை. எழுதுவதா வேண்டாமா என்ற போராட்டம் அது இது ஒன்றுமே கிடையாது. ஏட்டை எடுத்தேன். ஏற்கனவே மனதில் தோன்றிய கதையை எழுதினேன். அனுப்பினேன்.

### முதல் கதை

அனுப்பி வைத்தேனே ஒழிய அவர்கள் பிரசுரித்தார்களா; யாருடையதைப் போட்டிருக்கிறார்கள். அவர் எப்படி அந்தப் படக் காட்சியை கதையுடன் இணைத்திருக்கிறார் என்பதை எல்லாம் அறிய வேண்டும் என்ற ஆவல் கூட என்னகத்தே எழவில்லை.

எழுதுவதில் அத்தனை ஆர்வம் எனக்கு. அதன் பின் 'உமா' என்ற ஏட்டையே நான் பார்க்கவில்லை.

இரண்டு வருடம் கழித்து—அதாவது 1958 என்று நினைக்கிறேன். தற்செயலாக என்னைச் சந்தித்த நண்பர் 'தமிழோவியன்' கூறினார்: 'உங்களுடைய கதை ஒன்று உமாவில் கண்டேன்—பாராட்டுக்கள்' என்று. எனக்கே அப்போதுதான் தெரிந்தது என்னுடைய முதற் கதையைத் தான் அவர்கள் தங்களுடைய அட்டைப் படத்திற்கேற்றதென தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள் என்பது. பெருமைப் பட்டுக் கொண்டேன். இருந்தாலும் என் திறமை ஒன்றுமில்லை. ஓவிய மன்னனின் படம் எனக்குக் கதை கூறிற்று, நான் அதை அவர்களுக்குக் கூறினேன். பாராட்டப்பட வேண்டியவர் ஓவியர்.

என்னுடைய கதையைத் தான் போட்டார்கள் என்றால் பரிசுத் தொகை......! நான் விலாசம் கொடுத்திருந்தேனோ என்னவோ.

எனது முதல் கதை ஏற்றுக் கொள்ளப்பட்டதில், அதுவும் ஒரு தென்னிந்தியப் பத்திரிகையால் ஏற்றுக் கொள்ளப் பட்டதில் எனக்கு ஒரு தனி மகிழ்வு—உற்சாகம். நானும் கதை எழுதிவிட்டேன் என்ற எண்ணம் எனக்கும் கதை எழுதத் தெரியும்

(13-ம் பக்கம் பார்க்க)


**வேல் படை மருந்து**

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை.
தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட
சுக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்
முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும்
ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் செலவு வேறு

தயாரிப்பவர்கள்:
**S. P. S. ஜெயம் அன் கோ.,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## கவிதைப் பூங்கா

### பாசறை படைப்போம்

—காசி. ஆனந்தன் பி. ஏ.—

ஒளிமிக்க பொற்காலம்
ஒன்றிலே நாற்றிசை
உலகும் ஆண்டு
களிமிக்க பெருவாழ்வும்
கவிதையும் கண்டுள்ள
தமிழச் சாதி
அழிவுற்ற நிலை கொண்டு
பூமியில் அடிமை போல்
உறங்கலாமோ?
இழிவுற்ற தமிழ் மாந்தர்
இருந்தாலும் இறந்தாலும்
இரண்டும் ஒன்றே!

கொடியாடும் வானமும்
கோட்டையும் அகழியும்
கொலை வாளோடு
படையாடும் வீதியும்
பகைவரின் உயிராடும்
படிமுழங்கும்
இடியோசை முரசமும்
இழந்து நாம் வரலாற்றில்
இடறி வீழ்ந்தோம்!
உடலோடு வாழ்கிறோம்
என்பதைத் தவிர நாம்
உயிர்வாழ்ந் தோமா?

புறவாழ்வு கண்டுள்ள
தமிழ் மக்கள் புதுவாழ்வு
தொடங்க வேண்டும்!
பறைகொட்டி முழங்கியே
தெருவெல்லாம் பாசறை
படைக்க வேண்டும்!
சிறையுண்ட நம் கையின்
விலங்குகள் சிதறுண்டு
தெறிக்க வேண்டும்!
இறவாத தமிழ் வீரம்
உடையவர் எழுமின்கள்!
இயங்குவோமே!

..............| | |..............

### குணந்தானென்ன!

—மருதமைந்தன்—

தமிழிளந் தாயே—உந்தன்
தனிப்பெருங் குணந்தானென்ன
திமிரிலாப் பான்மையாலே—சிலர்
செய்திடுங் கொடுமை யெல்லாம்
குவியலா யுற்ற போதும்—முகங்
கோணிடக் கண்டேனில்லை
நிமிர்தலை நித்தங் கண்டேன்—உன்
நெஞ்சினி லுரமுங் கண்டேன்.

அந்நியள் ஆங்கிலச்சி—இங்கு
அரசியலுற்ற போதும்
உன்னியல் மாறவில்லை—ஒரு
உபத்திரவ(ந்)ங் காணவில்லை
சின்னவள் சிங்களச்சி—நிலை
சிதறிடுங் கட்டிலேறிப்
புன்னகை காட்டினாலும் - மனம்
புழுங்கி நீ மாளுவாயோ?

பகையிரு ளோட்டு நிலா—முகம்
பார்த்திட நாணிடுமே
முகையவிழ் முல்லைதானும்-உன்முன்
முறுவலுஞ் செய்திடுமோ?
நகையழி சில்லறைகள் - முகத்திற்
"ரூரி"னைப் பூசியதால்
அகைதலுஞ் செய்திட்டாயோ—என்
அகத்தினில் வாழும் மாதே.

அல்லலு மானந்தமும் - இரு
அன்னையின் அரும் புதல்வர்
நல்லதுந் தீயதுவும் - இந்
நானிலங் காண்பதுண்மை
எல்லாமே நிலைத்ததில்லை - இதை
எண்ணுதார் இடர்வரெனச்
சொல்லாமற்சொல்கின்றாயே உளத்
தூய்மையில் வாழு மாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை.

கே: இலங்கைத் தபால் அட்டையை, 'அஞ்சல் அட்டை' என்றும் மேல் விலாசம் மாத்திரம் இங்கே எழுதுக என்பதை 'பெறும் முகவரி மட்டும் இங்கே எழுதுங்கள்' என்றும் மாற்றியமைத்தால் சிறப்பாக இருக்குமே. இது குறித்து திறைசேரிக்கு எழுதினால் பயன் கிட்டுமா?

ப: எழுதிப் பாருங்கள்—திறைசேரித் தம்பிரான்களை அசைப்பது மிகவும் கடினம். ஒரு திருத்தம்.-"முகவரி மட்டும் இங்கே எழுதுங்கள்" என்பதுகூட நீளம் அதிகம். "முகவரி மட்டும்" என்ற இரு சொற்களே போதும்!

ஃ

கே. லிங்கம், லுணுகலை.

கே: ஒரு தமிழ் பத்திரிகையில் திருமணப் பகுதி ஆரம்பித்தார்களே, இதுவரையில் எத்தனை திருமணம் நடத்தி இருப்பார்கள்?

ப: சிங்கள ஞாயிறு இதழ் ஒன்றை "காப்பி" அடித்துப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. அது வளர்கிறது—இது தேய்கிறது. மாமா தொழிலானாலும் திறமை வேண்டுமல்லவா?

ஃ

................,
காரைநகர்

கே: என்னைக் காதலித்தவன் பிழையான வழிகளில் சென்றால் எப்படித் திருத்துவது?

ப: உங்கள் காதலை ஏவுகணையாக உபயோகியுங்கள். அதுவும் பயனில்லையேல்—மீண்டும் சுதந்திரப் பறவையாகிவிடுங்கள்.

ஃ

எம். புஷ்பராணி,
வறக்காப்பொலை.

கே: பாரதப் பிரதமரின் மகள் இந்திரா காந்தி தன் தந்தைக்குப் பிறகு பிரதமராக வருவதை விரும்பவில்லையே, காரணம் ஏன்?

ப: பிரதமர் பதவி குடும்பச் சொத்தல்ல என்பது தான் காரணம். அடுத்த பிரதமரை மக்கள்தான் தெரிவு செய்ய வேண்டுமென்று நேருஜியும் கூறிவிட்டார்.

ஃ

வை. றஹ்மத்துள்ளா,
குருநாகல்.

கே: "முஸ்லிம்களின் போதனா மொழி சிங்களமே" என்று கூச்சல் போடும் கூட்டத்தாரைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: ஓ! ஆயுட்காலத் தலைவரின் சீடர்களைப் பற்றி குறிப்பிடுகிறீரா? தலைமையைச் சிரஞ்சீவியாக்க அது ஒரு வழி அவர்களுக்கு—சிங்களத்தில் பரீட்சை எழுதிய 100 முஸ்லிம் மாணவ ஆசிரியர்களில் ஒரே ஒருவருக்குத்தானே நியமனம் கிடைத்தது. இதை எப்படி முஸ்லிம் மக்கள் மறக்க முடியும்?

ஃ

ஆ. சுப்பையா,
ராசாக்கொலை தோட்டம்.

கே: தலையில் ஊறன் விழுவது நன்மையா, தீமையா?

ப: தலையில் விழுந்து அது உங்களைக் கடிக்காதவரை நன்மை. இல்லையேல் தீமை!

கே: உங்களை எங்கே வந்தால் பார்க்கலாம்?

ப: நான் இருக்குமிடத்துக்கு வந்தால்...

ஃ

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

கே: அழகான பெண்களைக் காதலித்தால் ஆபத்து என்கிறார்களே உண்மையா?

ப: அழகற்ற பெண்களைக் காதலித்தால் மட்டும் ஆபத்து இல்லையா, என்ன? காதலென்றால் ஆபத்தும் உண்டு. ஆனால் அழகற்ற பெண்மீது கொண்ட காதலுக்கு ஆபத்தை எதிர்த்துப் போராடும் வலிமை உண்டு. அழகான பெண்மீது கொண்ட காதலுக்கு அந்த வலிமை குறைவு. காரணம் முன்னையது அதிகமாக உள்ளத்தில் படிந்த காதல்-பின்னையது அதிகமாக அழகில் படிந்த காதல்.

ஃ

ஜெ. எம். ஜெயம்,
மட்டுநகர்

கே: தினமும் அதிக தூரம் நடந்து செல்வதால் உடலுக்கு நன்மையா?

ப: நன்மையே! இந்த நன்மையைக் கருதி எல்லோரும் நடக்கத் தொடங்கிவிட்டால் வாகனங்களே தேவைப்படா. எரிபொருளுக்குச் செலவாகும் பணமும் மிச்சம்.

ஃ

பெ. கணேசன்,
லுணுகல

இலங்கையில் எப்போது அமைதி நிலவும்?

ப: அமைதி ஏற்பட நாட்டிலே ஐக்கியமும், பொருளாதார சுபீட்சமும் ஏற்பட வேண்டும். அதற்குச் சிறுபான்மையோருக்கு உரிமைகளை வழங்கி அவர்களைத் திருப்திபடுத்த வேண்டும்.

கே: நாடற்றவர் பிரச்சினை எப்போது தீரும்?

ப: "நாடற்றவர்களை" நாடுள்ளவர்கள் என்று ஏற்றுக்கொண்டால் ஒரே நொடியில் பிரச்சினை தீர்ந்துவிடும்.

ஃ

கே. கே. வி. ஆனந்தசர்மா,
வறக்காபளை

கே: யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆசிரியர் சங்க மகாநாட்டில் பேசிய பீட்டர் சில்வா தமிழ்ப் பகுதிக்குச் சிங்கள ஆசிரியர்கள் நியமிப்பதைத் தாங்கள் எதிர்க்கமாட்டோம் என்று கூறியிருக்கிறாரே பார்த்தீர்களா?

ப: பார்த்தேனே? கடந்த வாரம் சுதந்திரனில் அது பற்றி விமர்சனம் எழுதியிருக்கிறாரே தமது அரசியல் நிருபர்! அதனை நீங்கள் பார்த்தீர்களா?

ஃ

ஆரையூர் தம்பி,
ஆரையம்பதி

கே: ஜனநாயகத்தை நல்ல முறையில் பயன்படுத்தாமல் இருக்கும் சிறிமா அரசாங்கத்தை எதற்கு ஒப்பிடலாம்?

ப: ஜனநாயகம் ஒரு ரப்பர். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான அளவு இழுத்துக்கொள்ளலாம். சிறிமாவோவும் தனக்குத் தேவையான அளவு இழுத்துக் கொள்கிறார்.

ஃ

மங்கையற்கரசி,
கொக்குவில்

கே: எனது தாய் தந்தையர் எனது கணவரை விவாகரத்துச் செய்யும்படி வற்புறுத்துகிறார்கள். அதனால் நான் வழக்குத் தொடர்ந்து விட்டேன். கணவர் என்னை விரும்புகிறார். நான் என்ன செய்யலாம்?

ப: உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. வழக்கை வாபஸ் செய்து, கணவருடன் மீண்டும் சேர்ந்து குடும்பப்படகைச் செலுத்துங்கள்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: கூட்டாட்சி ஏற்பட்டு, சர்வாதிகாரம் இடம் பெறுமாயின், எதிர்த்துப் போராடவும், தியாகம் புரியவும் யூ. என். பி. தயாரா? அவ்வலிமை இக்கட்சிக்கு உண்டா?

ப: யூ. என். பிக்கும் தியாகத்துக்கும் வெகு தூரம். எதிர்ப்புச் சக்திகள் ஓரணியில் திரளுவதைக் கண்டு பயந்து பிதற்றுகிறது.

ஃ

கே. எம். மர்ஜின்,

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதி அண்மையில் ஒரு மஞ் [illegible] தியில் கொடுத்துத் தீர்த்தாரே! அப்படிச் செய்யலாமா?

ப: மஞ்சள் விலை அதிகம்-மக்களுக்கும் கிடைப்பதில்லை. மஞ்சள் பஞ்சத்தைப் போக்க மஞ்சள் பத்திரிகை யாவது விநியோகிக்கிறாரே, அந்த மக்கள் பிரதிநிதியைப் பாராட்டத்தான் வேண்டும்.

கே: கூட்டரசாங்கத்தில் இரு மந்திரிகள் சேர்வதை எதிர்த்து வந்த பிலிப் குணவர்த்தனா, தற்போது தமது எதிர்ப்பை நிறுத்தியதேன்? அம் மந்திரிமார்கள் பிலிப் குணவர்த்தனாவை எதிர்ப்பதன் காரணமென்ன?

ப: ஒரு காலத்தில் அவ்விரு மந்திரி பயில்வான்களுடன் மோதி வெற்றிகரமாகப் பின்வாங்கியவர் பிலிப் பயில்வான். எனவே மீண்டும் கோதாவில் ஏறி அவர்களுடன் மோதப் பயப்படுகிறார். அவர்களும் இந்த பயில்வானைக் கண்டு பயப்படுகின்றனர். இரு சாராரும் உறுமிக்கொள்கின்றனர்.

ஃ

ஜோ. திலீப் தோமஸ்,
உடபுசல்லாவ

கே: ஒரு தபால் அட்டையில் மூன்று கேள்விகள் கேட்டு எழுதியிருந்தேனே! ஏன் இன்று வரைக்கும் பதிலைக் காணோம்?

ப: இப்படியும் ஒரு கேள்வியா? சரி வாரா வாரம் தொடர்ந்து உங்களின் கேள்விகளை அனுப்பிவையுங்கள். அது உங்கள் பொறுப்பு—தகுதியானவை தவிர ஏனைய கேள்விகளைக் குப்பைக் கூடைக்குள் திணிப்பது என் பொறுப்பு.

ஃ

நடேசபிள்ளை,
தெல்லிப்பளை

கே: நான் 'சுதந்திரன்" பார்ப்பதில்லை. ஆனால் தற்செயலாகப் பார்த்தபொழுது உமது வாயைக் கண்டேன். அன்று துவக்கம் எனக்கு வாந்தி வருகிறது. என்ன செய்வது?

ப: அது என் வாயல்ல—கேள்வி கேட்கும் உங்கள் வாய்தான். சந்தேகமிருந்தால் கண்ணாடியைப் பாருங்கள்.

ஃ

கிருஷ்ணசாமி,
கெங்கல்ல

கே: மண வாழ்க்கையை விரும்பாது தனித்து வாழும் பெண்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: மனவுறுதி படைத்தவர்கள்தான். ஆனால் அவர்களை நம்பலாகாது.

ஃ

அழகன்,
அளவெட்டி

கே: எங்கள் பாடசாலையில் படிக்கும் நண்பன் ஒருவன் மது அருந்தும் தீய பழக்கத்தை மேற்கொண்டு தெருக்களில் நடக்க முடியாத நிலையில் தள்ளாடிச் செல்கிறான். அவனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: பாடசாலையில் அதனைக் கற்றுக் கொடுத்த ஆசிரியரைக் கண்டு பிடியுங்கள்: தண்டனை கொடுக்கலாம்.

ஃ

எம். சிவமணி,

கே: கட்டுப்பாடு இல்லாத பெண்களைப் பற்றித் தங்களின் அபிப்பிராயம் என்ன?

ப: இன்று அநேகமாக எல்லாப் பொருட்களுக்கும் கட்டுப்பாடு வந்துவிட்டது. பெண்களுக்கும் அம்மாதிரி கட்டுப்பாடு வந்துவிடக் கூடாது. ஆனால் பெண்களிடம் கட்டுப்பாடு வேண்டியதுதான்.

ஃ

தி. மதுரம்,
வெள்ளவத்தை

கே: ஜி. சி. ஈ. சித்தியெய்தி வேலையில்லாமல் இருக்கும் இக்கால இளைஞர்கள் விவசாயம் செய்யாமல் இருக்கும் நோக்கமென்ன?

ப: அவர்களைக் குறை கூறிப் பயனில்லை. ஜி. சி. ஈ. வரை போதித்த ஆசிரியர்கள் அதைக் கற்றுக் கொடுக்கவில்லையே!

ஃ

க. இளையதம்பி,
கிளிநொச்சி

கே: அரசாங்கக் கட்சியுடன் இடதுசாரி முன்னணி கூட்டுச் சேர்வது யூ. என். பி.க் கட்சியை வீழ்த்தவா?

ப: யூ. என். பி. எதிர்ப்பே அவர்களை ஒன்றுசேர்க்கின்றது. ஆனால் அதை அவர்கள் வெளிப்படையாகக் கூறுவதில்லை. 'சோஷலிசம்' என்ற சொல் எல்லாவற்றையும் மறைத்துவிடுகின்றது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப் படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

## "நவீன அரசியல்" (தெருக்குறள்)

—அளவெட்டி: மூ. திருநாவுக்கரசு—

தாலிக்கொடிமுதலாய் தன்கைப்பொருளும் அழிக்கில்
காலிக்கும் கைவருமே அரசு.

கைலஞ்சம் கள்களவு கன்னியர்தம் சகவாசம்
செய்நெஞ்சார் சிறந்தரசு வாதி.

'கோறம் பெல்' சத்தம் குறையாமல் கேட்பதுவே
நாறும் அரசியலின் நாடி.

மந்திரியாம் பதவியதில் மனம்செல்லுமேயானால்
தந்திரமாய் தமிழினத்தை வில்.

கைலஞ்சம் வாங்கி களவு பலசெய்தாரை
வையத்து வாழ்விப்பதரசு.

உல்லாசமாய் ஓசில் உலகத்தைச் சுற்றிடவே
வல்லார் அரசினரின் வால்.

படிப்பறிவு உத்தியோகம் பாரதனில் இல்லையெனில்
அடிப்படையஃதரசியல் வாதிக்கு.

மக்கள் பலர் கூடி மண்ணள்ளித்திட்டுவதே
இக்கால அரசியலின் ஏற்றம்.

தேசியம் பேசித் துரோகத்தனம் புரியும்
நீசர் நிறைந்ததுவே அரசு.

தூசணத்தைச் சற்றுத் துணிவாகப் பேசுபவர்
தேசயக்தி அரசியலார் தேர்.

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாயா ஜோதி
ஊது பத்திகளே
● சுகந்த வாசனை
● நீலத்து எரியும் தன்மை
● நியாயமான விலை
● நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.
உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

முருங்கை போஞ்சி விதைகள்
வெகு நாளாக எதிர்பார்த்திருந்த அமெரிக்கன் முருங்கை போஞ்சி, குத்து பட்டர், குத்து முருங்கை போஞ்சி போன்ற பல ரகங்கள் வந்துள்ளன.
தேவையிருப்பின் ஆடர் அனுப்பி வைக்கவும்.
எஸ். ஏ. பொன்னுந்து
தபால் பெட்டி-16,
நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மரணத்துக்குப் பின் எது நடந்தாலும் எனக்கு அக்கறையில்லை

# எவர் மீதும் எனக்கு வெறுப்பு கிடையாது

## நான் மத வாதியல்ல

[திரு. திபோர் மெண்டே எனும் மேலைநாட்டு அரசியல் அறிஞர், இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த பொழுது, நேருவைச் சந்தித்தார். அப்பொழுது நேருவிடம் தான் கேட்ட கேள்விகளையும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட பதில்களையும் 'நேருவுடன் சம்பாஷணைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். அந்நூலிலிருந்து ஒரு முக்கியமான கேள்வியையும் பதிலையும் இங்கு வெளியிடுகிறோம்.]

திரு. திபோர் மெண்டே:- இந்தியா காந்திய உபதேசங்களின் வழி ஒரு அமைதியான புரட்சியை நடாத்த முயற்சிப்பதாலும், ஆசியாவிலிருந்தே சமாதான சகவாழ்வுக் கொள்கைகளும், ஆத்மீக, சமய நெறிகளும் பறந்துள்ளன என்பதாலும், புதிய ஆசியா, வல்லரசுக் கெடுபிடி அரசியற்காலமாகிய இக்காலத்திலும், அமைதியான முறையிலேயே முன்னேறும் என்று எண்ணுகிறீர்களா?

திரு. நேரு: ஓரளவுக்கு, நான் அப்படித்தான் நம்புகிறேன். சட்டாயமாக, அதில் சந்தேகமேயில்லை.

ஆனால், சமாதானத்துக்கு முயலும் எண்ணத்துக்கும், பலவீனத்துக்குமுள்ள பேதத்தை மக்கள் அறிய வேண்டுமென நான் விரும்புகிறேன். மெதுவாகப் பேசினால், அது பலவீனமாகாது. சமாதான முயற்சி என்பது ஒரு இழிவான சொல்லாகவே இன்று வந்துவிட்டது. சரண் அடைதல் என்பதற்கு மறுசொல்லாக அது கருதப்படுகிறது. எதற்காக அப்படி? ஒருவன் தனது கொள்கைகளைக் கைவிடாது, சமாதானத்திற்காக முயற்சித்தால், அக் கொள்கையில் என்ன தப்புஇருக்கமுடியும்? முக்கியமானது என்னவெனில், தனது கொள்கையைக் கைவிடப்படாது. தனது எதிரிகளுடனேயே ஒருவன் நாகரிகமான முறையில் பழக வேண்டுமென்று தானே எமது முன்னோரும் எமக்குக் கற்பித்துள்ளனர்! ஆகவே, நாம் மரியாதைக் குறைவாகப் பேசாது, நாகரிகமான முறையில் நடக்க வேண்டுமென்றே கருதுகிறேன்... இவற்றை விட, வெறுப்பு, கோபம் முதலிய உணர்ச்சிகளுக் கடிமைப்பட்ட நிலையில் ஒருவனால் தெளிவாகச் சிந்திக்க முடியாது. உணர்ச்சிவசப்பட்டவன் நிலை அப்படித்தானிருக்கும். இரு சாராரும் அத்தகைய நிலையில் நின்றுகொண்டால், ஒருவரும் அமைதியான முறையில் சிந்திக்க முடியாது. விளைவும் கெட்டதாகவே இருக்கும்.

என்னவோ, எனக்குத் தெரியாது... தத்துவ சாத்திரத்தின் தொடர்புடன் இச் சம்பாஷணைகளை நீர்தொடங்கியுள்ளீர்... ஆனால், நான் உமக்கு ஏற்கனவே கூறிய மாதிரி, நான் ஒரு தத்துவ ஞானி அல்ல—ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், அதாவது மனிதன் தன்னைப்பற்றியும் தன் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டுமென்ற அளவுக்கு தத்துவ ஞானி என்பதைத்தவிர.

ஒரு பக்கத்தில் இடையறாத நடவடிக்கையும், மறு பக்கத்தில் கடந்தகால சிறைவாசமும் கலந்த எனது வாழ்வில், தனிமையிலே பழைய காலத்தைப் பற்றியும், தெளிவற்ற எதிர்காலமொன்றினைப் பற்றியுமே நான் சிந்தித்ததுண்டு. அந்தக் கருத்தில், எல்லோரும் தத்துவஞானி என்றே கூறலாம்.

ஆனால், உலகத்துப் பிரச்சினைகள் மிகவும் நுணுக்கமாகவும், சிக்கலானவையுமாக விருப்பதால், அவற்றின் முன்னால் நான் பணிவுடையவனாக நிற்கிறேன். சரியான வழி இது என்று அதன்வழி போவதைத்தவிர அவற்றுக்கு மாற்று மருந்து வேறொன்றும் நான் அறியேன். எது சரி என்பதை எங்களால் எப்பொழுதும் சொல்ல முடியாமல் இருக்கலாம். என்றாலும் எது பிழையென்று அறிந்து, அவற்றைத் தவிர்ப்பதன் மூலம், தீய விளைவுகளையாவது நாம் தவிர்த்துக்கொள்ள முடியும்.

இப்படித்தான் இந்தியாவில் நாம் உழைத்தோம்...... எம்மிடம் சக்தியும், உரமும் இருக்கும் வரை உழைத்துக் கொண்டே இருப்போம். ஒருவனுடைய நோக்கம் என்ன? இத்தனை நிகழ்ச்சிகளுக்கிடையில், மாற்றத்தின் வேகம் விரைவடையும் பொழுது, எப்படி ஒருவன் எதிர்காலத்தை வகுக்க முடியும்?

நான் மதவாதியல்ல. மார்க்கங்கள் என்னைக் கவர்வதில்லை. இந்தியாவின் [illegible] பற்றியும் எனக்கு அக்கறை

(13-ம் பக்கம் பார்க்க)



1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் கடைசித் தடவையாக பாரதப் பிரதமர் நேரு இலங்கைக்கு வருகை தந்த பொழுது தமிழ் பேசும் தேசிய இனத்தின் தந்தை திரு சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுடன் அளவளாவும் பொழுது எடுக்கப்பட்டது.

## தெய்வம் வென்றான்!

—[சக்தி பாலையா]—

உள்ளம் பதறித் துடித்த தம்மா இவ்
 வுடலும் நடுங்கிக் கிடுத்ததம்மா
வெள்ளப் புயல் போல் துயர் மூச்சும்
 மேவி நெஞ்ச மடைத்ததம்மா
வள்ளல் களிலே வல்லுனராய்
 வாழ்ந்து வாழ வழி செய்த
கள்ள மில்லா "ஜவஹர்லால்"
 காலம் வென்று சென்றதனால்.

உலகம் போற்றும் உத்தமனும்
 ஓய்ந்து விட்டான்; வையத்து
கலகம் வாரா நிலை யாவும்
 கருதிக் காத்த பண்டிதனும்
உலக மக்கள் வாழ்வுக்கே
 உவந்து தன்னை அர்ப்பணித்தான்
நிலமகள் அவனை இழந்து விட்டாள்
 நெஞ்சம் தளர்ந்து விழுந்து விட்டாள்.

ஆசிய ஜோதி அணைந்ததனால்
 ஆங்கோர் புதிய சரித்திரமே
ஆசியர் வாழ்வில் எழுமென்னும்
 அறிவை மறுக்கப் போகாது;
தேசிய வாழ்வை வையத்தே
 தூண்டி வைத்த மாமேரு
நேசன் ஜவஹர் பிரி வெண்ணி
 நெஞ்ச மிரங்கார் யாருண்டு!

இத்தனை காலம் எம்முடனே
 இருந்து தியாகத் திருவாகி
சத்தியன் காந்தி, புத்தனைப் போல்
 தமிழ் மறை தந்த வள்ளுவன் போல்
இத்தரை மீதில் "பஞ்சசீலம்"
 என்னும் நெறியைத் தந்தருளி
சித்தனைப் போல ஜவஹர்லால்
 சென்றான் தெய்வம் வென்றானே!

## இந்தியக் குடியரசின் உதயம்

சம்பவங்கள் நம்மீது கும்பல் கும்பலாகத் திரண்டு குவிகின்றன. ஒன்றன் பின் ஒன்றாய் அவை இடைவிடாது தொடர்ந்து மிக விரைவில் நிகழ்ந்து கொண்டிருப்பது அவற்றின் குறிப்பிடத்தகுந்த முக்கியத்துவத்தை நாம் இழக்க ஏதுவாகிறது. நம்முள் சிலர் இத்தகைய முக்கியச் சம்பவம் நேரிடும் ஒவ்வொரு தடவையும் நாட்டிற்கு நற்செய்திகளை வழங்கி, மக்கள் மாபெரும் முயற்சிகளில் ஈடுபட அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறார்கள். இத்தகைய அறிக்கைகளும், அடிக்கடி திரும்பத் திரும்ப விடுக்கின்ற காரணத்தினால், சுவையற்றுப் பழமையாய்ப் போகின்றன.

ஆனாலும், 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ம் நாள் இந்தியாவிற்கும், இந்திய மக்களுக்கும் மறக்க முடியாத் ஓர் ஒப்பற்ற பொன்நாள் என்பதில் ஐயமில்லை. நம்முடைய தேசியப் போராட்டத்தின் ஒரு முக்கியமான காலக் கட்டம் முற்றுப் பெற்றதென்பதே இதற்குப் பொருள். அந்தப் பயணம் முடிவடைந்தது என்னமோ உண்மை. ஆனால், அதுவே இன்னொரு தொல்லை நிறைந்த கடினமான பயணத்திற்கும் இடமளிக்கிறது. வெற்றியுடன் ஒரு வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு வெற்றியுடன் முற்றுப் பெற்ற ஒவ்வொரு வாக்குறுதியும் நம்முடைய வருங்கால உயர்ந்த முயற்சிக்குத் தேவையான மன நிறைவையும் திண்மையையும் தந்துதவுகின்றது.

இந்த ஜனவரி மாதம் 26ம் நாள் ஒரு தனிப்பெரும் சிறப்பைப் பெறத் தகுதிபெற்ற ஒரு நன்நாள். ஏனென்றால், சரித்திர முக்கியத்துவம் பெற்ற இப் பொன்னாள் நிகழ் காலத்தோடு இறந்த காலத்தைப் பிணைக்கிறது. இப்பொழுது நடக்கிற இந்த நிகழ்காலமும் அக் கடந்த காலத்திலிருந்துதான் வளருகிறதாகத் தோன்றுகிறது. இருபது வருடங்களுக்கு முன்னர், நாம் முதல் விடுதலை சபதத்தை எடுத்துக் கொண்டோம். இந்த இருபது ஆண்டுகளாக, நாம், போராட்டமும், பிணக்கும், வெற்றியும், தோல்வியும் எத்தகையன வென்று அனுபவித்து அறிந்துள்ளோம். பொய்த் தோற்றமாகிய தோல்வியின் வாயிலாக வெற்றிச் சாதனைக்கு வழி வகுத்து நமக்கு வழிகாட்டிய நம் அரும்பெரும் தலைவர் — உலகம் போற்றும் உத்தமர் — இப்போது நம்மிடையே இல்லை. ஆனால் அவ்வண்ணல் காந்தியடிகளின் சலியாத உழைப்பின் விளைவாகிய தீஞ்சுவைக் கனி மாத்திரம் நமக்குரியதாயிற்று. இத் தீங்கனியைக் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டுமென்பது அனேக மெய்மைகளைப் பொறுத்துள்ளது. சில அடிப்படை மெய்மைகளைக் கடைப்பிடிக்கும்படி, காந்தியடிகள் தம் வாழ்நாளெல்லாம் நம்மை வற்புறுத்திவந்தார். அவை தாம் — உயர்ந்த சிறந்த சீலம், கருத்தில் தூய்மை, நோக்கில் நேர்மை, சகிப்புத்தன்மையில் ஆர்வம், நல்லுறவில் நாட்டம், கடுமையான உழைப்பு—முதலியன. இத்தகைய அடிப்படைக் குண விசேஷங்களின் மீதுதான், குடியரசுத் தன்மை வாய்ந்த நம் சுதந்திரத்தின் அடித்தளத்தை நிறுவ வேண்டுமென்று நான் மக்களுக்கு அறிவுறுத்தலைத்தான் செய்ய இயலும் நம் மனத்திலிருந்து அச்சத்தையும் வெறுப்பையும் அறவே அகற்றல் வேண்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற மேதை

# பண்டித ஜவஹர்லால்

## 'வெற்றி வீரனுக்கே; கோழைக்கல்ல' என்பது அவரின் தத்துவம்

ஸ்வருபராணி என்னும் மாதர்திலகம் ஜவஹர் என்னும் குழந்தையை மோதிலால் நேருவின் வாரிசாகப் பெற்றெடுத்தாள்; தீவிரவாதியாகிவிடுவாரோ என்று அஞ்சிய தந்தையோ காந்தி என்னும் காந்த சக்தியிடம் அடைக்கலமாகத் தந்தார்; அந்த மகானே தன்னுடைய வாரிசாக, பாரத நாட்டின் செல்வமாக ஏற்றுக் கொண்டார். ஆனல்......உலக அன்னையோ எல்லோரையும் முந்திக் கொண்டு தன்னுடைய தவப் புதல்வனுக அள்ளி அணைத்துக் கொண்டாள்.

### முன்னணி வீரர்

கோடானு கோடி தரித்த நாராயணர்கள் வாழும் நாட்டிலே கோமானின் மகனுகப் பிறந்தாலும், வெள்ளையர் கொடுங்கோலாட்சியை முறியடித்தவர். மேலை நாட்டு நாகரிகத்திலே, பண்பிலே ஊறி வளர்ந்தவர் என்றுலும் பிறந்த நாட்டின் பண்பை மறவாதவர்! ஹாரோ பள்ளியில் பயின்ற ஆங்கிலம், கேம்ப் பிரிட்ஜ் பல்கலைக் கழகம் தந்த விஞ்ஞான அறிவு, இலண்டனை அளித்த சட்ட ஞானம் இவைகளினுல் அவர் தாய் நாட்டுப் பாசத்தை அகற்ற முடியவில்லை. வக்கீல் தொழிலைப் பயின்றும் கூட வக்கீல் மனப்பான்மையின்றி, காந்தியடிகள் துவக்கிய விடுதலைப் போருக்கு விரைந்தோடி வந்தார்—முன்னணி வீரராக! பழுத்த மேதைகளைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்த காங்கிரஸ் இயக்கத்தை—பொது மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமை காந்தியடிகளை மட்டுமல்ல—நேருவையும் சாரும். நேரு தியாகத்தில் விளைந்த முத்து; பதினுன்கு ஆண்டுகள் சிறை வாழ்வு கொள்கைக்கு உரமிட்டது; அத்தனை காலம் சிறையில் வைத்த ஆங்கில அரசாங்கத்தின் மீது அவர் கசந்து கொள்ளவில்லை; விளையாட்டில் வென்ற வீரரைப்போல் புன்னகை தவழ சர்ச்சில் கரங்களைக் குலுக்கினர்.

### அரசியல் வாதி

கமலாவுடன் நடத்திய இருபதாண்டு இல்லறவாழ்க்கையில்—பாதிக் காலத்தைச் சிறைச்சாலையிலே கழித்தார். விடுதலைக் கிளர்ச்சி நாளில்—மூதாதையர் திரட்டிய செல்வத்தை எல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தார் ஏழை எளியவர்களுக்கு! நேருவின் நாட்டுப் பற்று, உலகப் பற்று ஆகிய இரண்டும் ஒரே மரத்தில் கிளைத்த இரு கிளைகள்தாம். நேருவின் சர்வதேசியம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல; 1939லேயே ஐரோப்பாவில் நடைபெற்ற நாஸிஸ, பாஸிச எதிர்ப்பு மாநாடுகளில் கலந்து கொண்டு முழக்கமிட்டவர் தானே! அயல்நாட்டுக் கொள்கையைக் கையாளும் எந்த ராஜதந்திரியும்—சாணக்கியன் காலந்தொட்டு, மாக்கியவெல்லியின் தோற்றத்திலிருந்து, சரிகட்டும் அதிகாரக் கொள்கை முளைத்த நாளிலிருந்து—தாய் நாட்டின் நலத்தைக் கருத்தாகக் கொண்டு அரசியல் சதுரங்க மாடுவதைத்தான் உலகம் கண்டிருக்கிறது! உலக நலத்தைக் கருத்தாகக் கொண்ட அயல் நாட்டுக் கொள்கையொன்றை வகுத்து, அதை நல்லெண்ணமுள்ள எல்லா ராஜதந்திரிகளையும் ஏற்றுக் கொள்ளச் செய்த பெருமை நேருவுக்கே!

### உலகத் தலைவன்

நேரு ஆசியாவின் எழுச்சிக்கு வித்திட்டவர் மட்டுமல்ல; உலக அமைதிக்கே மருந்து கண்டு பிடித்த அரசியல் அறிஞர். முதலில் இவரின் அயல் நாட்டுக் கொள்கை—வனந்தரத்திலே எதிரொலிக்கும் தனிக் குரலாகத்தான் இருந்தது; ஆனல், உலக நிகழ்ச்சிகள் நேருவின் அறநெறியே சர்வதேசிய சிக்கல்களைத் தீர்க்க வல்லதுஎன்று வற்புறுத்தின; பர்மாவின் தாகின் நூ, இந்தோனேஷியாவின் சுகர்னே, யூகோசுலேவியாவின் டிட்டோ, எகிப்தின் நாஸர், கடைசியாக—முடிவாக அல்ல—சோவியத்தின் குருஷ்சேவும் ஏற்றுக்கொண்டார் "கூடி வாழ் கொள்கை தான்" உலக அமைதிக்கு



மருந்தென்று! கொரியா போரில் 38 அட்ச ரேகையைத் தாண்டாதே என்ற நேருவின் கருத்தை, நல்லெண்ணத்தை 30,000 இளைஞர்களைப் பலியிட்ட பின்னரே அமெரிக்கா உணர்ந்து கொண்டது!

### அமைதிக்கு வழி

பிரிட்டனின் எகிப்து படையெடுப்பு விவேகமற்றது; வேதனை தரும் விளைவுகள் வரும் என்று இவர் விடுத்த எச்சரிக்கையின் சிறப்பை—சோவியத் தொண்டர் படை வருகிறது என்ற அறிவிப்பைக் கேட்ட பின்னரே பிரிட்டனும் பிரான்சும் புரிந்து கொண்டன. பஞ்சசீலம் ஆசியாவின் தலைமை நாடான பாரத நாட்டின் அயல் நாட்டுக் கொள்கை என்பதால் உலக மக்களின் நன் மதிப்பைப் பெற்றது; அது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது; நேர்மையானது என்பதால் தான் உலகத்தின் மூலை முடுக்குகளிலுள்ள அமைதியை நாடும் மக்கள் எல்லோரும் ஆதரிக்கிறார்கள். மதில் மேல் நிற்கும் பூனையின் நடுநிலைமையல்ல நேருவின் கொள்கை; போர் வெறி கொண்ட நாடுகளின் பிடிப்பிலிருந்து நழுவி, உலக அமைதியை நிலைநாட்டத் துடிக்கும் எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு உலக நெருக்கடியைக் களைய வேண்டும் என்பதே! அமெரிக்காவின் நீதிபதி வில்லியம் டூக்லஸ் "கூடிவாழ்வோம் கொள்கை தான் ஒரு வழி; அதுதான் சிறந்த வழி; அது தவிரவேறு வழியில்லை உலக நெருக்கடியைத் தீர்த்து வைக்க......" என்று கூறுவது பொருள் நிறைந்த கருத்தல்லவா?

நமது அயல் நாட்டுக் கொள்கை—உள் நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டால் மக்கள் கவனத்தை அயல் நாட்டுப் பிரச்சினைகளில் திருப்பிவிடும் மலிவான ரகத்தைச் சார்ந்ததல்ல! அமெரிக்காவின் தூதர் அலன் "மிகக் குறுகிய காலத்திலே மிகப் பெரிய செல்வாக்கைப்

**டி. எம். காளியப்பா**
**எம். ஏ.**

பெற்ற நாடு இந்தியா" என்கிறார். அதற்குக் காரணம் நேரு அல்லவா? 'கோழிக் குஞ்சு இதயம்' கொண்டவர் என்று சிக்மன் ரீ கூறியதைக் கேட்டு குதூகலித்த அமெரிக்கர்கள்—கொஞ்ச நாளில்......அது அன்பு உள்ளம்; தூய உள்ளம்; தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஏன்—புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது! அழிவுப் பாதையில் மின்னல் வேகத்தில் செல்லும் போர் வெறியர்களுக்கு எச்சரிக்கை தொடுக்கும் நேரு—மானிட சமுதாயம் அமைதியாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார்; போர்க் கோலம், பயங்கர வெடிகுண்டு ஆராய்ச்சி உலக அமைதியை நிலை நாட்டாது என்பது நேருவின் உறுதியான நம்பிக்கை.

உலக மக்களுக்கு ஒரு பெரிய ஆறுதலாக இருப்பவர் நேரு; போர் கிலியால் அஞ்சி நடுங்கும் மானிட சமுதாயத்தை மூன்ருவது உலகப் போரிலிருந்து காப்பாற்றியே தீருவார் என்ற நம்பிக்கை அவர்களுக்குண்டு.

> ### ஹார்மோனியம்
>
> சுதந்திர அரசாங்கம் ஏற்பட்டால், அது முதலில் செய்யவேண்டிய பல வேலைகளில் ஒன்று, ஹார்மோனியம் என்னும் அந்தப் பயங்கர வாத்தியக் கருவியை உபயோகத்திற்குக் கொண்டு வராமல் தடுப்பதாகவே இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
>
> —ஜவஹர்லால் நேரு - 1940

### நேரு நூற்றுண்டு

இந்த நூற்றுண்டு "நேரு நூற்றுண்டு". அரசியல் ரீதியாக இன்றைய உலகத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்; அமெரிக்க கூடாரம்—சோவியத் கூடாரம்—அமைதியை நாடும் கூடாரம். இந்த மூன்று கூடாரங்களிலும் செல்வாக்குப் பெற்றுள்ள நேரு—உலகத் தலைவர் வரிசையில் முதலிடம் பெறுகிறார்; ஐசனேவரின் செல்வாக்கு மேற்கு ஐரோப்பியா—அமெரிக்கா ஆகிய நாடுகளின் எல்லைக்குள்ளே தான் அடங்கிக் கிடக்கிறது; சோவியத் தலைவர்கள் செல்வாக்கெல்லாம் கம்யூனிஸ்ட் ஆதிக்க வேலிக்குள்ளே சிக்கியிருக்கும் நாடுகளிலேதான்! நேரு எல்லோரையும் மிஞ்சியவர்; இணையற்ற உலகத் தலைவர். நேரு எங்கு சென்றுலும் அங்கே அவரை வரவேற்க ஜன சமுத்திரம் காத்துக் கொண்டிருக்கிறது. லண்டன், வாஷிங்டன், மாஸ்கோ, பீகிங், ரங்கூன், கொழும்பு, பிரேக், கெய்ரோ, டோக்கியோ போன்ற மா நகரங்களில் மட்டுமல்ல, சின்னஞ் சிறு ஊரில்கூட நேரு பக்தர்கள் அலைமோதிக் கொண்டிருப்பார்கள். நேருவைப் பார்ப்பதற்காக



வும், அவர் பேச்சைக் கேட்பதற்காகவுமே மக்கள் கூடுகிறார்கள் என்று கூற முடியாது. அவர் கொள்கையை ஆதரிப்பதற்காகவும் கூடுகிறார்கள்!

### பகுத்தறிவு வாதி

உலகத் தலைவரான நேரு உலகத்தின் எந்த மூலையில் அநீதி நடைபெற்றுலும் அதைக் கண்டிக்கத் தவறியதில்லை; அல்ஜீரிய விடுதலைப் போராட்டமோ, சைப்ரஸ் பிரச்சினையோ, டூனிஷியா கிளர்ச்சியோ, எகிப்து படையெடுப்போ, அங்கேரி படுகொலையோ— எதுவானுலும் அக்கிரமத்தை வன்மையாகக் கண்டிப்பார். சட்டப்படி இந்தியாவின் தலைநகர் டெல்லி என்றுலும்—நேரு எங்கு இருக்கின்ருரோ— அதுவே ஜனக் கூட்டம் அலைமோதும் கல கலப்பான தலைநகராக உள்ளது. நேருவின் கொள்கையில் எந்த அளவு ஜனநாயகம் கலந்திருக்கிறது? எந்த அளவு பொதுவுடைமை கலந்திருக்கிறது? பேச்சு, எழுத்து, நீதி ஆகிய துறைகளில் தனி மனிதனுக்குச் சுதந்திரம் கொடுத்துள்ள நேரு, தனி மனிதன் சமுதாயத்தைச் சுரண்டிச் செல்வந்தனுக வாழ அனுமதிக்க மறுக்கிறார். சமதர்ம வடிவமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதே இலட்சியமாகக் கொண்ட நேரு ஜனநாயகப் பொதுவுடைமை வாதி! பொதுவுடைமை என்னும் பழத்தின் சாறும், ஜனநாயகத்தின் சத்தும் கலந்த 'டானிக்'தான் நேருவின் இலட்சியப் பாதை. நாட்டுப் பண்பையும் நாகரிகத்தையும் இழிவுபடுத்தும் நாஸ்திகரல்ல; ஹோலி பண்டிகை மஞ்சள் நீராட்டத்திலே கலந்து மகிழ்ந்தாலும் காந்தியடிகளைப் போன்ற இந்துவல்ல; ஆனல் பகுத்தறிவுவாதி என்பதை மட்டும் மறுக்க முடியாது. மொழிப் பற்று, இனவெறி, மத வேறுபாடு, ஜாதிக் கொடுமை, பழமை பாசி படர்ந்த பண்பு ஆகிய 'சமூக வியாதி'களைக் கொண்ட மக்கள் வாழும் நாட்டின் தலைவரான நேரு—வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்கத் துடிக்கும் சமதர்ம வாதி!

### நேருவின் பொறுப்பு

பாருக்குள்ளே நல்ல நாடான பாரத நாடே தன் உய்வக்குக் காரணம் என்று இவர் அடிக்கடி சொல்லிக் கொண்டாலும் நேருவினுல் தான் இந்த நாடு உயர்ந்திருக்கிறது என்பதே உண்மை!! ஜனப் பெருக்கம் கொண்ட நாட்டின் எத்தனை எத்தனையோ பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுவதோடு—வருஷம் ஒன்று 12,00 000 மக்கள் வீதம் பிறக்கும் மக்களுக்கும், உணவு, உடை, வாழ்க்கை

(13-ம் பக்கம் பார்க்க)

### விவேகானந்த சபையில் வள்ளுவர் விழா

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் 30-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் விவேகாநந்த வித்தியாலய மண்டபத்தில் வள்ளுவர் விழா நடைபெறும். எண்ணை, எரிபொருள் கூட்டரவுத் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

வள்ளுவன் வகுத்தது முடியாட்சியா குடியாட்சியா? என்ற பொருள் பற்றி பட்டி மன்றம் ஒன்று நடைபெறும். வள்ளுவன் வகுத்தது முடியாட்சி என்று திருமதி நேசமலர் வேலாயுதம் பிள்ளை பி. ஏ., பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் சிறப்புப் பட்டதாரி மாணவன் திரு. அ. கைலாசநாதன் ஆகியோர் வாதிடுவர். வள்ளுவன் வகுத்தது குடியாட்சி என்று சட்டக் கல்லூரி மாணவன் திரு. சி சிவபாக்கிய நாதன், செல்வி சரோஜினி மெய்யப்பன், திரு. எஸ். உமாபதி சிவம் ஆகியோர் வாதிடுவர்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. வை. கா. சிவப்பிரகாசம் எம். ஏ. வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் முறையே 'குறள் காட்டும் பெண்கள்', 'குறள் காட்டும் மனிதன்', 'வள்ளுவன் வகுத்த அரசு' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

செல்விகள் கௌரீஸ்வரி கனகரத்தினம், மங்கையற்கரசி நடராசா ஆகியோரின் தமிழிசைப் பாடல்கள் பாடுவார்கள்.

சுதந்திரன் துணை ஆசிரியர் திரு. இரா. பத்மநாதன் 'திருவள்ளுவர் திரும்பி வந்தால்' என்ற தலைப்பில் நவீன கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.


"மந்திர சக்தியை"

திருப்பிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானாலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் காலை வாரிவிட்ட காங்கிரஸ்

## பழைய பட்டியலைக் காட்டி பலத்தைத் திரட்ட முயற்சி

### தோட்ட மக்களைச் சுரண்டும் தொழிற் சங்கங்கள்

காங்கிரசின் கரம் அசைந்தால் நாடே அசையும் என்று வீர முழக்கம் செய்தவர்கள் இன்று கரத்தையே இரண்டாக வெட்டி விட்டு துடிக்கின்றனர், உலக உத்தமர் மகாத்மாகாந்தி, சமாதான ஜோதி ஜவகர்லால் நேரு ஆகியவர்களால் அத்திவாரமிடப்பட்டதுவே இன்று மலையகத்தில் இயங்கும் காங்கிரசுகள் என்று ஏங்கியவர்கள் மினிட் புத்தகம் கொடுத்த ஏமாற்றத்தை இன்று ஏற்றுக்கொண்டனர். பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அங்கத்துவப் பட்டியல்களை பாதுகாத்து பலத்தை காட்டுகின்றனர், பரிதாபத்துக்குரிய காங்கிரஸ் தலைவர்கள்.

சிங்கள தீவிரவாதிகளும், சுயநல சுரண்டல்களும் ஆளுக்கொரு பாதை காட்டும் இவ்வேளையில் கல்வியறிவில் ஏழைகளான தமிழ்த் தொழிலாளர்கள் எங்கு செல்வது என்று தெரியாமல் ஏங்குகின்றனர்.

ஆயிரம் பொய்யை சொல்லியாவது ஆறு பேரை சேர்த்துக்கொண்டுவா, என்று பிழைக்க வழியின்றி தவிக்கும் சில தமிழ் இளைஞர்களிடம் கொந்தராத்து கொடுத்துவிடுகின்றனர் சில சிங்கள தொழிற் சங்க வியாபாரிகள்.

மாமனோடு சண்டை போட்டால் மாற்றான் கட்சியில் சேர்ந்து பலி வாங்க வேண்டும் என்ற மனப் பான்மையோடு இருக்கும் சில மலையகத் தமிழ்த் தொழிலாளர் இவர்களின் வலையில் விழுவதில் வியப்பில்லையே. இந்தச் சிங்கள தீவிர வாதிகளும் வர்க்க ஒற்றுமையை வார்த்தைகளில் மட்டும்வலியுறுத்தும் இடது

தமிழ்மணி, மஸ்கெலியா

சாரி கட்சியினரும், தமிழ் இனத்திற்குக் கடுகளவும் நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருந்தார்களா? என்று சற்று சிந்தித்தால் அவர்கள் நமது உரிமைகள் பறிபோவதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருந்தார்கள் என்பது நன்கு வெளிப்படும்.

மலையகத் தமிழர்களை அரசியல் அனாதைகளாக்கி நாடற்றவர், கள்ளத்தோணி என்ற பட்டங்களைப் பரிசளித்தவர்களும், அவர்களின் மொழியுரிமை, தொழில் உரிமை கல்வியுரிமை அத்தனையும் பறிக்க சிங்கள அரசு திட்டமிடும் இத் தருணத்தில் கொஞ்சமும் நெஞ்சம் நெகிழாத மௌன வகுப்பு வாதிகளாகிய யூ. என். பி., கேவலம் இன்று எள்ளளவும் கொள்கை மாற்றமின்றி நம்முடன் கொஞ்ச வருகின்றனர்.

#### கொடுமை! கொடுமை!

தமிழுக்கு சம உரிமை தமிழருக்கு பிரஜாவுரிமை என்ற உறவோடு சொந்தம்கொண்டாட மலையகம் வந்த லங்கா சம சமாஜ கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் இன்று கொள்கையில் குட்டிக்கரணம் அடித்துவிட்டு பச்சை வகுப்புவாதம் பேசும் சிங்களத் தலைவரின் கீழ் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைத்து மந்திரிப் பதவி வேட்டையாடுகின்றனர்.

கொள்கைகளை மாற்றிக் கொண்டே நம்முடன் கொஞ்சுகின்றனர். தமிழர்களை இந்நாட்டை விட்டு விரட்டுவதே எமது லட்சியம் என்று திரு. கே. எம். பி ராஜரத்தினவினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சங்கத்தில் தமிழர்கள் அங்கத்துவம் வகிக்கும் உரிமை மட்டும் மறுக்கப்படவில்லை.

நன்றி மறந்து, வாக்குறுதிகளை மீறி, தமிழர்களை ஏமாற்றி, மொழியுரிமையை பறித்து, இனக்கொலை திட்டங்களை இயற்றிவரும் இன்றைய ஆளும் கட்சியாகிய சுதந்திரக் கட்சியும் கூட தமிழர்களுக்குத் தொழிற் சங்கம் மூலம் சேவை செய்ய வந்துவிட்டது. கொடுமை! கொடுமை! கொடுமை!

#### தமிழன்னை வந்தாள்

இத்தகைய பித்தலாட்டங்களும், கபட நாடகங்களும் மலையகத் தமிழர்களை அடிமைகளாக்கி வரும் இந் நேரத்தில் தமிழன்னை அவர்களைத் தட்டிக் கொடுத்து மீட்கத் தவறவில்லை. 'தமிழனென்று சொல்லடா தமிழரசில் சேரடா' என்று புத்தி கூறி இலங்கைத் தொழிலாளர் கழகத்தை ஆரம்பித்து வைத்த பெருமை தமிழன்னையையே சாரும்.

மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்ட அன்று அறவழிச் செல்வ நாயகத்தால் ஆரம்பிக்கப் பட்டதுவே இக் கழகத்தின் தாயாகிய இலங்கை தமிழரசு கட்சி.

தமிழ் மொழிக்கு சம உரிமை, இலங்கையை தாயகமாகக்கொள்ள விரும்பும் அத்தனை பேருக்கும் பூரண பிரஜாவுரிமை இவையே கட்சியின் லட்சியத்தில் முன் நிற்பவை. மலையகத் தமிழரைக் காப்பாற்றும் பொறுப்பை காங்கிரஸ் கட்சியிடம் ஒப்படைத்திருந்த தமிழரசுக் கட்சி, காங்கிரஸ் மலையக மக்களின் காலைவாரி விட்டபடியால் தான் இன்று மலையகம் வந்துள்ளது என்பதை ஒவ்வொரு தமிழரும் நன்கு உணர வேண்டும்.

இன வழிப் பிரிந்தால் இறுதி வெற்றி நிச்சயம் என்பதை நிரூபித்துவிட்டார் தமிழன்னையின் தவப் புதல்வர் திரு. கோடீஸ்வரன்.

நடந்தவை நம்மை நகைக்க வைத்துவிட்டன; இனி நடப்பவை நன்கு நடக்க இன்றே மலையகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழரும் இன வழி பிரிந்து, தமிழரசுக் கட்சியின் இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்து நீதி நம் பக்கம் என்ற உண்மையை நிலைநாட்ட முன்வர வேண்டும்.

## மலைக் கண்ணீர்

—'வாணிதாசன்'—

மூடும் பனிக்காடு முக்காட்டுப் போர்வையினுள்
காடு அனைத்த துயரில் கலையாக்கார்
கூடும் இலைத்தோட்டம் கொய்யத் தளிர்மாதர்
நாடுகின்ற போழ்திர சுள்விறைப்பில் நீத்திடுவர்
கந்தையின் நாற்றம் செடிகளுக்குக் கற்பூரம்
நொந்து உதிர்க்கும் கண்ணீர் நிறைமழையாம்
கந்துவிட்ட கூழைமயிர் கலைத்ததென்றே தோட்டகத்தார்
சொந்தமான வாழ்க்கை உலகினில் துய்ப்பதெப்போ(து)
சிழுடைந்த புண்ணில் பசிதீர்க்க அட்டைவேறு
கூழைத்தா என்றவுடன் கூற்றமே வந்துநிற்கும்
பாழடைந்து போனர் குறைதீர்க்க யாருமில்லை
வாழையடி வாழையாக வந்ததே இக்கொடுமை
ஆண்களே பெண்ணின் அயற்கரம் கண்டீரே
வீணர்களாய் வெற்று வினைவாகி நிற்பதேன்
தூண்களாய் நின்றிட்டால் உற்ற துயரெல்லாம்
பாண்கிணற்றில் போந்திடும் உண்மை.

## தேர்தல் கூட்டம்

நாகசேனையைச் சேர்ந்த மீனுக்கொல்லை தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் கழகத்தின் சார்பில், இ. தொ. க. துணைத் தலைவர் திரு. ரெ. ம. இராமையா அவர்கள் தலைமையில் தோட்டக் கமிட்டித் தேர்தல் கூட்டம் கடந்த 17-5-64 அன்று நடைபெற்றது. மலையகத் தமிழர்கள் ஒன்றுபடின் ஏற்படும் நன்மைகள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. மற்றும் துணைச் செயலாளர் திரு. எல்லாளன், மாவட்டப் பிரதிநிதி சோமசுந்தரம் ஆகியோரும் பேசினார்கள்.

திரு. கந்தசாமி தலைவராகவும் திரு. செல்லையா செயலாளராகவும், திரு. சாமிவேல் பொருளாளராகவும், மற்றும் பதின்மர் குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## காப்புறுதி பிரசுரத்தில் தமிழ் மறைந்தது

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மாதாமாதம் வெளியிடும் பிரசுரம் இதுகாலவரை மூன்று மொழிகளிலும் வெளி வந்தது. அந்தப் பிரசுரம் திடீரெனச் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே வெளிவர ஆரம்பித்துவிட்டது. தமிழ் இடம் பெறவில்லை.

இத்தாபனத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் பேராதரவு அதிகமாகக் கிடைத்து வருகிறது; கொழும்பைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைக் கணக்கிடும் போது யாழ்ப்பாணத்தில்தான் இத்தாபனத்துக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. அப்படியிருக்கும் போது தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதை தமிழ் பேசும் மக்கள் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது நல்லதல்ல. இத்தாபனத்துடன் வைத்துக் கொள்ளும் தொடர்புகளைத் தமிழ் பேசும் மக்கள் துண்டிக்கும் நிலை வெகு சீக்கிரத்தில் வரும் என்று ஒரு பிரமுகர் நமது நிருபரிடம் கூறினார்.

## மலை நாடு

## 21 கோரிக்கையில் குடியுரிமை ஏன் இடம் பெறவில்லை?

—ஞா. பெ. அல்பிறெட், டிக்கோயா—

முன்னேை தொழிலாளர் சங்கங்கள் ஒன்றுகூடி விடுத்த இருபத்தியொரு அம்சக் கோரிக்கைகள் பின்னே மந்திரிபதவிகள் என்றதும் இருக்குமிடந் தெரியாமல் மறைந்துவிட்ட மர்மந்தான் என்னே! இடதுசாரியினர் இந்தப் பிரச்சினையெல்லாம் மறந்துவிட்டு மந்திரிப் பதவிச் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆகவே இத்தகையதொழிலாளத் தலைவர்கள், சுயநலங் கருதித் தொழிலாளரைக் காட்டிக் கொடுக்கவும் பதவிக்காக ஈடுவைக்கவும் தயங்கமாட்டார்கள் என்பதைப் பாட்டாளிமக்கள் உணர்ந்துவிட்டனர். ஆனால் மனைதத்திறந்துசொன்னால் தமிழ் மக்களுக்காகப் பாடுபடும் தமிழ்த் தலைவர்கள் மட்டும், மந்திரி பதவியென்ன இந்நாட்டு மன்னர் பதவியே கொடுத்தாலும் கூட மதிமயங்கமாட்டார்கள். தம்மை நம்பிய மக்களுக்குத் துரோகம் செய்து தன்னலமாக வாழவும் மாட்டார்கள். இது நான் மட்டும் சொல்லவில்லை. நாடும் ஏடும் கண்ட உண்மையாகும்.

சிறிமாவோ அம்மையார், தொழிலாளர் ஒத்துழைப்பு இன்றி நாட்டில் முன்னேற்றங் காண முடியாதென்பதை இப்போதுதான் உணர்ந்து கொண்டாராம். இவ்வளவு காலமும் தொழிலாளரின் ஆதரவின்றித்தான் ஆட்சி நடாத்திவந்ததாக எண்ணி இருக்கின்றாரோ!

இப்போதாவது பிறந்ததே இந்த 'ஞானோதயம்'. ஆனால் இன்று ஒரு சில மந்திரிப் பதவிகளைத் தலைவர்களுக்குக் கொடுத்துவிட்டு இந்நாட்டுத் தொழிலாளர் அனைவரையும் விலைக்கு வாங்கப்பார்க்கிறார்—

#### அந்தக் கோரிக்கை எங்கே!

'தொழிலாளர் எல்லாம் ஒன்றுசேர்ந்து 21 அம்சக் கோரிக்கைகளைப் பெறுவோம்' என்று தொண்டமான், அசீஸ் உட்பட கொண்டுவந்த கோரிக்கைகளுள், மலைநாட்டு மக்களின் ஜீவாதார உரிமைகளான பிரஜாவுரிமை, குடியுரிமையைப்பற்றி ஏதாவது ஒரு சொல்லாவது உண்டாவென்றால் இல்லை என்றே பதில் வரும். இந்த அமளியிலே இந்தத் தலைவர்கள் எல்லோரும் தமது தோட்டத் தொழிலாளருக்காகவும் பாடுபடுகின்றார்கள் என்பதைப் பாட்டாளி மக்கள் நம்புவார்களா?

#### உணர்ந்து பாருங்கள்!

அடிப்படை உரிமைகளான ஜீவாதார உரிமைகள் இல்லாமல் இருபத்தியாரு கோரிக்கைகளைமட்டுமல்ல இருபத்தியோராயிரம் சலுகைகளைப் பெற்றாலும் அவை பயன்படா.

வேர் இன்றி மரத்தைக் கேட்கிறார்களே, இதனால் யாருக்கு என்னபயன்? நமது இ. தொ. கழகத் தலைவர்கள் வேரோடல்லவா மரத்தைக் கேட்கிறார்கள்? வேரோடு உள்ள மரந்தான் உயிரோடு வாழ்ந்து உறுதியோடு வளர்ந்து மேலும் பல கனிகளைக் கொடுக்கும். பட்ட மரக்கிளைகள் எதுக்கு உதவும்?

மலைநாட்டுச் சிறார்களின் கல்வி விஷயமாக, இன்று வெட்டப் பூதம் கிளம்பியிருக்கிறதே. இந்தப் 'பூதத்திற்கு' (சிங்களம் மட்டும் தோட்டப் பாடசாலைகளில் போதனமொழி) மறைமுகமாகத் தூபமிட்டு எமது வருங்காலச் சந்ததியை அதற்குப்பலிகொடுக்க எண்ணியிருக்கும் இடதுசாரியினரை இன்னுமா நம்பி ஏமாறப்போகின்றீர்கள்!

#### ஒரு கொடி வேண்டும்

மொழிவழி பிரிந்து இனவழி பிரிந்து எமது குடியுரிமைக்காக, மொழியுரிமைக்காகப் பாடுபடுவோம் என்று சேருங்கள்! தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களாகிய நாம் தனித்தனியே பிரிந்து சென்று, சிங்கத்துக்கிரையான எருதுகளானோம்.

தங்கம்போல் சிறந்த தமிழ்த்தலைவர்கள்—பதவி மோகமற்ற பண்புள்ள தியாகிகள், சிங்கம்போலொத்தமனஉறுதிகொண்ட அறப்போர் வீரத்தளபதிகள் எங்களுக்காகப் பாடுபடும்போது, நாம் வேறு சங்கங்களில் சேர்ந்து சங்கடப் படலாகுமா?

இலங்கைத் தொழிலாளர் கழகத்தையும், அதன்கொள்கைகளையும் நீங்கள் இன்னும் அறியவில்லையா? எவ்வளவு சீக்கிரம் மூவர்ணத் தமிழ்க் கொடியின்கீழ் ஒன்றுபடுகின்றோமோ, அவ்வளவு சீக்கிரமே உரிமைகளைப் பெற்றுவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பாடு கேட்டால் துண்டு கேட்கிறார்கள்

## இராமேஸ்வரத்தில் அக்கினிதீர்த்தம் ஆடினோம்

**படம் பார்க்கப் போனால் துண்டு; பஸ்ஸில் பிரயாணம் செய்வதானால் துண்டு; ரயிலில் செல்லும் போது துண்டு; கோயிலில் அருச்சனை செய்யப் போனாலும் துண்டு. இப்போ சாப்பாட்டுக்கும் துண்டு எடுக்கவேண்டுமாம்! சர்வம் துண்டு மயம் ஜெகத். பரவாயில்லை சாப்பாட்டுக்குத் 'துண்டு சிஸ்டம்' வைப்பது ஒன்றுக்கு நன்மைதான்.**

**இராமேஸ்வரக் கோயில் அமைப்பிருக்குதே அதை வர்ணிக்கவே முடியாது. எவ்வளவு பிரமாண்டமான கோபுரம்! எத்தகைய தூண்கள்! எத்தகைய பிரகாரங்கள்! அப்பப்பா...........!**

இந்த அத்தியாயத்திலேயே நாம் அழகும், இனிமையும் மிக்க மதுரை மாநகர் செல்வதிற்கு மூட்டை முடிச்சுகளைக் கட்ட வேண்டியிருப்பதால், இந்த இராமேஸ்வரத்தை மிகச் சீக்கிரத்தில் ஒரு சுற்றுச் சுற்றி முடிக்க வேண்டியிருக்கின்றது. நேயர்கள் அதற்கு ஆயத்தம் செய்வார்களாக!

இராமேஸ்வரம் வந்த நமது பிரயாணக் கோஷ்டி, சத்திரத்தில் சாமான்களைப் போட்ட கையோடு தலை தெறிக்க ஓட்டம் பிடித்தது அல்லவா?

விஷயம் வேறொன்றுமல்ல; வயிறுதான் காரணம்.

டிசம்பர் 19ந் திகதி மத்தியானம் மட்டக்களப்பில் சாப்பிட்ட சாப்பாட்டோடு ரெயில் ஏறிய நமது கோஷ்டிக்கு 20-ந் திகதி இரவு பத்துமணிக்கு மேலாகியும் சாப்பாடு கிடைக்கவில்லையென்றால், ஆளுக்கொரு திக்கில் சாப்பாட்டுக் கடை தேடி அவர்கள் பறக்காமல் வேறு என்ன செய்வார்கள்?

### சாப்பாட்டுத் துண்டு

நமது 'கைடு' காண்பித்த ஒரு கடைக்குள் தாம் நுழைகின்றோம்.

சர்வரிடம் 'சாப்பாடு போடு' என்று சொல்லிவிட்டு, கீழே உட்காருகின்றோம்.

"துண்டைக் கொடுங்க ஸார்" என்கின்றான் ஹோட்டல் சர்வர்.

'துண்டா? ஏன் இலையில் சாப்பாடு பரிமாறக் கூடாதோ?' என்கின்றோம் நாம். 'கட கட' என்று சிரித்த சர்வர், "சாப்பாட்டை இலையில் தான் ஸார் பரிமாறுவோம், நான் கேட்ட துண்டு ஹோட்டல் துண்டு! அதாவது, ஹோட்டல் முதலாளியிடம் ஏற்கனவேயே பணம் கொடுத்து அரைச் சாப்பாடா? முழுச் சாப்பாடா? என்பதற்குத் துண்டு பெற்றுவர வேண்டும்! அந்தத் துண்டு எங்கே என்றுதான் கேட்கின்றேன்? துண்டு இல்லாமல் வருபவர்களுக்குச் சாப்பாடு பரிமாறக் கூடாதென்பது முதலாளியின் உத்தரவு!'

தமிழகத்தில் நாம் பிரயாணம் செய்த இடங்களிலெல்லாம் இப்படி ஒரு சங்கடம். நமது இலங்கைக் கடைகளில் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு எழுந்தவுடன் பில் தருகின்றார்கள். இங்கு சாப்பிட முன்னமேயே பில் தருகின்றார்கள்! ஒரு வகைக்கு இதுவும் ஒரு நல்ல ஏற்பாடுதான். நம் நாட்டு ஹோட்டல் முதலாளிகள் பின்பற்றக் கூடிய ஏற்பாடுதான். இந்த ஏற்பாட்டால், முன்னமேயே பணம் கொடாது சாப்பிட்டுவிட்டு யாரும் கம்பி நீட்ட வாய்ப்பு இல்லை அல்லவா?

அப்பளப் பொரியல், இரண்டு மரக்கறி, ஒரு சுண்டல் (வறுவல்) நெய், சாம்பார், மோர், ஊறுகாய் ஆகிய 'அநுமானங்களுடன்' சாப்பாடு வயிற்றுள் இறங்குகின்றது. இத்தனைக்கும் 50 நயா பைசா தான் செலவு.

நமது சாப்பாட்டு ராம 'மைனர்' மகாலிங்கம் உட்பட எல்லாரும் திருப்தியுடன் ஏப்பம் விட்டுக்கொண்டு, இருப்பிடம் வந்து சுகானுபவத்துடன் தூங்குகின்றோம்.

### மன்னர்களின் குரல்

அதிகாலை 6 மணிக்கெல்லாம் 'கைடு' வந்து நம்மை எழுப்பி, தீர்த்த மாடப் புறப்படும்படி சொல்கின்றான்.

அவன் சொற்படி, இராமேஸ்வரம் கோயிலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவிலுள்ள—முப்பத்திரண்டு தீர்த்தங்களில் முதலாவது தீர்த்தமான லக்ஷ்மணன் தீர்த்தத்துக்குச் செல்கின்றோம்.

வழியெல்லாம் இந்நாட்டு 'மன்னர்'களின் திருமுகங்களும்; அவர்கள் முழங்கும் 'தமிழ் நாட்டின் முதல் குரல்'களும் நம் கவனத்தை ஈர்த்து நம் நெஞ்சங்களை ஈரமாக்குகின்றன.

தீர்த்தத்தில் விழுந்து நம் உடலை ஈரமாக்க முன்னம், நம் உள்ளமெல்லாம் அவர்களைப் பார்த்ததில் ஈரமாகிவிடுகின்றன! நம்மை நோக்கி நீளும் அந்த நடுங்கும் கரங்களில் நம்மால் இயன்றவரை 'நம்பிக்கையை'—அதாவது நாணயங்களை இடுகின்றோம். நாணயத்துக்காக நாணயத்தை விடுத்து கை நீட்டும் அந்தத் துரதிர்ஷ்ட ஜீவன்களை மனத்தில் நிறுத்திக்கொண்டு புனித லக்ஷ்மண தீர்த்தத்தில் நீராடுகின்றோம்.

இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் அந்த ஏழைச் சீவன்கள் எத்தனை தடவைகள் தீர்த்தமாடியிருக்கும்! ஆனாலும் அவர்கள் பாபம் தொலைந்ததாய் இல்லை; வறுமை நீங்கியதாய் இல்லை; வயிறு குளிர்ந்ததாய் இல்லை!

ஒரு வேளை, இராமேஸ்வரம் என்ற இந்தப் புனித தலத்தைத் தேடிக்கொண்டு வடக்கே காசியிலிருந்து, தெற்கே ஈழம்வரை பக்தகோடிகள் என்ற உருவில் அவர்கள் செய்த புண்ணியம் தினசரிவந்து குவிந்து அவர்கள் வயிறுகளைக் குளிரப் பண்ணுகின்றதோ என்னவோ!

லக்ஷ்மண தீர்த்தத்தில் தீர்த்தமாடியபோது ஒரு வேடிக்கையும் நடந்தது.

தீர்த்தமாட நம்மை அழைத்துவந்த 'கைடு' நேரே நம்மை ஒரு வேதியரிடம் கொண்டுவந்து நிறுத்தினன்.

தீர்த்தமாடு முன்னர் செய்யவேண்டியகிரியைகளை அந்த வேதியர் எங்களுக்குச் செய்யஆயத்தமானர். படித்துறையில் எம்மை உட்கார வைக்கிறர்.

திருச்சி ரயில் நிலையத்தில் அரைத்தூக்கம் போட்டுக்கொண்டு, பின்னல் பொலீஸ்காரனுல் நட்ட நடு நிசியில் துயில்கலைக்கப் பட்டாரே நடராஜா—அவரும்இப்போ படித்துறையில் மிக வசதியாக அந்த அந்தணரின்முன்னல் உட்கார்ந்து கொள்ளுகின்றர்.

•

நம் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு 'தர்ப்பை'யைத் தந்து விரலில் போட்டுக் கொள்ளும்படி கூறுகின்றர் பிராமணர்.

அப்படியேசெய்கின்றோம். இன்னும் என்னென்னவெல்லாமோ செய்யச் சொல்கின்றர் அவர். கைகள் இரண்டையும் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வலப்பக்கத் தொடையில் வைத்துக்காட்டுகின்றர். நாமும் வைக்கின்றோம். பிறகு இடப்பக்கத் தொடையில் வைக்கின்றான். நாமும் அப்படியே செய்கின்றோம். மூக்கின்வழியே சுவாசத்தை உள் இழுத்து விரல்களால் மூக்கைப் பிடித்துக்கொண்டு, 'பிராணுயாமம்' செய்கின்றர். நாமும் பின்பற்றுகின்றோம்.

### சொறி சொறி சொறி

இப்படியே நம்முடன் சேர்ந்து அந்தணரை பின்பற்றிக்கொண்டுவந்த நமது நடராஜாவுக்குத் திடீரென்று என்ன நேர்ந்தது? இதோ காலைச் சொறிகிறரே! முதுகை வளைத்து நெளித்துக்கொள்வது மல்லாமல், சொறி சொறிஎன்று நகத்தால் சொறியவும் செய்கின்றரே!

சந்தேகம் தட்டிய நாம், எதிரே இருந்த பிராமணனைப் பார்க்கின்றோம். என்ன விந்தை; பிராமணரும் தன் முதுகைச் சொறிந்துகொண்டிருக்கின்றரே!


விஷயம் இப்போதுதான் [illegible] கொண்டுவந்த பிராமணருக்குத் திடீரென்று காலில் அரிப்பு எடுத்திருக்கின்றது. உடனே அரிப்பு எடுத்த இடத்தில் சொறிந்துவிட்டிருக்கின்றர். சற்றுநேரத்தில் முதுகிலும் அரிப்பு எடுத்திருக்கின்றது. முதுகை நெளித்து அரிப்பு ஏற்பட்ட இடத்தில் சொறிந்திருக்கின்றர்.

பிராமணர் செய்வது போல் இதுவரை செய்து வந்த நமது நடராஜா,அவர் அரிப்பு எடுத்துச் சொறிந்ததையும் ஏதோ ஒரு கிரியை என்று எண்ணிக்கொண்டு சொறி சொறி என்று சொறிந்து தள்ளியிருக்கின்றர்.

விஷயம் புரிந்ததும் நடராஜா உட்பட எல்லாரும் 'கட கட' என்று அவுட்டுச் சிரிப்புச் சிரித்து விடுகின்றோம்.

'தானறியாச் சிங்களம்தன் பிடரிக்குச் சேதம்' என்பார்கள். 'தானறியாச் சமயக் கிரியை தன் முதுகுக்குச் சேதம்' என்றபுதுமொழியையும் அத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்!

இராமேஸ்வரத்திலுள்ள முப்பத்திரண்டு புண்ணிய




### (8)

தீர்த்தங்களிலும் தீர்த்தமாடி முடிக்கின்றோம். 'துணிந்து இனிப் பாவம் செய்யலாம்' என்ற துணிவு நமக்கு ஏற்படுகின்றது!

இந்த 32 தீர்த்தங்களில் 'அக்கினி தீர்த்தம்' என்றும் ஒன்று இருக்கின்றது. பெயரைக் கேட்டதும் முதலில் சற்றுக் கலக்கம் ஏற்படுகின்றது நமக்கு. 'நெருப்பைஅள்ளித் தலையில் கொட்டிக் கொள்ள வேண்டுமோ?' என்று நமது பிரயாணக் கோஷ்டி கலக்கம் அடைகின்றது.

'இந்தச் 'சுள்' ளென்ற வெயிலில் 'அக்கினித் தீர்த்தம்' எதற்கு?' என்று கேட்கின்றான் கோபால்.

'அப்படிப் பார்க்கமுடியுமா? நாம் செய்த—செய்யப்போகும் பாபங்கள் தொலையவேண்டாமா? 'அக்கினி தீர்த்தம்' ஆடித்தான் தீரவேண்டும்' என்கின்றோம் நாம்.

'யாரும் பெயரைப்பார்த்துப் பயந்து விடாதீங்க ஸார்! பெயர்தான் அக்கினியே தவிர; தீர்த்தம் என்னவோ உப்புத்தான்! பேசாமல் என் கூடவாங்க ஸார்' என்று அழைக்கின்றான் 'கைடு.'

பின்னல்இழுபட்ட நம்மை நேரே கடற்கரை ஓரமாகக் கொண்டுவந்துநிறுத்தி, இது தான் ஸார் 'அக்கினி தீர்த்தம்!' என்கின்றான் 'கைடு.'

### 'அன்னை' படத்தில்......

உப்புத் தண்ணீரை அள்ளித்தலையில்தப்பிக்கொள்ளுகின்றோம் நாம்.

'இந்த இடத்தை முன்னம் எங்கோ பார்த்த மாதிரி இருக்கின்றதே' என்ற சந்தேகமொன்றைஎழுப்பினன் அதுவரை வாய் திறவாமல் வந்த வர்ணன்—நாம் தீர்த்தமாடிய இடத்தைக்காட்டி!

'பார்த்திருப்பீங்க ஸார்! பார்த்திருப்பீங்க! 'அன்னை' படத்திற்காக பானுமதியையும், ரங்கராவையும் இந்த இடத்தில் நிறுத்தி 'ஷூட்டிங்' நடத்தினங்க' என்றான் கைடு.

நமக்கும் அப்போதுதான் 'அன்னை'யில் நாம் பார்த்த கட்டம் நினைவுக்கு வருகின்றது. வர்ணனின் 'சினிமா மூளை' யைப் பாராட்டிவிட்டு ஆலயத்துள் நுழைகின்றோம்.

### ஆலயமா இது?

அம்மாடி! ஆலயமா இது? வானைத்தொட்டு நிற்கும் அந்தக் கோபுரத்தை அண்ணாந்து பார்க்கவே நம்கழுத்துக்கு வலுவைக்காணோமே! ஆலயத்தின் உள்ளே நுழைந்தால் அதைவிட ஆச்சரியம். கொழும்பு நகரில் வழிமாறுவதுபோல் இங்கும் வழி மாறித்தட்டுப்பட வேண்டியிருக்கின்றதே! எத்தனை எத்தனை கற்றூண்கள்! எத்தனை எத்தனை விசாலமான பிரகாரங்கள்!ஒன்று...இரண்டு.. ...அம்மாடி! ஒன்பது பிரகாரங்கள்! ஒரு பிரகாரத்தைச் சுற்றுவதற்குள் கால் கடுக்கத் தொடங்கிவிட்டதே!வெளியிலானல் வானுயரும் கோபுரம் கழுத்தை முறிக்கின்றது! உள்ளேயானல் நீண்ட பிரகாரங்கள் கால்களை முறிக்கின்றன! அதோ...அதோ வழியை மறைத்து நிற்கும் மலை போன்ற நந்திதான் எத்தனை பெரியது! அதைத் தாண்டி உள்ளே சென்றால் ஸ்ரீ இராமபிரான் வாங்கிய சிவலிங்கம்தான் எத்தனை கவர்ச்சி! எதைப்பார்ப்பது? எதை விடுவது?

இராமேஸ்வரத்திலுள்ள எத்தனையோ அதிசயங்களில் இவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

'இராமேஸ்வர வீதிகளில் ஒரு காரையோ சைக்கிளையோ காணமுடியாது!'

கடல் ஓரங்களில் சிதறிக்கிடக்கும் சிப்பிகளைக் கொண்டும், சங்குகளைக் கொண்டும் அவர்கள்செய்திருக்கின்ற ஜாலவித்தை கணக்கிலடங்கா!

இராமேஸ்வரத்தில் நமக்கு ஒத்தாசையாக இருந்த 'கைடு' வுக்கும்,இராமேஸ்வரநாதனுக்கும்வணக்கம் கூறி விடைபெற்றுக் கொண்டு, மதுரைசெல்லத் தயாராகின்றோம் நாம். மதுரையில் நமக்காகப் பல அதிர்ச்சிகள் 'கியூ' வரிசையில் காத்திருக்கின்றன!......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 மே மாதம் 31-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## சமாதானச் சுடரொளி அணைந்தது!

நாற்பது கோடி இந்திய மக்களையும் திடீரெனக் கைவிட்டு அமரராகிவிட்டார் நவ பாரதத்தின் சிற்பி நேரு பெருமான். ஆம், ஆசியாவின் சுடரொளி அணைந்துவிட்டது — ஒரு மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திவிட்டார்.

இத்துயரச் செய்தி கேட்டுப் பாரே அதிர்ந்தது. சமாதானத்துக்காக அயராது உழைத்த உலகத் தலைவரை இழந்து உலக மாந்தர் கண்ணீர் வடிக்கின்றனர். ஒப்பற்ற மாபெரும் தலைவரைப் பறிகொடுத்துப் பாரதம் துயரில் மூழ்கித் தவிக்கிறது. உத்தமத் தலைவர்களையும், தியாகமூர்த்திகளையும் உலகிற்குத்தந்த பாரத அன்னை தன் தவப்புதல்வனின் மறைவால் அழுது புலம்புகிறாள்.

நேருவுக்கு நிகர் நேருவே. இந்தியாவே நேரு. நேருவே இந்தியா. இந்தியாவிடமிருந்து நேருவைப் பிரித்துப் பார்த்தல் சாத்தியமன்று. நேருவின் வாழ்வே இந்தியாவின் வாழ்வு. நேரு இல்லாத இந்தியாவைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போதே உள்ளம் நடுங்குகிறது.

தாய்நாட்டின் விலங்கொடித்து விடுதலைப்போருக்கு அன்று தலைமை தாங்கினார் இப்புரட்சி வீரன். விடுதலைப் போராட்டத்திலே தடியடி பட்டார். விலங்கிடப்பட்டுத் தெருவிலே இழுத்துச் செல்லப்பட்டார். பன்முறை சிறைக்குள் தள்ளப்பட்டார். மொத்தம் 16 ஆண்டுகள் சிறைவாசம் செய்தார். இன்னும் எத்தனையோ தியாகங்களைச் செய்தார். தியாக நெருப்பிலே புடம் போட்டெடுத்த பத்தரை மாற்றுத் தங்கம் நேரு. ஆகையால்தான், "ஜவஹர் உலக மாந்தருள் ஒரு மாணிக்கம்" என்றார் காந்தி அடிகள்.

நாடு விடுதலை பெற்ற பின்னர் புதிய பாரத சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அதைவிடப் பன்மடங்கு வேகத்துடன் உழைத்தார். உழைத்தார் உழைத்தார் இறுதி மூச்சுள்ளவரை உழைத்தார். சர்ச்சிலைப் போல சில ஆண்டுகளுக்கு முன்பே அவர் ஓய்வு எடுத்திருந்தால் இவ்வளவு விரைவில் அவரை இழந்திருக்க மாட்டோம்.

உலகிலேயே மாபெரும் ஜனநாயக நாடாகஇந்தியாவைக் கட்டியெழுப்பியவர் புதுமைச் சிற்பி நேருவே. அவருக்கு ஜனநாயக சோஷலிசத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. சுதந்திரம் பெற்ற பின்னர் இதர நாடுகளில் ஏற்படுவதைப் போல நிலையற்ற அரசியற் தன்மை இந்தியாவில் தலைகாட்டவில்லை. நேருவின் மகத்தான தலைமையே அதற்குக் காரணம். கடந்த 17 ஆண்டுகளில் இலங்கையில் 6 பிரதமர்களும், பிரிட்டனில் 4 பிரதமர்களும் பதவிக்கு வந்துள்ளனர். ஆனால் இந்தியாவிலோ தொடர்ந்து நேருவே தலைமை தாங்கினார். பாரதத்தின் நிலையான ஆட்சிக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

உலக சமாதானத்துக்காக அயராது உழைத்தவர் நேரு. அவரது மறைவு பாரதத்துக்கு மட்டுமின்றி உலகத்துக்கே பேரிழப்பாகும். எந்தப் பிரச்சினையையும் சர்வதேசியக் கண்ணோட்டத்திலே ஆராயும் ஆற்றல் மிக்க பாரதப் பிரதமரின் ஆலோசனைகள் உலக சமாதானத்தை நிலை நாட்டப் பெரிதும் உதவின. உலக நெருக்கடிகளின் போது அவர் தெரிவிக்கும் கருத்துகளுக்கு அயல் நாடுகளில் பெருமதிப்பு அளிக்கப்பட்டது.

உலக அரங்கிலே மண்டல சார்பற்ற நடுநிலைமைக் கொள்கையை நிலை நிறுத்தியது நேருவின் மாபெரும் சாதனைகளிலொன்று. யுத்தத்தைத் தவிர்த்து உலக சமாதானத்தைக் காக்க இக்கொள்கை பெரிதும் உதவியுள்ளது. இவ்வுலகில் இதற்கு நிகர் வேறொன்றுமில்லை.

பஞ்சசீலக் கோட்பாட்டின் பிதாவும் பாரதப் பிரதமரே. இக்கொள்கையைப் பாரதம் என்றுமே மீறியதில்லை. இக்கோட்பாட்டின் அடிப்படையும் உலக சமாதானமே.

இந்தியாவின் சுதந்திரச் சிற்பிகளான மும்மூர்த்திகளும் (காந்தி, போஸ், நேரு) மறைந்துவிட்டனர். நேருவின் மறைவுடன் பாரதத்தின் ஒரு சகாப்தமே முடிந்துவிட்டதென்றே கூறலாம், பழைய சுதந்திரப் போராட்டத்தலைவர்களின் வரிசை நேருவுடன் முடிந்துவிட்டது.

நவபாரதத்தின் சுடரொளி அணைந்துவிட்டதெனினும், அவரது திருநாமம் பாரத மக்களின் உள்ளங்களில் என்றென்றும் பசுமையாகவே இருக்கும், நேருவின் மகத்தான சாதனைகளையும், உயர்ந்த ஜனநாயகக் கோட்பாடுகளையும் மென்மேலும் வளர்த்து, சுபீட்சத்தையும் சமாதானத்தையும் நிலை நிறுத்தும் சீரிய பணியிலே நாற்பது கோடி பாரத மக்களுக்கும் அவரது நினைவு குன்றின் மேலிட்ட தீபம் போல் வழி காட்டும் என்பதில் ஐயமில்லை.

மாபெரும் தலைவரையும், வழிகாட்டியையும் இழந்து தவிக்கும் பாரதப் பெருங்குடி மக்களின் துயரத்தில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களும் பங்கு பற்றுவதோடு, அமரர் நேரு பெருமானுக்கு தங்களின் இதயபூர்வமான அஞ்சலியையும் செலுத்துகின்றனர்.

வாழ்க நேரு நாமம்!

# தியாக வீரர் நேரு

## அவரின் வாழ்வு நமக்கு வழிகாட்டும்

தியாக வாழ்வுக்கு என்றே தன்னை அற்பணித்துக் கொண்டார் நேரு. அவரே பாரதத்தின் விடுதலைக்கு முப்பது ஆண்டுகள் போராட வேண்டியிருந்த தென்றால், நாம் ஒரு சில ஆண்டுகளுக்கிடையில் விடுதலை கிட்டவில்லை என்று சோர்வடைவது கூடாது. விடுதலையை நாடும் ஒவ்வொரு இனத்திற்கும் நேருவின் வாழ்க்கை வரலாறு வழி காட்டி. உலகில சுதந்திர இயக்கங்கள் எங்கு நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் நேருவின் நாமம் வாழும்.

இவ்வாறு வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் ஜவஹர்லாலின் மறைவையொட்டி சுதந்திரனுக்கு எழுதிய விசேட கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரை வருமாறு:

பாரதநாட்டின் கோடிக்கணக்கான உள்ளங்களில் மாத்திரமல்ல உலகெங்குமுள்ள உரிமை மறுக்கப்பட்ட உள்ளங்களில், குறிப்பாக அடிமைப்பட்ட நாட்டு மக்களின் உள்ளங்களில் குடியிருக்கும் உருவம் பாரதப் பிரதமர் நேருவுடையதல்ல சுதந்திரப் போர் வீரன் நேருவுடையதாகும். நேருவுக்கு உலகில் அழியாப் புகழை அளிப்பது பதினேழு ஆண்டுகளாக அதிகாரத்திலிருந்து சாதித்த காரியங்களிலும் பார்க்க, முப்பது

**அ. அமிர்தலிங்கம் பா. உ.**

ஆண்டுகளுக்கு மேலாகத் தாய்நாட்டின் அடிமைத்தளையை அறுக்க அவர் ஆற்றிய சேவையேயாகும். மூட நம்பிக்கைகளும் மத வெறியும் சாதித் திமிரும் தலைதூக்கி நின்ற இந்தியாவில் அவற்றைச் சாடும் ஒரு போர் வீரனாக நேரு விளங்கினார். பகுத்தறிவுப் பாதையில், விஞ்ஞானத்தின் துணைகொண்டு, சோஷலிச இலக்கை நோக்கி முன்னேறும் நாடாகப் பாரதத்தை மாற்றியமைத்த சிற்பிகளின் முதல்வர் நேரு என்று கூறினால் மிகையாகாது.

### நேரு இல்லாத இந்தியா......

இந்தி மொழி வெறியர்களின் தீவிரத்தையும் பெருமளவு மிதப்படுத்திக் கொண்டு நின்ற சக்தி நேருவினதேயாகும். அவர் இல்லாத பாரதத்தில் இந்தி வெறியைக் கட்டுப்படுத்தக் கூடிய தலைவர்கள் தோன்றாவிட்டால் பாரதத்தின் ஒற்றுமையே சிதையக் கூடிய பேராபத்து ஏற்படலாம். இந்தி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் மத்திய ஆட்சியில் ஆங்கிலமும் இடம் பெறும் என்ற நேருவின் கொள்கையை வழுவாது கைக்கொள்ள வேண்டியது இந்தியாவின் ஒற்றுமைக்கு அத்தியாவசியமாகும்.

### நமக்கு நட்டம்

காந்தியடிகளின் தலைமையில் வீரன் ஜவஹர்லால் போன்றோர் நடத்திய சுதந்திரப் போரின் விளைவாகவே இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. இந்தியாவின் தலைவிதியோடு பிரிக்க முடியாத விதமாகப் பின்னப்பட்டிருக்கின்றது இலங்கையின் தலைவிதி என்ற உண்மையை அறியாத இலங்கை அரசாங்கம் இந்தியாவைச் சீனு தாக்கிய நேரத்தில் இந்தியாவின் பக்கத்தில் நிற்கத் தவறியது. ஆயினும் நேருவின் மரணத்தால் பாரதத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் இலங்கையையும் வெகுவாகப் பாதிக்கும். [illegible] இலங்கையில் வாழும் இந்திய பரம்பரையைச் சேர்ந்த மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கறிந்த இந்தியத் தலைவர் நேருவேயாகும். இப்பிரச்சினை தீருமுன் அவர் மறைந்தது இலங்கைக்கும் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கும் பெரு நட்டமாகும்.

### அவரின் வாழ்க்கை வழி காட்டும்

தியாக மார்க்கத்தில் தன்னை அர்ப்பணித்த நேரு போன்ற தலைவர்களின் வாழ்க்கையிலிருந்து இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தமது அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டிய ஊக்கத்தையும் உள்ள உறுதியையும் பெற வேண்டும். அவரே முப்பது வருடங்களுக்கு மேலாகப் போராட வேண்டியிருந்த தென்றால் நாம் ஒரு சில ஆண்டுகளுக்கிடையில் சுதந்திரம் கிடைக்கவில்லை என்று சோர்வடையக் கூடாது. விடுதலையை நாடும் ஒவ்வொரு இனத்திற்கும் நேருவின் வாழ்க்கை வரலாறு வழி காட்டும். அவரது உணர்ச்சியும் துடிப்பும் ஆர்வ மூட்டும். உலகில் சுதந்திர இயக்கங்கள் எங்கு நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் நேருவின் நாமம் வாழும்.

# பிறந்த நாள்

அன்பார்ந்த
வாசகர்களுக்கு,

இவ்விதழில் தனது 18வது வயதைத் தொடங்கும் உங்கள் அன்புக்குரிய 'சுதந்திரன்' பத்திரிகை வாழ்த்துக் கோரி நிற்கிறது. வாழ்த்துக் கோரும் அதே நேரத்தில் மனிதருள் மாணிக்கம், ஆசியாவின் சோதி, அகிலத்தின் ஒப்பாரும் மிக்காரும் அற்றதலைவன், சமாதானத்தின் தூதுவன், பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவை நாம் இழந்துவிட்ட-உள்ளமெலாம் இருள் மண்டிக் கிடக்கும்-சோக நிகழ்ச்சியை -விழியிலே நீர் மல்க-சுமந்து கொண்டு உங்கள் முன் வருகிறான் சுதந்திரன். அவனின் துன்பத்தைத் துடைத்து ஆறுதல் கூறி; அவனுக்கு பிறந்த நாள் வாழ்த்தும் கூற வேண்டியது உங்கள் தலையாய கடனாகும்.

இந்த 17 ஆண்டுகளாக சத்தியமார்க்கத்திலிருந்து சிறிதும் பிறழாமல் கொள்கைக்கு என்று போராடிய பெருமிதம் சுதந்திரனுக்கு உண்டு. தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலாக காலமெல்லாம் ஒலிக்கும் சுதந்திரனுக்கு சிங்கள ஆதிக்க வெறி பிடித்த வகுப்புவாத அரசு அடக்கு முறையென்ற அநாகரிகச் சட்டத்தை நீட்டி அவன் வளர்ச்சியை மட்டந்தட்ட பல முறைகள் முனைந்துள்ளன. என்றாலும் அவற்றையெல்லாம் வெற்றியுடன் தாண்டி தனது கடமையைச் செவ்வனே செய்து வருகிறான்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலாக இந் நாட்டில் ஒலித்துக்கொண்டிருக்கும் ஒரே ஏடான சுதந்திரன், அவர்களின் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக் கலந்துவிட்டது. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு -விமோசனத்திற்கு எது தேவையோ அதையே தனது சேவையாகக் கொண்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் விடுதலை வாழ்வுக்கு குந்தகம் விளைவிப்போரைச் சாடி சந்தியில் இழுத்து நிறுத்தும் அதே நேரத்தில், இனத்தின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்பவர்கள், அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் சேவையையும் பாராட்டத் தவறியதில்லை.

அரசியலில் ஆன்மிகத்தைக் கலந்து நேர்மையுடன் விடுதலைப் போரின் மத்தியில் நிற்கும் தமிழ் பேசும் தேசிய இனத்தின் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தையும் அவர் வழியையும் சுதந்திரன் பணிகிறது.

தொழிற் சங்க உலகில் தமிழ் பேசும் தொழிலாளர்களின் துயர் துடைக்க உள்ளச் சுத்தியுடன் முனையும் இயக்கங்களுக்கு தன்னால் இயன்ற பணியினை செய்து வருகிறது. குறிப்பாக மொழிவழித் தொழிற் சங்கங்களின் நோக்கங்களை பிரதிபலிக்கிறது சுதந்திரன். மொழிவழித் தொழிற் சங்கம் தோன்றிய இந்தக் குறுகிய காலத்தில் இருபதுக்கு மேற்பட்ட துறைகளுக்கு இப் புதிய தத்துவம் விரிவடைந்துள்ளது. இதில் சுதந்திரனுக்கும் பங்குண்டு. இத் தத்துவத்தின் வளர்ச்சி கண்டு சுதந்திரன் பூரிப்படைகிறது, பெருமைப்படுகிறது.

தமிழ் இலக்கிய, கலை, கலாச்சார வளர்ச்சிக்கும் தன்னாலியன்ற பணியினை மரபு வழிநின்று அவ்வப்போது செய்து வருகிறது. புதுமை இலக்கிய வளர்ச்சியில் சுதந்திரனின்பணி மகத்தானது என்பது பலர் அறிந்து ஏற்றுக்கொண்ட உண்மை. வாய்மொழி இலக்கியமாகிய கிராமிய இலக்கிய வளர்ச்சிக்கு நிரந்தரமான களம் அமைத்த பெருமை சுதந்திரனையே சாரும். தமிழ்பேசும் இனத்தின் ஒரு முக்கிய அங்கமாகிய முஸ்லிம்களின் மதவழிசார்பு இலக்கிய வளர்ச்சிக்கு சுதந்திரன் ஆற்றிய, ஆற்றிவருகின்ற பணி மிகப் பெரியது.

கடந்த ஆண்டு ஈழத்து இலக்கிய அரங்கில் ஒரு புது முயற்சியாக இரு பல்கலைக் கழக மாணவ எழுத்தாளர்களைக்கொண்டு 'நிழல்' என்னும் தொடர் நவீனத்தை வழங்கினோம். எழுத்தாளர்கள் என்று கூறிக்கொண்டு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூன்-5

ஈழவள நாட்டின் மூத்த குடியினர் என்று மார்தட்டி வாழச் சகல அருகதையும் உடைய இனம், இன்று தாழ்வுற்று; தக்கதோர் நிலைகெட்டு, வாழும் வகையறியாது வேற்று இனத்தின் சலுகைகளுக்காக கையேந்தி நிற்கும் நிலையினை அடைந்துவிட்டது.

பாருக்கு நாகரீகத்தை வழங்கிய பெருமை பெற்றதாகப் பண்டுதொட்டு புலவர்களும், வரலாற்று ஆசிரியர்களும் புகழவாழ்ந்த ஒப்பற்ற சமுதாயம் இன்று இலங்கையில் கடைகெட்ட சாதியாக்கப்பட்டு விட்டது.

ஐயிரண்டு திசையும் புகழ் மணக்க எழிலுடன் ஆண்ட இராவணனின் வம்சாவழியினர் இன்று இருக்க இடமின்றி ஏங்கும் நிலையினை அடைந்துவிட்டனர்.

இன்றைய இலங்கையின் இனிமைத் தோற்றத்துக்கும் செழிப்புக்கும், சிறப்புக்கும், சிங்கார வாழ்வுக்கும் செல்வக் கொழிப்புக்கும் செந்தமிழர்களே பெரும் உதவிகளைச் செய்தனர். செய்நன்றி கொன்ற கூட்டம் சிறுமைக்கிடம் கொடுத்து செந்தமிழை அழிக்கச் சதித்திட்டம் தீட்டிற்று.

அந்தச் சதியில் உருவானதுதான் 'சிங்களம் மட்டும்' எனனும் கொடுஞ் சட்டம்.

இந்நாடே எம் வீடு. இங்கேயே பிறந்தோம். இங்கேயே வாழ்கின்றோம். வேறெங்கோவிருந்து வந்தவர்களல்ல. வீரத்தைக் காட்டி, வீணரை வீழ்த்தி, விழுப்புண்களைப் பெற்று வெற்றிக் கொடி பிடித்து வரலாறு சமைத்தோம் அன்று. ஆனால் வடக்கிலிருந்து, வஞ்சனை பல புரிந்து வழி தப்பி வந்த கூட்டத்தின் வழித் தோன்றல்கள் இன்று வஞ்சகத்தால் வலை செய்து வீழ்த்தி விட்டனர். சட்டம் என்னும் தூண்டிலிலே எம்மை சிக்கவைத்து வேடிக்கை பார்க்கின்றனர்.

### கறை படிந்தது

1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி இலங்கையின் சரித்திரத்தில் கறைபடிந்தது. ஆளவந்தார் பதித்த கருமைக் கறையுடன், நாம் பொறித்த செம்மைக்கறையும் சேர்ந்து சரித்திர ஏடுகளில் கருமையுடன் சேர்ந்த செம்மையினைத் தீட்டியிருக்கிறது.

இந்நாட்டில் மனித வாழ்வைக் கொடுத்த தமிழ் பேசும் மக்களை—

இந்த நாட்டின் வளத்தைப் பெருக்கியவர்களை—

இந்நாட்டின் வரட்சியைப் போக்கி, பசுமைக்கும் பெருமைக்கும் வழி தேடியவர்களை—

வற்றாத செல்வத்தை வாரி வழங்கும் ஊற்றுக்களைத் திறந்துவிட்டவர்களை-

நாகரீகத்தின் அடிப்படையை இந்நாட்டுக்கு நல்கிய நல்லவர்களை—

கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை இலங்கைக்கு இறைத்தவர்களை—

இங்கு வாழ உரிமையற்றவர்கள், உடமை எதுவும் இல்லாதவர்கள், வேற்று மொழி பேசும் விதேசிகள், என்று விரட்டி அடிக்கவல்ல சட்டம்தான் இந்தச் சிங்களம் மட்டும் சட்டம்.

இந்நாட்டின் சகோதரத்துவ சமத்துவ சகவாழ்வினை நாசம் செய்ய வந்தது அச்சட்டம்.

சிங்கள மொழி பேசுவோர்—தமிழ் மொழி பேசுவோர் ஆகியோரிடம ஒரு சில காலமாவது நிலவிவந்த ஒற்றுமைக்கு வேட்டு வைத்தது அச்சட்டம்.

'சிங்களம் மட்டும்' என்று கூறி நாட்டைச் சின்னா பின்னமாக்கிய சட்டத்தினை நிறைவேற்றினர்கள் ஆளவந்தார். ஆனல் அன்றே இந்நாட்டின் நாசத்துக்கு வழி வகுத்தார்கள் என்பதை இன்னும்தான் அவர்கள் உணரவில்லை. உணர்ந்தாலும், அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாது தவிக்கின்றனர்.

### இருட்டறைக்குள்...

நாட்டுக்கு நன்மைபயக்கவல்ல சட்டம் இயற்றப்படுங்காலத்தில், நாட்டு மக்கள் அதை வரவேற்று ஆனந்தக் கூத்தாடுவது வழக்கம். ஆனல் சிங்கள மட்டும் சட்டம் இயற்றப்பட்டவேளை பாராளுமன்றத்தின் கதவுகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. பொது மக்களின் நிழலே மக்கள் மன்றத்தில் படுவிடக் கூடாது என்று பெருவேலி எழுப்பப்பட்டிருந்தது. எந்த நபராவது தென்படாமலிருப்பதற்காகப் பொலீசாரும் இராணுவத்திவரும் ஆயுதந்தாங்கிக காவல் புரிந்தனர்.

அடிமையாக்க வரும் சட்டத்தை அகிம்சை முறை கொண்டு எதிர்க்கச் சென்ற தமிழ் பேசும் மக்களின் தலைவர்களும் தொண்டர்களும் அன்றையக் காலைக் கதிரவனுக்குத் தங்கள் பச்சை இரத்தத்தைப் படைத்தனர்.

மொழிவெறியில் திளைத்து அரக்கர்களுக்குச் சமமாக உருவாக்கப்பட்டவர்கள் பலர் சத்தியப் போர்ப் படையை தாக்க ஆரம்பித்னர். அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் அடியும் உதையும் வாங்கி அசையாது நின்று, அறங்காத்தனர்.

அன்றுதான் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பமாகியது.

### ஆர்ப்பரித்தனர் அடங்கினர்

மொழிக்காக, இனத்துக்காகப் போராட வேண்டும் என்ற ஆர்வம் அன்றேதான் தமிழ் பேசும் மக்களிடம் துளிர்த்தது. அன்று ஆரம்பித்த நமது மொழிப்போராட்டம் இன்னும் ஓயவில்லை.

ஆக எட்டு ஆண்டுகள்தான் நாம் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். சிங்களம் மட்டும் என்னும் கொடிய விதையில் உருவாகிய மொழித் திணிப்பு இன்று ஆலாகால, விருட்சமாக வளர்ந்து வருகிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தமிழ் பேசும் சமுதாயத்தை செல்லரித்துச் சீரழிக்க, வளரும் அம்மரத்தின் ஆணிவேரை அறுத்தெறியக் கங்கணங் கட்டிச் சூழுரைத்த வீர பரம்பரையினர் இன்று ஓரளவு சோர்வு கண்டுள்ளனர் என்பது உண்மைதான்.

சிங்களத்தை தீண்ட மாட்டோம் என்று வீராவேசக் குரல் கொடுத்த வீரத் [illegible] மல்கள் இன்று தங்கள் வீரத்தை விலைபேசி விற்று, வேலைக்குப் பங்கம் நேரிடாமல் வழி பார்க்க ஆரம்பித்துவிட்டனர் என்பது என்னவோ வாஸ்தவம்தான்.

எந்த உருவெடுத்து சிங்களம் புகுத்தப்பட்டாலும் அதை அக்குவேறு ஆணிவேருக்குவோம் என்று ஆர்ப்பரித்தெழுந்தவர்கள் தங்கள் ஆராவாரத்தையே அடக்கிக் கொண்டுவிட்டதை நாம் கண்முன்னே காணத்தான் செய்கிறோம்.

ஏன் இந்த நிலை தடுமாற்றம்?

நீதிக்காக நேர்மை வழிப் போர் தொடுத்தோர் இன்று நீறுபூத்த நெருப்பு போல் இருக்கின்றனர்.

புலி பதுங்குகிறது—பாயும் வேளை நெருங்குகிறது. என்பதுதான் அர்த்தம்.

உலகம் வியக்க உத்தமர் காந்தி வழியில் சத்தியாக்கிரகத்தை நடாத்தி சட்டத்தின் நடைமுறைகளை தாழிட்டு வைத்தவர்கள் அநீதிக்கு இலக்காகி அழிந்து விட மாட்டார்கள் என்பது திண்ணம்.

### திடசங்கற்பம் ஏற்போம்

கோடீசுவரனின் மொழி வழக்குத் தீர்ப்பு உலகக் கண்களுக்கு எமது உண்மை நிலையினை உணர்த்தியிருக்கிறது.

பொறுத்தது போதும் பொங்கி எழும் கட்டம் தினே தினே விரைகிறது. சோர்வு நிலை மாறி சுய உரிமைப் போர் தொடங்க ஜுன் 5-ம் திகதியினை சங்கற்ப தின மாக்கிக்கொள்வோமாக.

# பிறந்த நாள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இழிதொழில் செய்து வரும் பலரை 'நமக்குள்ளே நடப்பவையில்' காட்டினேம்.

தமிழ்பேசும் மக்களின் எதார்த்த நிலையை வைத்து படைக்கப்படும் உண்மை இலக்கியங்கள் (சிறு கதை, கவிதை) சுதந்திரனில் அவ்வப்போது வெளிவந்து——ஆபாச இலக்கியம் படைக்கும் போலி எதார்த்த வாதிகளைத் தலைகுனிய வைத்துள்ளது. அவர்கள் இலக்கிய உலகில் ஒரு சில காலம் செலுத்திவந்த ஆதிக்க முயற்சிகளைச் சுதந்திரன் வெற்றியுடன் முறியடித்துள்ளது.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் உண்மை உள்ளமை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் 'எப்படி எழுத ஆரம்பித்தேன்' பகுதி கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டும் தொடருகிறது.

வரலாற்று துறையிலும் சுதந்திரனே சிறந்த முறையில் பணிபுரிந்து வருகிறது. முற்றிலும் எழுத்துலகிற்குப் புதியவர்களானஇருவரைக் கொண்டு ஐரிஷ் நாட்டு விடுதலை வரலாற்றை தொடர்ந்து வழங்கினேம். ஏனைய நாட்டு விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தலைவர்கள் தெரிவிக்கும் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் அவ்வப்போது வழங்கிவந்துள்ளது சுதந்திரன்.

பிராயாண இலக்கிய வளர்ச்சியிலும் சுதந்திரன் தனது பணியைச் செய்யத் தவறவில்லை. பிரபல எழுத்தாளர் [illegible] அவர்களின் பிரயாணக் கட்டுரை இப்பொழுது தொடர்ந்து வருகிறது. இத் தொடர் முடிந்ததும் அடுத்து உலகத் தமிழ் மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ. அவர்கள் 'தமிழ் தந்த பயணம்' என்ற தலைப்பில் புதிய ஒரு பிரயாணக் கட்டுரைத் தொடரை எழுதுவார் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும் பல புதிய அம்சங்கள் இவ்வாண்டு வெளியாக இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விழைகிறோம். அது பற்றிய அறிவித்தல்கள் அவ்வப்போது வெளியாகும்.

# ஜவஹரின் மறைவு விடுதலை விரும்பிகளுக்கு ஓர் பேரிடியாகும்

## தொழிற் சங்கத் தலைவர்கள் விடுத்த அனுதாபச் செய்தி

பாரதப் பிரதமரின் மறைவு கேட்டதும் எமது உள்ளங்களில் ஏற்பட்ட அதிர்ச்சி சொல்லும் தரமன்று. உரிமை குன்றி விடுதலை வேண்டித் தினே தினே துடிக்கும் எமக்கு அவரின் கடந்த கால இலட்சிய வாழ்வு நல்ல வழி காட்டி மட்டுமல்ல தோன்ருத் துணையும் கூட அவரின் இழப்பு உலகின் எந்த மூலையிலும் விடுதலை வேண்டிப் போராடுபவர்களுக்கு ஓர் பேரிடியாகும்.

இவ்வாறு மொழிவழி பிரிந்த அரசாங்கத்துறைத் தொழிற்சங்கங்களின் கூட்டணியாகிய 'அரசாங்க தொழிற்சங்கக் கூட்டணி' யின் சார்பில் அதன்பொதுச் செயலாளர் திரு.செ. கோடீசுவரன் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசியல்வாதியாகிய இந்தியாவின் பிரதமர், நேருவின் மறைவு நம்மை இத்தனை தூரம் துயரக்கடலில் ஆழ்த்தியிருக்க முடியாது. அண்ணல் காந்தியின் அடுத்த வாரிசு, இந்திய விடுதலைக்கு தன்னைமுழுதாக அற்பணித்த விடுதலை வீரன் நேருவின் இழப்பே எம்மை இத்தனை தூரம் தாக்கியுள்ளது.

இலட்சியத்துக்காகத் தன்னை அற்பணித்த நேரு அந்த இலட்சியக் கனவு நனவாகி முழு உருப்பெற்று செயல்படுவதையும், அதைச் செயல் படுத்தும் பொறுப்பையும் பெற்ற அதிஷ்டக்காரர்.

நேரு வெறும் அரசியல் வாதியல்ல; சமவுடமைச் சமுதாயத்தை நவபாரதத்தில் அமைக்கவிளைந்த சிற்பியும்கூட.

அவரின் இழப்பு எம் போன்ற உரிமைவேண்டி நிற்கும் உழைப்பாளருக்கு பேரிடியும் பேரிழப்புமாகும்.

### இ. தொ. கழகம்

பாரத நாடு தனது தவப்புதல்வனை இழந்துவிட்டது. உலகமாத ஒரு சமாதான புருஷனை இழந்துவிட்டாள். தொழிலாளர் சமூகம் ஒரு சமவுடமைவாதியைஇழந்து விட்டது. சகல உரிமைகளும் இழந்து விடுதலை வேண்டிப் போராடும் நம்போன்றவர்கள் ஒருவிடுதலை வீரனைப்பறி கொடுத்துவிட்டோம். இந்த வெற்றிடத்தை ஈடுசெய்ய யார்த்தான் உளரோ?

இவ்வாறு இ. தொ. கழகம் விடுத்த இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அச் செய்தி கூறுவதாவது:-

நமது பிரச்சினையை நன்ருக உணர்ந்த இந்தியத் தலைவர்களில் முதன்மையானவர் நேரு. அவரின் மறைவு நமது சிக்கல் நிறைந்த பிரச்சினையை மேலும் சிக்கலாக மாற்றப்போகிறது.

விடுதலை வேண்டித் துடிக்கும் நமக்கு அவரின் கடந்த கால வாழ்வு வழிகாட்டியாகவுள்ளது. பாரத நாட்டின் விடுதலைக்காகவும் உயர்வுக்காகவும் தன்னை அற்பணித்துக்கொண்ட தியாக புருஷன் ஜவஹர்லால்.

பாரத நாட்டின் உயர்வுக்காகவும் அமைதிக்காகவும் உழைத்த அதே நேரத்தில் உலக சமாதானத்தைக் காக்கும் பொறுப்பையும் தனதாக்கிக்கொண்டிருந்தார். நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்கும் வழிகாட்டும் பஞ்சசீலத்தை நிலவுலகெங்கும்பரப்பினர். ஆனல் அந்த சீரிய பணி முற்றுப்பெற முன்னர் அவரை உலகம் இழந்துவிட்டது.

நேரு இல்லாவிட்டால் நாம் கடந்த காலத்தில் பல உலகப் போர்களைக் கண்டிருப்போம். ஆனல் வருங்காலத்தில் யார்அந்த இடத்தை நிரப்பவல்லார்?

அடிமைப்பட்டு இன்னல் உற்று விடுதலை வேண்டி போராட்ட வழியில் நிற்பவர்களுக்கு நேருவழிகாட்டி. அந்த இடத்தை இனி யார்தான் நிரப்பப்போகிருர்களே?

ஜவஹரின் இழப்பு உலகுக்கு இன்றைய நிலையில் தாங்கமுடியாத ஒன்று.

விடுதலை வேண்டி நிற்பவர்களுக்கு ஓர் பேரிடி.

### அஞ்சலி

நேருவின் மரணச்செய்தி கேட்டு இ. தொ. கழகப் பணிமனைகள் அத்தனையும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மூடப்பட்டன. இ. தொ, கழக உறுப்பினர்கள் வியாழக்கிழமை தமது தொழில் நிலையங்களுக்கு செல்லாது அவர்கள் இல்லத்தில் தங்கி அஞ்சலிசெலுத்துமாறு வேண்டப்பட்டிருந்தனர்.

## அடுத்த இதழில்

திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் நினைவு தினத்தையொட்டி விசேட கட்டுரைகள், கவிதைகள் வெளியாகும். அன்னரின் நினைவு நாள் 4-5-64 வியாழக்கிழமையாகும்.

## கலைப்பூஞ்சோலை

நேருஜி பற்றிய கட்டுரைகளும் செய்திகளும் இடம் பெறுவதால் 'கலைப்பூஞ்சோலை', 'அறிமுகப்படுத்துகிறேம்' முதலியன இவ்வாரம் இடம் பெறவில்லை. அடுத்த வாரம்வெளிவரும்.

ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்று ஒருநாள் 'கிளி' பிரசவ வேதனையில் துடித்துக்கொண்டிருந்தாள். அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம் வீட்டில் கூடியிருந்தனர். வெந்நீர் வைப்பதும்; மாத்திரைகள் கரைப்பதும், ஊறல் போடுவதுமாக அந்தப் பெண்கள் கூட்டம் வீட்டையே பெரிய அமர்க்களப்படுத்திக்கொண்டிருந்தது.

தாய்மையின் சிறப்பு உலகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுவதற்கு இந்தப் பிரசவ வேதனை தான் காரணமோ என்னவோ கல்மனமும் நெகிழக் கூடிய அளவு கிளி தன் உயிரை காலனிடம் கொடுப்பதும் மீட்டுப் பெறுவதுமாகத் தவித்துக் கொண்டிருந்தாள்.

அன்றுதான் கணேசனும் ஆசிரிய கலாசாலையிலிருந்து வீட்டுக்கு வந்திருந்தான். தன் மனைவி படும் வேதனையக் கண்டு மனம் சகிக்காவிட்டாலும் 'நான் ஒரு தந்தையாகப் போகிறேன்' என்ற உள்ளுணர்வு உந்த, 'இரண்டாங் கெட்ட' நிலையில் இங்கும் அங்குமாக உலாத்திக் கொண்டிருந்தான்.

"தம்பி, என்னத்தைப் பற்றி யோசிக்கிறாய்; ஓடிப் போய் ஒரு 'கார்' பிடித்து வாருங்க, கன்னிப் பிரசவம் வீட்டில் வைத்திருப்பது கூடாது" என்றாள் பக்கவீட்டுப் பாட்டி. கணேசனுக்கும் உள்ளூர ஒரே பயம் தான்; 'என்ன, ஏது,' நடக்குமோ வென்ற அச்சம்.

"நான் இறந்தாலும் ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டேன்" என்று அழுது கொண்டே சொன்னாள் கிளி. அப்படி ஒரே பிடிவாதமாக மறுப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் வைத்திய சாலைகள், சுற்றுடலில் கொடிய வியாதிகளை உற்பத்தி செய்து பரப்பும் உற்பத்திச்சாலையாக இன்று இருக்கின்றன.

அதிலும் நமது கிராமத்திலுள்ள வைத்தியசாலை இன்றைய நிலையில் ஒரு வைத்திய சாலையாய் இல்லை. ஆடு மாடுகள் வசிக்கும் 'பட்டிக் காலை'யாக இருப்பதைக் கிளி ஏற்கெனவே இரு நாட்கள் அனுபவித்திருந்தாள்.

இன்று ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பெருகுவதற்கும் மரணங்கள் சம்பவிப்பதற்கும் வைத்தியசாலைகளும் காரணமாக இருப்பதை யாரும் மறுக்கமுடியாதுதான்.

'கரைத்தால் கல்லும் கரையு'மென்பார்கள். நாலு பேரும் நாலு வார்த்தைகளைக் கதைத்து கிளியை ஓரளவு சம்மதிக்கச் செய்துவிட்டனர். அம் முயற்சியே ஒரு பெரிய பிரசவ வேதனை.

★

'உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது' என்று 'நர்ஸ்' சொன்ன அந்த வார்த்தை ஆஸ்பத்திரித் திண்ணையில் அங்கலாய்ப்போடு நின்று கொண்டிருந்த கணேசனின் காதில் பனியோடு கலந்த பாலும் தேனும் பாய்ந்தது போன்றிருந்தது.

'அப்பாடா'...என்ற நெடு மூச்சைத் தொடர்ந்து அவனது முகத்தில் இன்பவுணர்ச்சிகள் மின்னிட்டு மறைந்தன. எந்த ஒரு தந்தைக்கும் 'குழந்தை பிறந்துவிட்டது' என்றுகேள்விப்பட்டவுடன்—அதுவும் 'ஆண் குழந்தை பிறந்துவிட்டது' என்பதைக் கேள்விப்பட்டதும் ஏற்படும் உள்ளுணர்வும் உவகையுந் தானே அவனுக்கும்?

ஆனால் கணேசனுக்கு இச் செய்தி ஓரளவுவெட்கத்தையும் சேர்த்துக்கொடுத்தது.

இருவருடக் காதல் வாழ்க்கையில், அதிலும் பத்து மாதங்களுக்கு முன் ஏற்பட்ட காதற் கடிமணத்தின் பின் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷம் ஒரு ஆண் குழந்தை!

பதினேழு வயதுப் பாவையாகப் பாவாடை சட்டையுடன் புத்தகமும் கையுமாகப் பாடசாலைக்குச் சென்று வரவேண்டிய கிளியின் கையில் ஒரு பாலகன்!

காதலுக்கும் கல்யாணத்துக்கும் இடையில் ஏற்பட்ட கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் கைமேற் பலனைத் தந்தது குறித்துக் கணேசன் அளவில்லா ஆனந்தத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.



நாட்கள் வாரங்களாகவும் மாதங்களாகவும் உருண்டு கொண்டிருந்தன. குழந்தைக்குப் போதிய பால் இல்லாமையால் கணேசன் கண்ட கண்ட டாக்டர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்காத நாளேயில்லை. கடைசியாக ஒரு டாக்டரின் ஆலோசனைப்படி குழந்தைக்குத் தாய்ப்பாலுடன் புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர்.

நவநாகரிகப் பெண்கள் குழந்தைகளுக்குத் தம்பாலையூட்டத் தயங்குகிறார்கள். 'ஆயா'வின் கையிலிருந்து இன்று அநேக குழந்தைகள் புட்டிப்பால் உண்டு வளரு[illegible] குழந்தைக்குத்தாய்ப்பாலும் ஊட்டி அத்தோடுசேர்த்துத் தான் புட்டிப்பாலும் ஊட்டி வந்தாள். நாகரிகமென்றால் என்னவென்று அறியாமல் கிராமத்து வாழ்க்கையில் ஊறித்திளைத்தவள் தான் கணேசனின் மனைவி.

★

அந்தத் தந்தி கணேசனை அப்படியே தூக்கி ஆகாயத்திலிருந்து 'தொப்' பென்று கைவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. 'மகனுக்குக் கடுமையான வருத்தம். உடனே வரவும்' இதுதான் அந்தத் தந்தியில் எழுதியிருந்தது.

ஆசிரிய கலாசாலையில் இரு வருடப் பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சையையும் வெற்றிகரமாக எழுதி முடித்துக் கலாசாலையில் அன்று நடைபெற விருந்த பிரிவுபசார விருந்து வைபவத்தில் கலந்துவிட்டு நாளை ஓடோடி வீடு சென்று அன்பு மனைவியையும், அருமை மகனையும் காணவென்று இன்பக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த கணேசனுக்குக் கிடைத்த தந்திதான் அது.

மனிதன் நினைப்பதெல்லாம் நடந்தால் உலகம் என்ன ஆவது? உல்லாச புரியில் சஞ்சரிக்கவிருந்த கணேசன் தந்தியையும் தன்னையும் விட யாருமற்ற ஏகாந்த பூமியில் 'பேயறைந்தவன்' போல் நின்றான். நாலு பக்கமும் நண்பர்கள் கூடியிருந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை.

'ஏனப்பா யோசிக்கிறாய்? உடனடியாக வீட்டுக்குப் போய்வா' என்றார் ஒரு முதிர்ந்த ஆசிரிய நண்பர், கணேசனின் தோளைப் பிடித்து உலுப்பி விட்டபடியே.

'என்ன மச்சான் போன கிழமைதானே மகனுக்குப் பால்மாவும் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போய் வந்தாய்? தம்பி சுகமாகத் தானே இருக்கிறானென்று சொன்னாய் அதற்குள்ளாகவா......உடனே வீட்டுக்குப் போ, மற்றவைகளைப் பிறகு பார்க்கலாம்' இது கணேசனின் ஆருயிர் நண்பன் தவம் சொன்னது.

ஆமாம், 'போன கிழமை' என்று தவம் ஞாபகமூட்டியது, கடந்த வாரம் கணேசன் வீடு சென்றிருந்தபோது தன் மகன் காட்டிய குறும்புகளையும், கொஞ்சலோடு மனைவி சொன்ன வார்த்தைகளையும் நினைவுக்குக் கொண்டு வந்தது.

'அத்தான் இங்கே பார்த்தீர்களா உங்கள் மகனை, ஐந்து மாதத்திற்குள்ளாக அப்பாவைப் போல் புத்தகமும் கையுமாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறான், புத்தகங்களையும் பத்திரிகைகளையும் கண்டால் அடம் பிடித்து அழுகிறான். உங்களைவிடப் பத்து மடங்கு இருப்பான் போல் தெரிகிறது' என்று தன் மனைவி கிளி சொன்னபோது, 'தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்று அறியாமலா சொன்னார்கள்' உன்னைப் போல் உன் மகன்; எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாவிட்டாலும் இலக்கியத்தை ரசிக்கக் கூடவா தெரியாமல் போய்விடும்?" என்று செல்லமாகச்சொல்லி மனைவியையும் மகனையும் சேர்த்துக் கொஞ்சியது கணேசனின் உள்ளத் திரையிற் பளிச்சிட்டது.

★

குழந்தை பிறப்பதற்கு முன்பே தம்பதிகள் இருவரும் பெரிய 'ஆகாசக் கோட்டை'யே கட்டியிருந்தனர்.

'ஆண் குழந்தை பிறந்தால் 'மதியமுதன்' என்று பெயர் வைக்க வேண்டும்; பெண் குழந்தை பிறந்தால் 'அமுதமொழி' என்று பெயர் வைத்து அழைக்க வேண்டு' மென்று ஆசைக் கோட்டை கட்டினர். கணேசன் ஒரு தமிழ்ப் பித்தனுகையால் தனக்குப் பிறக்கும் குழந்தையைத் தமிழ் அறிவும் தன் மானமும் மிக்க பிள்ளையாக வளர்க்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தான்.

தன் மகன் தன் பிஞ்சுக் காலால் நெஞ்சிலே 'படக் படக்' கென்று உதைத்து உன்னும்போதெல்லாம் உள்ளம் பூரித்தான். கங்கை கொண்ட சோழனைப் போல, சங்கம் போற்றிய தமிழனைப் போல தன் மகன் வளர வேண்டுமென்று கருதித் தன் மகனை இளமையிலிருந்தே அற்ப விடயங்களுக்கெல்லாம் 'பூச்சாண்டி' காட்டிப் பயமுறுத்தக் கூடாதென்று அடிக்கடி தன் அனுபவமற்ற இளம் மனைவிக்குப் புத்தி கூறிவந்தான்.

தன் திருமணத்தை விரும்பாத தந்தையை மகன் மதியமுதனைக் கொண்டே தூதனுப்பி அவருடைய ஆத்திரத்தைத் தவிடுபொடியாக்க வேண்டுமென்று கருதி வந்தான்.

ஆனால்...... இந்த இன்பக் கனவுகளெல்லாம் இடிவிழுந்த கோட்டையைப் போல் பொடிப் பொடியாகுமென்று மனித உள்ளம் எதிர்பார்க்குமா என்ன?

★

'தம்பிக்கு என்ன நடந்தது?' அவசர அவசரமாக வாசற்படியில் ஏறிய கணேசன் மனைவியைக் கேட்டான்.

'கட்டுக்கடங்காமல் வயிற்றால் போகிறது' என்று குழந்தையைத் துவாயினுள் சுற்றிக் கையுள்வைத்திருந்த பாட்டி சொன்னாள்.

'மூன்று நாட்களுக்குள் மூன்று டாக்டரைக் கொண்டு பார்த்தோம். பலன் எதுவும் கிடைக்கவில்லை. இருக்க இருக்க மோசமாகிறது......எனக்குப் பயமாக இருந்தது. அதனால் தான் தந்தி கொடுத்தோம்' என்று தன் வயிற்றில் கையைப் பொத்திக் கொண்டு கலக்கத்தோடு கூறினாள் கிளி.

மனைவியைத் தேற்றுவதா மகனைத் தூக்குவதா என்று தவித்த கணேசனின் கரங்கள் குழந்தை மதியமுதனைத் தூக்கின. கட்டாந்தரையில் தண்ணீரற்றுக் கிடந்த கீரைக் குஞ்சு போலக் குழந்தை வதங்கிக் கிடந்தது.

கணேசனின் கண்கள் மனைவியையும் மகனையும் மாறி மாறிப் பார்த்துக் குளமாகின. கால்கள் கக்கூஸை நோக்கி நடந்தன.

'இந்தக் குழந்தையை இப்பொழுது ஏன் கொண்டு வரு

(15-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர் 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள். அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர்: 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் ஒரு வழி நூல்

## 'நூபுரக்கிரந்தம்' அதன் முதனூலாகும்

**ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் ஒரு வழி நூல். இதன் முதல் நூல் 'இளையாழ்வார்' என்பவர் வட மொழியில் எழுதிய 'நூபுரக் கிரந்த'மாகும். அந்நூலுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடையில் உள்ள வேற்றுமையிலும் பார்க்க ஒற்றுமையே நிறைந்து காணப்படுகின்றது. இவ்வாறு ஒரு சர்ச்சையை சென்னையைச் சேர்ந்த இளம் புலவர் திரு. தி. ம. பாஷ்யம் என்பவர் எழுப்பியுள்ளார். இது பற்றிய கருத்துக்கள் தமிழறிஞர்களிடம் இருந்து வரவேற்கப்படுகிறது.**

நம் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியிலே தோன்றிய பெருங் காப்பியங்கள் ஐந்தினுள் இச்சிலப்பதிகாரம் இரண்டாவதாகும். ஆங்கில மொழியில் எழுந்த சில காப்பியங்களும் ஒரு குடி மகனைக் கதாநாயகனாக—காப்பியத் தலைவனாகக் (காப்பியத் தலைவியாக) கொண்டவை அல்ல. மேலும் மேனாட்டு நாகரிகமும் நம் நாட்டு நாகரிகமும் வேறுபட்டவை என்பது வெள்ளிடைமலை.

சிலப்பதிகாரம், சிலம்பினது அதிகரித்தலை உடைய நூல் எனப் பொருள்படும். அதிகரித்தலாவது — தன் இயல்பினால் புகழிலும் பெருமையிலும் அதிகரித்தல். அஃதாவது, அதிகமான புகழைத் தன்னகத்தே கொண்ட பெருங்காப்பியம் என்றபடி. 'சிலம்பு' என்ற சொல் 'சிலப்பு' எனத் திரிந்தது எனக் கோடலே ஏற்புடைத்து ஆதலின் இதுவே இலக்கணமாம் என்றறிக.

### இந்நூல் உணர்த்தும் நீதிகள்

இச்சிலப்பதிகாரப் பெருங் காப்பியம் நந் தமிழர்க்கு உணர்த்தும் மூன்று நீதிகளாவன:

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்.
2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்.
3. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்.

என்பனவாகும்.

### நூலாசிரியர் வரலாறு

சென்னைக் கன்னிமாரா நூல் நிலையத்தின் கண் காணப்படும் பழைய வட மொழி ஆதார நூல் ஒன்று, வைணவ சமயத்தினரான 'இளையாழ்வார்' (யுவராஜ) என்பவர் 'நூபுரக் கிரந்தம்' என்றொரு கிரந்தத்தை திரேதாயுகத்தில் அருளிச் செய்ததாகக் கூறா நிற்கும்*. ஏறக்குறைய நமது ஆராய்ச்சிக்கு எட்டியவரை, 'சிலப்பதிகாரம்' எழுந்த அதே காலத்தில் இந்நூலும் எழுந்திருக்கலாம் எனக் கூற இடமுண்டு. அன்றியும் யுகக் கணக்கான மாறுபாடு கால அளவில் இருப்பதால் 'நூபுரக்கிரந்தத்தினின்றே சிலப்பதிகாரம் எழுந்தது' எனக் கூறுவாரும் உளர். ஆகவே, அவர் தம் கருத்துப்படி இக்காப்பியம் வழி நூலே.

இந் நூபுரக் கிரந்தத்தின் காப்பியத்தலைவனின் பெயர் 'விருத்த கோபாலன்' (விருத்த கோபால:) என்பதாகும். இஃது சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் கோவலனும் மாடலனும் சந்திக்குமிடத்தில், மாடலன் கோவலன் இயற்றிய பல அறச் செயல்களை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகக் குறிப்பிட்டு நினைவுறுத்துங்கால், கோவலனை அவ் வையவை மறையோன் "விருத்த கோபால!" என்று விளிக்கின்றான். இஃது 'விருத்த கோபால:' என்ற நூபுரச் சொல்லோடு ஒக்கும். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவியான கண்ணகியும் 'நேத்ரசுந்தரி' என அவ் வட மொழிக் காப்பியத்துள் வழங்கப்படுகின்றனள். இவற்றையெல்லாம் ஒப்பு

**தி. ம. பாஷ்யம்**

நோக்குழி, இச் சிலப்பதிகாரம் 'வழி நூல்தானோ!' என்று கருத இடமுண்டு; அறிஞர் ஆய்ந்து தெளிக.

இச் சிலப்பதிகாரப்பெருங் காப்பியத்தை இயற்றிய ஆசிரியரின் பெயர் இளங்கோவடிகள். இவர் சேர நாட்டினர். தந்தை: இமயவரம்பன்நெடுஞ்சேரலாதன். தாய்:நற்சோணை. சமயம் சைவம். (சமணமன்று.) இவரது தமையனான சேரன் செங்குட்டுவன் சைவ சமயத்தினன் ஆதலின் இவரும் சைவரே எனப் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் துணிகின்றார்.

மற்றும் இளங்கோவடிகளார் மதுரைக் காண்டத்தில் 'நாராயணா என்னா நாவென்ன நாவே' எனத் திருமாலின் திருமந்திரார்த்தப் பெருமையையே விரிவாக விமர்சித்துச் சொல்வதால் இவரது சமயம் வைணவமே என்பது தேற்றம். அன்றியும், காடுகாண் காதையில் சமண சமயக் கருத்துக்கள் காணப்படுவது அடிகளாரின் சர்வ சமயப் பொது நோக்கினைப் பெரிதும் சிறப்பித்துக்காட்டுவதாகும். 'இராமாயணம் சிறையிருந்தாள் ஏற்றம் கூறும்' என்புழி, 'சிலப்பதிகாரம் காடு நடந்தாள் ஏற்றம் கூறும்' என்று அறுதியிட்டுக் கூறல் இப்பெருங் காப்பியத்தின் பெருமையை மிகைப்படுத்தும் அன்றோ?

இப்பெருங்காப்பியத்தின், காப்பியத் தலைவன் 'கோவலன்' என்றவோர் வணிகக் குடிமகன் ஆவான்; காப்பியத் தலைவி 'கண்ணகி' என்னும் வாணிகக் குடி மகள் ஆவள், அவர்கள் பெற்றோரின் விருப்பபப்படியே வைதீகத் திருமணமாகக் 'கோவலன் — கண்ணகி திருமணம்' நடைபெற்றது. ஆம். 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட'த் தான்!

இவரிருவரும் இல்லற நெறியிற் சிறிதும் வழுவாது வாழ்க்கை நடத்தி வந்தனர். கோவலன்-கண்ணகியின் தாய் தந்தையர் அவர்தம் மகளுக்கு உறுதுணையாக மடைத் தொழிலில் வல்ல *'அறப் பரிசாரர்களை' அமர்த்தினர். இவ்வாறு இவர்கள் விருந்தோம்பல் நெறியினை விடாது வாழ்க்கையெனும் தோணியைச் செல்வமெனும் துடுப்பால் மெல்லக் கடத்தி வந்தனர்.

### பரத்தையை நாடினான்!

ஒரு நாள் சோழனின் அரண்மனையில் 'மாதவி' என்னும் நாடகக் கணிகையின் நடன அரங்கேற்றம் நடந்தது. அப்போது அந் நகரத்தில் உள்ள செல்வர் பலரும் அரசவைக்குச் சென்றனர். கோவலனும் அவர்களுடன் சென்றான். மாதவி தான் நடனமாடியதன் முடிவில், தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி வயது நிரம்பிய கூனி ஒருத்தியிடம் தந்து, 'நீ இப்புகார் நகரத்தின் அகன்ற தெருக்கள்தோறும் சென்று இந்த முத்துமாலையை ஆடவர் யாரிடமேனும் உயர்ந்த விலை பேசி விற்றுவா' என்று கூறினள். அவள், ஆடவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லும் வீதிகள் தோறும் சென்று 'மாதவி என்னும் அழகு நிரம்பிய பூங்கொடியாளின் இந்த முத்து மாலையை யார் அதிக விலை கொடுத்து வாங்குகின்றனரோ அவர், மயிலுடைச் சாயலாளான என் மகளை மணக்குந் தகுதியுடையோராவர்' என அறிவித்தாள். அவ்வழியே சென்ற கோவலனும் அவள் கையிலிருந்த அப் பச்சை மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்கினான். வாங்கியவுடன் அவன் மனம் மாதவியின் இருப்பிடத்தை நாடியது.

### விளைவு என்ன?

இதன் விளைவு, கோவலன் தன் மனையாளான கண்ணகியை மறந்தான். அவன் வாழ்க்கை என்னாயிற்றோ? என்று துளியும் அவன் சிந்தித்தானில்லை. அதனால் தனித்திருந்த கண்ணகி துயர் மிக எய்தினாள். 'மங்கல வணி* யின் பிறிதணி மகிழாது, கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினளாகி, திங்கள் வாள்முகம் திலகம் இழப்ப' வாழ வருந்தினாள். அவளது ஆறாத் துயரம் உடலையும் உள்ளத்தையும் ஒருசேர உருக்கியது.

### கணவன் திருந்தினான்

மாதவியின் பக்கலிலேயே மன மழிந்து வாழ்ந்து வந்த கோவலன் அவளுக்கு மேலும் கொடுக்கப் பணமில்லாமையால் வருந்தி அவளைப் பிரிந்து கண்ணகியின் இல்லம் நோக்கி வந்தான். அவன் உள்ளத்தைப் புரிந்து கொண்ட கண்ணகி 'சிலம்புள கொண்மெ'ன என்று கூறிக்கொண்டே மன முவந்து தன் காலில் அணிந்திருந்த இரு சிலம்புகளில் ஒன்றைத் தன் கணவனிடம் கொடுத்தாள். கோவலனும் அச்சிலம்பினை விற்று 'இழந்த பொருள் ஈட்ட'நினைத்தான். அதற்கு ஏற்ற இடம்மதுரை மாநகரே எனத் தெரிந்து அங்கு நோக்கிப் பால்நிலா ஒளிவீசும் காட்டுவழியில் இரவு நேரத்தில் செல்லத் துணிந்தனர். அவர்களுடன் கவுந்தியடிகளும் துணைவந்தார். அவ்வாறு அவர்கள் மூவரும் மதுரைமா நகரைச் சென்று சேர்ந்தனர்.

### நீதிக்குப் போராடல்

மதுரையின் தெருவழியே கோவலன் சிலம்புவிற்கச் செல்லுங்கால் அரண்மனைப் பொற்கொல்லன் ஒருவனால் சந்தேகிக்கப்பட்டு அரண்மனைக் காவலரால் கைது செய்யப்பட்டான். அங்கு பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராயாது, 'கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு' என்று கொலையாளிகட்குத் தவறாக

(13 ம் பக்கம் பார்க்க)

* இந்நூலைப் பதிப்பிக்கும் முயற்சிகள் இப்பொழுதே நடைபெற்றுவருகின்றன. இம்முயற்சி தமிழரால் பாராட்டப்படத் தக்கதாகும்.

* இவர்கள் இப்பொழுதும் தமிழகக் கோயில்களில் இறையடிமை செய்யும் 'பரிசாரகர்கள்' என வழங்கப்படுகின்றனர். இவ்வாறு அமர்த்தப்படுவோர் அந்தணர்களே.

* மங்கலவணி என்பது மாங்கல்ய சூத்திரம் என்பர் சிலப்பதிகார உரையாசிரியர். எவ்வளவு கொடிய வறுமையினும் நம் தமிழ் மகளிர் தம் தாலியைக் கழற்றுவதில்லை. இதற்குக் காரணம் கண்ணகி மேற்கொண்ட அப்பழைய வழக்கமே. இதனை, 'இயற்கை அழகு' என்று கூறித் தம்முள் மயங்கி முரண்படுவாரும் உளர். 'பிறிதணி', 'கொடுங்குழை', 'நுதல் திலகம்' என்பதில் உள்ள 'அணி', 'குழை', 'திலகம்' என்ற சொற்கள் வேறு பொருள் தராது கண்ணகியின் அணிகலன்களையே குறித்தலான், மங்கலவணி மாங்கல்யத்தைக் குறிப்பதாயிற்று. 'ஈகையரிய இழையணி மாதர்'(புறம் 127)என்ற வரியும் கொடுத்தற்கரிய அணிகலனாகிய மாங்கல்யத்தைத்தான் குறிப்பிடும். தமிழ் மகளிர் தம் பொருள்களில் எதனைக் கைம்மாறு கருதாது கொடுத்தாலும் தம் தாலியைக் கழற்றிக் கொடுத்தலில்லையன்றோ! ஆண்கள் அணியும் தாலி, 'ஐம்படைத் தாலி' எனவும், சிறுவர் அணியும் தாலி "புலிப் பல் தாலி' (புலிப் பல் தாலிப் புன்தலைச் சிறுஅர்புறம் 374) எனவும், மகளிர் அணியும் தாலி 'ஈகை அரிய (மங்கல) இழை அணி' எனவும் வழங்கப்படும். இக் காலத்து, ஆடவர்பால்'தாலி அணிதல்' வழக்கொழிந்து மகளிர்பால் நிலைபெற்றிருத்தல் நாகரிக முதிர்ச்சியான் என்க. ஆடவன், தான்விரும்பும் பெண்ணின் கழுத்தில் தாலியை அணிவித்தலான் இஃது 'அணி' எனப் பெயர் பெற்றது. 'அணி' எனுஞ் சொல், தாலிக்கு ஆகிவந்ததால் ஆகுபெயர் ஆயிற்று. இஃதன்றி, அடிகளார், கண்ணகியின் உருவ அழகைப் புனைந்துரையாது கணவனைப் பிரிந்து வாடும் 'கையறுநிலை' யை ('கையறு நெஞ்சத்து') இயல்பிற் கூறுதலான் இவ்விடத்து மங்கல அணி எனும் சொற்றொடர்க்கு 'இயற்கை அழகு' என்ற பொருள் சிறக்காதென்க.

## இலக்கிய சர்ச்சை

## பாரதிதாசனுக்கு நினைவுச் சின்னம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குப் புதுவையில் நினைவுச் சின்னம் அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நினைவுச் சின்னம் அமைப்பதற்குரிய பணிகளைச் செய்ய புதுவை மாநில முதலமைச்சர் குபேர் தலைமையின் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

'புரட்சிக் கவிஞர் நினைவுச் சின்னம் அமைப்புக்கு நிதி அனுப்ப விரும்புவோர் அ. சேனாபதி முதலியார், பாரதிதாசன் நினைவுக் குழு, 80 காந்திரோடு, புதுவை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்' என்று அக்குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**பரீட்சைகள்**

பின் வரும் பரீட்சைகளில் ஏராளமான மாணவர்களின் தேர்ச்சிக்கு யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ் அளிக்கும் திறன்மிக்க அஞ்சல் பாடங்களே காரணம். சித்திபெய்த விரும்பும் ஒவ்வொரு மாணவரும் எங்களுடன் தொடர்பு கொள்க.

இலங்கை பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும்
ஜி. சி. ஈ. உயர்தரத் தேர்வும்!
கலை, விஞ்ஞானம்
கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண ஜி. சி. ஈ.) தேர்வு!
கலை, விஞ்ஞானம், வாணிபம்.

**யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,**
நெல்லியடி கரவெட்டி
கிளைகள்:
207, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

**'சுதந்திரன்' விற்பனையாளர்கள்**

பளை
எஸ். எம். லெப்பை,
8, கடை வீதி,
பளை.

செம்பியன்பற்று
கே. செல்வதுரை,
பத்திரிகை விற்பனையாளர்,
செம்பியன்பற்று.

பரந்தன்
ஆறுமுகம் சகோதரர்கள்,
கண்டி வீதி,
பரந்தன்.

கிளிநொச்சி
மணியம் ஸ்ரோஸ்,
கிளிநொச்சி.

வவுனியா
க. கனகநாயகம்,
13, கடை வீதி,
வவுனியா.

**'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்**

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7·50

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தலைவரை தியாகம் செய்தோம்

## மூன்றாவது சங்கமும் உருவாகியது

எழுது வினைஞர் சங்கம் ஓரளவு வளர்ந்து வரும் பொழுதே தலைவரைத் தியாகம் செய்ய வேண்டிய நிலை உருவாகியது. தலைவர் நம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் சங்கத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருப்பார் என்ற உறுதியின் பேரிலேயே ஆறுதல் கண்டோம். தலைவர் நம்மை விட்டுச் சென்ற அதே காலத்திலேயே மூன்றாவது மொழிவழித் தொழிற் சங்கமும் தோன்றியது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி செயற்குழு முழுநேரப் பணியாற்ற நிர்வாகச் செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென முடிவு செய்தது. கட்சியின் வளர்ச்சியிலும் நலனிலும் அக்கறை கொண்ட சிலர் அவ்வாறான ஒரு நிர்வாகச் செயலாளரை நியமிக்க வேண்டுமென்பதிலும் அப்படி நியமிக்கப்படும் நிர்வாகச் செயலாளர் திறமையும் ஆற்றலும் மிக்கவராக இருக்க வேண்டுமென்றும் பெரிதும் விரும்பினார்கள். அப்படி விரும்பிய அவர்கள் கண்கள் அந்நாள் எழுது வினைஞர் சங்கத் தலைவராகவிருந்த திரு. சிவானந்தசுந்தரத்தின் மீது விழுந்தன.

### தலைவர் இளைப்பாறினார்

திறமை, ஆற்றல், அனுபவம், தான் கொண்ட கருத்னை நின்று சாதிக்கக்கூடிய துணிவு ஆகிய குணங்கள் நிரம்பப் பெற்ற திரு. சிவானந்தசுந்தரம் அவர்கள் கட்சியின் நிர்வாகச் செயலாளராக வந்தால் அதன் மூலம் கட்சியின் வளர்ச்சியும் அமைப்பும் பலப்படும் என்று கருதினார்கள். எனவே அவர்கள் திரு. சிவானந்தசுந்தரத்தை சேவையிலிருந்து இளைப்பாறிக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இனத்தின் நல்வாழ்வுக்கு இது அவசியம் என்று கருதினார்கள். ஆனால் திரு. சிவானந்தசுந்தரத்துக்கு எழுதுவினைஞர் சங்கத்தின்பால் ஒரு பொறுப்பு இருந்தது.

தனது தெளிந்த சிந்தனையாலும், விடா முயற்சியாலும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கென ஒரு தொழிற் சங்கத்தை-முதல் மொழி வழித் தொழிற் சங்கத்தை- உருவாக்கிக் கட்டிக் காத்து வளர்த்து வந்த திரு. சிவானந்தசுந்தரம் சங்கத்தின் குழந்தைப் பருவத்திலே சங்கத்தை விட்டு வெளியேற வேண்டி வரும். இதைத் திரு. சிவானந்தசுந்தரமோ அல்லது சங்கமோ விரும்பவில்லை. திரு. சிவானந்த சுந்தரம் சேவையிலிருந்து இளைப்பாறி-தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்பது என்ற விடயம் நன்கு ஆராயப்பட்டு இறுதியில் தமிழ் பேசும் இனத்தின் நன்மைக்காக எழுது வினைஞர் சங்கம் தன் தலைவரை இழந்து தான் ஆகவேண்டும் என்ற கருத்து நிலவியது. எனவே திரு. சிவானந்தசுந்தரம் சேவையிலிருந்து இளைப்பாறினார். கட்சியின் நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

### அவரின் சிறப்பு

எழுதுவினைஞர் சங்கச் செயற்குழு திரு. சிவானந்தசுந்தரம் சேவையிலிருந்து இளைப்பாறியதற்கு ஒப்புதல் வழங்கியது — மகிழ்ச்சியுடனல்ல! திரு. சிவானந்தசுந்தரத்தின் இழப்பு சங்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

ஒரு மொழி வழித் தொழிற்சங்கத்தை உருவாக்கி, இவ்வளவு விறுவிறுப்புடன் வளர்ச்சியடையச் செய்ய திரு. சிவானந்த சுந்தரம் போன்றவர்களால் தான் முடியும். எழுதுவினைஞர் சங்கம் உருவாகுவதையே எதிர்த்த என் நண்பன் தங்கவேலுவையும் என்னையும் தமது ஆணித்தரமான வாதங்களாலும் — தெளிவு பெற்ற விளக்கங்களாலும்—

**செ. கோடீசுவரன்**
**தலைவர் அ. எ. வி. ச.**

மொழி வழித் தொழிற் சங்கத் தத்துவத்தை ஏற்று இன்று சங்கத்தின் முன்னோடிகளாக நிற்கும் அளவுக்கு மாற்றி வைத்தவர் திரு. சிவானந்தசுந்தரம். இப்படி எத்தனை பேரைச் சங்கத்துக்குச் சேர்த்துத் தந்தார் திரு. சிவானந்தசுந்தரம். சங்கத்தின் ஆணிவேராக விளங்கிய அவர் இப்படி இடையிலே எம்மை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்த பொழுது சங்கம் வருந்தியது. ஆனால் ஒரு பெரிய பொது நன்மையை உத்தேசித்துத் திரு. சிவானந்தசுந்தரம் செல்வதாகக் கூறப்பட்டதனால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஆகவே திரு. சிவானந்தசுந்தரத்தின் ஓய்வுக்கு ஒப்புதல் வழங்கியது சங்கச் செயற்குழு.

### மூன்றாவது சங்கம்

சங்கம் தனது முன்னாள் தலைவனை எந்நாளும் வழிகாட்டியாக ஏற்கத் தயங்கவில்லை. ஆம்! சங்கச் செயற்குழு திரு. சிவானந்த சுந்தரத்தின் ஓய்வுக்கு ஒப்புதல் வழங்கிய அதே நேரத்திலே அவரை செயற்குழுக் கூட்டங்களில் கலந்து அறிவுரை வழங்கும் படியும் கேட்டுக் கொண்டது. புதிய தலைவராகத் திரு. தம்பிமுத்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருளில் தான் ஒளி தோன்றுமென்பார்கள். திரு. சிவானந்தசுந்தரத்தை இழந்த துக்கத்திலே இருந்த சங்கத்துக்கு ஒரு இனிப்பூட்டும் நிகழ்ச்சியையும் காணக் கிடைத்தது. எங்கள் சங்கத்துக்கு இருந்த ஒரே துணை, அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம்தான். வாழ்விலும் தாழ்விலும் இதயத்தோடு இதயம் வைத்து ஒன்றி நின்ற சங்கம் அஞ்சல் எழுதவினைஞர் சங்கம் ஒன்றேதான். ஆனால் இந்த ஆண்டிலே எங்கள் இரு சங்கங்களுக்கும் துணையாக மூன்றாவது ஒரு தொழிற் சங்கமும் உருவாகியது.

### துறைமுக நாவாய் இயக்குநர் கழகம்

எந்தக் கோட்டைக்குள் நாங்கள் செல்ல முடியாது என்று பயமுறுத்தப்பட்டோமோ அந்தக் கோட்டைக்குள் நாங்கள் ஏறு நடை போட்டோம். ஆம்! ஆம்!! கொழும்புத் துறைமுகத்திலே ஒரு புதிய மொழி வழித் தொழிற்சங்கம் தோற்றியது. உடலுழைப்பை நம்பி வாழும் தமிழ்த் தொழிலாளிகளைக் கொண்ட துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் மலர்ந்தது. எங்கள் உள்ளங்கள் குளிர்ந்தன. திருவாளர்கள்: ஜீ. ஏ. பர்னாந்து, எஸ். ஜி. பிரிட்டோ, க. அருணசலம் ஆகியவர்களை



திரு. க. சிவானந்தசுந்தரம்

முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகக் கொண்டு உருவாகிய துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் இன்று எங்கள் தொழிற் சங்கக் கூட்டணியிலே இணைந்து இருக்கிறது. கழகச் செயலாளர் திரு. பிரிட்டோ இன்று கூட்டணியின் துணைத் தலைவராக விளங்குகிறார்.

எங்களுடைய மொழி வழித் தொழிற் சங்கத் தத்துவம் முளைவிட ஆரம்பித்து

(13-ம் பக்கம் பார்க்க)

## கோடீசுவரன் அறிக்கை

அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் 'சுதந்திரன்' மூலம் தமிழ் பேசும் பொது மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறுவதாவது;-

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சட்ட நடவடிக்கையை உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் சில அன்பர்கள் நிதி திரட்டுவதாக அறிகிறேன். நமது வேண்டுகோள் எதுவுமின்றியே இத்தகைய நன் முயற்சியில் வலிய முனைந்த அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்க கடப்பாடுடையேன். அதே நேரத்தில் இம் முயற்சியில் முனைந்திருக்கும் அன்பர்களுக்கும் தமிழ் பேசும் பொது மக்களுக்கும் ஒரு சிறு அன்பான வேண்டுகோளையும் விட விரும்புகிறேன்.

அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தமது சட்ட நடவடிக்கையை வலுப்படுத்தபொது மக்களாகிய உங்களிடமிருந்து நிதி உதவியை வேண்டி நிற்கிறது. ஆனால் நிதி உதவி பெறுவதற்கு நமது சங்கம் உரிய முறையில் சில ஒழுங்குகளை மேற்கொள்ள விரும்புகிறது. சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரினதும் ஒப்பந்தத்துடன் கூடிய அச்சிடப்பட்ட பத்திரம் மூலமே இத்தகைய நிதி சேகரிக்கப்படும். இத்தகைய ஒழுங்கு முறை எதுவுமின்றி நிதி சேர்க்கப்படுங்கால் சில தவறுகள் ஏற்பட இடமுண்டாகும். எனவே நமது நடவடிக்கையை உற்சாகப்படுத்தும் நன் முயற்சியில் முனைபவர்கள் [illegible] விருக்கும் பத்திரங்களைப் பயன்படுத்தும் வண்ணம் வேண்டுகிறேன்.

## கண்ணீர் விட்டு அழுதார் சிவாஜி

## எம்.ஜி.ஆர்-சிவாஜி தகராறு (வரலாறு)

வலது முஷ்டியை மேலுயர்த்திக் காட்டி எம். ஜி. ஆர். பேசியது என்னவோ உண்மைதான். ஆனால் அந்தச் செய்கையில் பொதிந்து கிடந்த உண்மை யாருக்கும் புலப்படவில்லை.

சிவாஜி கணேசன் கெய்ரோ சென்று திரைப்பட விழாவில் கலந்து வெற்றி விருதுகள் பெற்றுத் திரும்பிய அடுத்த நாள் சென்னை பீட்டர்ஸ் ரோடு 81-ம் இலக்க திரு. பி. ஜி. ஆனந்தன் (செயலாளர், தென்னிந்திய ஸிமாப்பத்திரிகையாளர் சங்கம்) அவர்களுடைய இல்லத்தில் வைத்து ஒரு உபசரிப்பு விழா நடைபெற்றது. அன்று பேசிய சிவாஜி மனம் திறந்து தனது நிலையைக் கூறினார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. 'நான் பெற்ற இந்த வெற்றியை என்னால் அனுபவிக்க முடியவில்லையே' என்று பெரிதும் வருந்தினார்.

இதுபோன்று எம். ஜி. ஆரும், சிவாஜியும் இரு துருவங்களாக்கப்பட்டனர். சிண்டு முடியும் கைங்கரியத்தில் ஈடுபட்டு பல சில்லறைகள் இந்த இரு கலைஞர்களையும் பகைவர்களாக்கினர்.

கலைஞனுக்குக் கிடைக்கும் பெயரும் புகழும்பொருளும் நிரந்தரமானதல்ல. 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற பழைய கருத்துக்கு ஒப்ப, அவர்கள் சந்தர்ப்பத்தை ஆதாரமாகக் கொண்டே தங்கள் வாழ்க்கையினை அமைத்துக்கொள்கின்றார்கள். இதற்கிடையில் பலதரப்பட்ட கைங்கரியங்களுக்கும் வாரி வாரி வழங்குகிறார்கள்.

பல நல்ல காரியங்களுக்காக வழங்குகிறார்கள்—வள்ளல்களாகிறார்கள்; ஆனால் அவர்களுடைய கொடை அத்துடன் நின்றுவிடவில்லை. கலைஞர்களின் புகழ் பாடிக்கொண்டே வயிறு வளர்க்கும் ஒரு சோம்பேறிக் கூட்டத்தையும் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு இத்தகைய கலைஞர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. இந்தவேண்டாவினையை தாங்களாகவே தேடிக்கொள்கிறார்கள். இக்கும்பல், தங்களுக்கு ஏதாவது கிடைக்கும்வரை புகழ்ந்துகொண்டிருக்கும். கலைஞரின் வருவாய் குறைந்தாலும் தன்னுடைய அந்தஸ்தைத் தொடர்ந்து காத்துக்கொள்ளக் கடன்பட்டாவது இக்கூட்டத்தை வளர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் கலைஞர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. வருவாய்குறைந்த கலைஞன் தன்னைச் சுற்றியுள்ளவர்களை போஷிக்கவே கடன்பட்டு சகலவற்றையும் இழக்க நேருகிறது. இந்த ரீதியிலேதான் மறைந்த பல கலைஞர்கள் இறுதிகாலத்தில் எண்ணற்ற துன்பங்களை அடைந்தார்கள்.

கலைஞர்களைக் கசக்கிப் பிழிந்து கடைசியில் ஓட்டாண்டிகளாக்குவது, புல்லுருவிபோல் கலைஞர்களிடம் வளரும் கோஷ்டிகளின் விஷமத்தனங்களே தான். ஆகவே தங்களைச் சுற்றிக் கொண்டு சதா புகழ்வதும், மற்றக் கலைஞரைப்பற்றி வம்பளப்பதுமாக விருக்கும் கோஷ்டியிடம் கலைஞர்கள் எச்சரிக்கையாகவிருப்பது மிக மிக அவசியம்.

எம். ஜி. ஆர்.—சிவாஜி தகராறு வளர்வதற்குக் காரண கர்த்தாக்கள்மேற்படி குழுக்களே. இதை மனதில்உன்னி, தங்கள் வருங்காலமும், இறுதிக்காலமும் சிறப்புடனிருக்க வேண்டிய 'கலை பிடுங்கும் வேலை'யைகலைஞர்கள் மேற்கொள்வதே கலைத் தேவிக்கு இவர்கள் செய்யும் பெரும் சேவையாகும்.

வாழ்ககலைஞர்கள். வளர்க எம். ஜி. ஆர். சிவாஜி புகழ்!

நடக்கவிருப்பவை:

## யாரது?

"தேனருவி" பத்திரிகை பிரசுராலய நிதிக்காக வானொலி நாடகக் குழுவினர், திரு. சி. சண்முகம் எழுதிய "யாரது" நாடகத்தை இம்மாதம் 30, 31ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்துகின்றனர். இதன் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை திரு. சி. சண்முகம் ஏற்றுள்ளார்.

## நாட்டியக் கச்சேரி

31ந் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு கலையரங்கத்தினர் அளிக்கும் நாட்டியக் கச்சேரி திரு. சி. பி. மோடி, திருமதி மோடியின் தலைமையில் மோடி கலா கேந்திர மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் விஸ்வாமித்திரா-மேனகா, வள்ளி திருமணம், கதிரமலைக் காட்சி ஆகிய பல கண்கவர் நடனங்கள் இடம்பெறும்.

## இந்தியக் குடியரசின் உதயம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். நாம் எப்பொழுதும் கோடிக்கணக்கான நம் மக்களின் மேம்பாட்டையும், நல்வாழ்வையும் பற்றியே சிந்திக்க வேண்டும். இதுவே நாம் மக்களுக்கு எடுத்துரைக்கும் அறிவுரை.

இந்தியக் குடியரசு பிறத்தலைக் கண்டுகளிக்க நாம் பெரும் பேறு பெற்றுள்ளோம். வழி வழி வரும் நம் சந்ததியார்கள், இப் பொன்னான நன்னாளைக் கண்டுகளித்த நம் மாட்டு மிகுதியாகப் பொறாமையும் கொள்வர். ஆனால் அதிர்ஷ்ட தேவதை எச்சமயத்திலும் நம்மை விட்டு நழுவிச் செல்லக் கூடியது. அதை நம் சொந்த நல்லுழைப்பால் நாம் உற்சாகத்தோடு பேணிக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் சிறிதளவு அசிரத்தை காட்டினாலும், அல்லது நாம் சற்றே தவறான திசைகளில் நோக்கினாலும் அவ்வதிர்ஷ்டம் நம்மை விட்டு நழுவி விடக் கூடிய இயல்புடையது.

(1950 ஜனவரி 26ம் நாள் பிரதமர் நேரு நாட்டிற்கு விடுத்த நற்செய்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை உலகிற்கு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று விரிந்தது. அதன் பின் அதற்கொன்று இதற்கொன்று என நாலைந்து சிறுகதைகள் எழுதினேன்.

## பெற்ற பரிசில்கள்

யாழ் எழுத்தாளர்; மட்டுநகர் எழுத்தாளர், மலைநாட்டு எழுத்தாளர் என்று பிரிவுகள் தோன்றின. மலைநாட்டில் இருப்பதால்—மலைநாட்டைச் சேர்ந்தவன் என்பதால்—மலை நாட்டு எழுத்தாளன் என்ற பெயருடன் பிரதேச இலக்கிய அடிப்படையில் நானிருக்கும் சூழ்நிலையின் பிரதிபலிப்பாக என் சிறுகதைகளை அமைத்துக் கொள்ளுகின்றேன். என்னைச் சுற்றியுள்ளவர்களே என் பாத்திரங்கள். இதற்கிடையில் மலை நாட்டுச் சிறு கதைப் போட்டி என்று ஒன்றை வீரகேசரி நடாத்தியது. அதில் கிடைத்த முதற் பரிசும், 'மலை முரசு' என்ற மலைநாட்டுப் பத்திரிகை நடத்திய சிறு கதைப் போட்டியில் கிட்டிய முதற் பரிசும் மலை நாட்டு எழுத்தாளர் மத்தியில் எனக்கொரு நல்ல இடத்தைத் தேடி தந்தன.

'கதை இல்லாததையும் கதையாக்கிக் காட்டும் நளினத்திறமை உங்களிடம் இருக்கிறது' என்றும்,

'ஒரு வருடத்தில் நீங்கள் எப்படி வளர்ந்துள்ளீர்கள் என்பதற்கு உங்களது சென்ற கதை நல்லதொரு சான்று' என்றும் மலையக எழுத்தாள நண்பர்கள் மட்டுமல்லாது மற்றவர்களும் அவ்வப்போது எனது படைப்புக்களைப் பாராட்டி எழுதுவதன் மூலம் ஊட்டிய உற்சாகமே தட்டுத் தடுமாறி நடந்த எனது எழுத்துலக வாழ்வை நிதானமாக காலூன்றி நடக்க உதவுகின்றது. புன் முறுவல் பூக்கின்றேன்.

## நமது கஷ்டம்

அரை நாளில் ஒரு கதை எழுதி முடித்தாலும் முடிப்பேன்; ஆறு மாதத்திற்கு முன் எழுதத் தொடங்கியதை முடிக்கத் தோன்றாமல் விழித்துக் கொண்டுமிருப்பேன்.

கதை எழுதுவதென்பது என்வரை எத்தனை இலகுவானதோ அத்தனைக் கத்தனை கடினமானதும் கூட. 'எட்டு புத்தகங்களை வாசித்திருப்பாய் இரண்டு கதை எழுதி விட்டாய்' என்று கூறுபவர்களைக் கூறு போடத் தோன்றுவது, நாம் படும் அவஸ்தையை அவர்கள் புரிவதில்லையே என்ற கொதிப்பால்தான்.

கதைக்குச் சிறந்த கருவாயிற்றே என்று எனக்குப் படுவதை எல்லாம் ஒரு கை பார்க்காமல் விடமாட்டேன். அதே நேரத்தில் வெறும் கதை அமைப்பிற்காக மட்டுமே நான் எந்த பாத்திரத்தையும் படைப்பதில்லை. அந்தப் பாத்திரத்தின் மூலம் ஏதாவதொரு உண்மையை உணர்த்தவே விரும்புகின்றேன்—செய்கின்றேன்.

இது தான் நான் எழுதத் தொடங்கிய—எழுத்தாளனாகிய—கதை.

# இருபதாம் நூற்றாண்டின் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வசதி தேடிக் கொடுக்கும் பொறுப்பையும் நேரு சமாளிக்க வேண்டியிருக்கிறது!

## நேரு இருவர்

உலக அமைதிக்கு அடையாளமாக அடிக்கடி வெண்புறாவைப் பறக்கவிட்டு இன்பங்காணும் நேருவின் பேச்சிலே எரிமலையின் வேகத்தையும் காணலாம்; ஞானிகளின் அன்பு மொழியில் தவழும் சாந்தியையும் காணலாம்; விடுதலைப் போராட்ட காலத்தில் இவர் உதிர்த்த ஒவ்வொரு சொல்லும் ஏகாதிபத்தியத்தைத் தகர்க்கும் வெடி குண்டுகளாக இருந்தன; சுதந்திர நாட்டில் இவரின் ஒவ்வொருவாக்கியமும் ஆக்கப் பணியில் மக்களைத் தூண்டும் நெம்புகோலாக இருப்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். இனிமையும் வலிமையும் உள்ள இவரின் எழுத்துக்களிலே நடையழகும் கருத்தழகும் ஒன்றை ஒன்று போட்டியிட்டுக் கொண்டு துள்ளி விளையாடும்! அந்தக் காலத்திலே விடுதலைக் கிளர்ச்சிக்காரராக விளங்கி, இந்தக் காலத்திலே நாட்டு வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் நேரு, கோழியைப் போல் சில மணிநேரம் தான் உறங்குகிறார்.

## அவரின் தத்துவம்

குளிர் நாட்டு வாசிகளான சோவியத் தலைவர்களே தேனீயைப் போன்ற நேருவின் சுறுசுறுப்பைக் கண்டு மலைத்து விட்டார்கள். சர்ச்சிலைப் போல் ஆயுதந்தரித்து படைகளை போர்க் களத்திலே நடத்திச் சென்றவர் அல்ல என்றாலும், அதைவிட அதிக மன உரம் கொண்ட விடுதலை வீரர்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். அரசியல் சூழ்ச்சியில் சர்ச்சிலுக்கு தாழ்ந்தவர் தான்; ஆனால் அரசியல் நேர்மையில், நாணயத்தில் அவரைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர். இவர் மனம் மின்னல் வேகத்தில் செயலாற்றும்; நெப்போலியன் ஞாபகசக்தி, ஸீசரின் ஆற்றல், அலெக்ஸாந்தர் கம்பீரம் நேருவுக்கென்று [illegible] எல்லோருக்கும் [illegible] கவர்ச்சி இவர் தோற்றத்திலே மின்னுகிறது. 'வெற்றி, வீரனுக்கே! கோழைக் கல்ல!' என்பதே நேருவின் வாழ்க்கைத் தத்துவம். நொண்டிச்சாக்கு சொல்வதை வெறுக்கும் இவருக்கு—எதையும் உடனடியாகச் செய்தாக வேண்டும் என்பதே ஆவல். நேரு பிடிவாதக்காரர் அல்ல; வளைந்து கொடுக்கும் சுபாவம் கொண்டவர்தான்!

## ஜனநாயக வாதி

மொழிவழி ராஜ்ய அமைப்பு, ஹிந்திப் பிரச்சினை போன்ற சிக்கல்களில் பெருவாரியான மக்கள் கருத்துக்கு ஏற்பவளைந்து கொடுத்திருக்கிறார்! ஜனநாயகத் தலைவருக்குத் தேவையான பண்புதானே!

நேருவிடம் முன் கோபம் உண்டுஎன்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் கோபம் உள்ள இடத்தில்தான் நல்ல குணம் அதிகமாகத் தேங்கியிருக்கிறது; நேரு சர்வாதிகாரி என்று குறைபட்டுக் கொள்கின்றவர்கள் 'தலைவருக்கு அழகு கொஞ்சமாவது சர்வாதிகாரம் வேண்டும்' என்னும் மாக்ஸிம் கார்க்கியின் கருத்தை ஆராய்வது நல்லது. அரசாங்கத்தை நடத்துவதிலும், ஆளுங் கட்சியை மேய்ப்பதில் எத்தனையோ நெருக்கடிகள் வரலாம் அல்லவா? எவரையும் சரியாக எடைபோடும் ஜப்பானியர்களே 'நடைமுறை' சிக்கல்களை அவிழ்க்க வல்ல அனுபோக ரீதியான தலைவரே நேரு என்று மதிப்பிடுகிறார்கள்.

## அவரின் உள்ளம்

'தொட்டால் சுருங்கி' செடியைப்போல் உணர்ச்சிகளால் எளிதில் பாதிக்கப்படும் நேருவை சர்ச்சிலே, அச்சத்தையும் வெறுப்பையும் வென்று உலக மக்களுக்குத் தொண்டாற்றும் தலைவர் என்று கூறியிருக்கிறார். நேருவுக்கு மலர்கள், குழந்தைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். நட்சத்திரங்களையும், அந்தி வானத்தையும் இயற்கை அழகுகளையும் ரசிக்கும் அவர்தம் கவியுள்ளம்! பனி விளையாட்டும், 'கிளைடர்' விமான விளையாட்டும் நேருவுக்குப் பிடித்தமான விளையாட்டுகள்! குழந்தையுள்ளம் படைத்த இவருக்குப் பட்டாணி, ஐஸ்கிரீம் ஆகியவை பிடித்தமான உணவுகள்! யார் யாரோ எப்படி எப்படியோ புகழ் மாலை சூட்டினாலும் காந்தியடிகள் கருத்தே இவருக்கு நன்றாகப் பொருந்துகிறது. குருவுக்குத்தானே சீடரின் முழு விபரம் தெரியும்!

“தந்தையாக, சகோதரனாக
எழுத்தாளராக, உலகம்
சுற்றியாக தேசபக்தனாக,
சர்வதேசிய வாதியாக
எளிதிலே பிரகாசிக்கிறார்......
அவர் தேசியம்
சர்வதேசியத்திற்கு
இளைத்ததல்ல......”

—காந்தியடிகள்

["இருபதாம் நூற்றாண்டு மேதைகள்"]

## சினிமா

சினிமாக்கள் பெரும்பாலும் நகர மக்களாலேயே பாராட்டப்படுகின்றன என்று கருதுகிறேன். ஒழுங்கற்றதும் வருந்தத்தக்கதுமான இந்தக் காட்சிகளுக்கும், இன்னும் உயிர் வைத்துக் கொண்டிருக்கும் கிராமப் பாடல்கள், ஆட்டங்கள், தெருக் கூத்துக்கள் முதலியவற்றில் காணப்படும் அழகுக்கும் உள்ள வித்தியாசம் மிகவும் குறிப்பிடத்தக்கது. வங்காளம், குஜராத், தென்னாடு முதலிய பிரதேசங்களில், கிராமவாசிகள் தங்களையறியாமலே, அடிப்படையான அழகுடையவர்களாகவும், அழகை அனுபவிக்கும் சக்தியுடையவர்களாகவும் இருக்கிறார்களென்பதைப் பார்க்கிறபோது, நாம் ஆச்சரியத்தினால் திகைப்படைந்து போகிறோம். ஆனால் மத்திய வகுப்பாரிடத்தில் இந்தச் சக்தி இல்லை. அவர்கள், தங்கள் அடிப்படையையே இழந்துவிட்டார்கள். அவர்களுக்கு அழகு பரம்பரையும் இல்லை.

— ஜவஹர்லால் நேரு

# சிலப்பதிகாரம்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையிட்டதன் காரணமாகக் கோவலன் கொலை செய்யப்பட்டதைக் கேள்வியுற்ற கண்ணகி, பாண்டியன் அவையினை அடைந்து, 'தன் கணவன் கள்வன் அல்லன்' என்று வழக்குரைத்து நிரூபித்து முடிவில் மதுரையையும் முலைமுகந் திருகித் தீக்கிரையாக்கினள். அதுகண்ட பாண்டியன், 'யானோ அரசன்! யானே கள்வன்' எனக் கூறிக்கொண்டே, தன் 'பண்டைவினைவாகி வந்த வினையால் வளையாத செங்கோல் வளைந்த' தற்காக மனம் மிக வருந்தி உயிர் நீத்தான். எனினும் கண்ணகி தன்சினம் அடங்கப்பெற்றாள் அல்லள். கண்ணகி தெய்வமாதல்

பின்பு கண்ணகி, திருச்செங்குன்றம் என்னும் மலையேறித் தன் கணவனை நினைத் திருக்குங்காலை, வானுலகடைந்த கோவலன் ஓர் அழகிய விமானத்தில் வந்து அக்குன்றத்தில் இறங்கித் தன் தேவியை அவ் விமானத்தில் ஏற்றிக் கொண்டு வானகம் சென்ற போது அம்மலையில் வாழும் குறவர் அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு கண்ணகியைத் தம் குலமகளான வள்ளியாகவே நினைத்து வழிபட்டனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வத்தினளான கண்ணகித் தேவி, தனக்குச் சேர நாட்டில் கோட்டம் எழுப்பி விழா நடத்தும் சேரன் செங்குட்டுவனுக்குத் தன் மேகலையும் சிலம்பும் ஆர்ப்பக் காட்சி தந்து அவனைச் சுற்றியிருந்த தமிழ்மக்களுக்கெல்லாம் வரம் தந்தாள். கண்ணகி தந்த வரம், சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்துள் குன்றின்மேல் இட்ட விளக்கெனச் சுடர் விட்டு ஒளிர்கின்றது!

# புட்டிப் பால்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறீர்கள்? என்றவள் கூடிய மட்டும் பார்த்துவிட்டேன். குழந்தைக்குக் கொடுத்த பால் பொருந்தாததால் 'டபோறியா' கண்டிருக்கிறது. வருத்தம் முற்றி விட்டது. இனிமேல்...' என்று அந்த 'லேடிடாக்டர்' எல்லா டாக்டர்களும் வழமையாகச் சொல்வது போல் சொல்லிவிட்டாள்.

பால் பொருந்த வில்லை. தாய்ப்பால் பொருந்தவில்லையா? தகரடப்பாப் பால் பொருந்தவில்லையா? தாய்ப் பால் எந்தக் குழந்தைக்குப் பொருந்தாமல் போகிறது? வன விலங்குகள் கூடத் தம் சொந்தப் பாலைத்தானே குட்டிகளுக்கு ஊட்டி வளர்க்கின்றன.

'கொழு கொழு' வென்று குழந்தைகள் வளர வேண்டுமென்று கொள்ளும் மன ஆசை குழந்தைக்குக் காலனைப் புட்டிப்பால் உருவில் அனுப்பிவைத்தது. ஊறலும் சாறலும் ஊட்டிக் குழந்தைகளை, நம் மூதாதையர்கள் வளர்க்கவில்லையா? தாயற்ற குழந்தைகளும், தாய்ப்பால் குறைந்த குழந்தைகளும் வளரவில்லையா?

ஆனால் கணேசனின் குழந்தை புட்டிப் பாலுக்கு இரையாகிப் பெற்ற வயிற்றில் தீயை மூட்டி இன்பக் கோட்டைகளைத் தகர்த்து பறந்து சென்றுவிட்டது. புட்டிப்பாலைக் கடையில் வாங்கலாம். பிள்ளையை அப்படி வாங்கலாமா?

(யாவும் கற்பனை)

## புத்தக ஏற்றுமதி

கடந்த ஆண்டில் பிரிட்டிஷ் புத்தக வர்த்தகத்தில் ரூ. 120 கோடிக்கு வரவு—செலவு நடந்திருக்கிறது. அதற்கு முந்திய ஆண்டில் வரவு-செலவு சுமார் ரூ. 108 கோடியாகும். கடந்த ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புத்தக விற்பனையின் மதிப்பு சுமார் ரூ. 52 கோடியாகும்.

# தலைவரை...

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. எங்கள் துணையின்றிப் புதிய தொழிற் சங்கங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டுவிட்டது. இலங்கைத் தீவின் மிகப் பெரும்பான்மையான தொழிலாளர் பகுதியான மலைநாட்டுத் தொழிலாளர் தமக்கென ஒரு மொழிவழித் தொழிற்சங்கத்தை இதே நேரத்தில் உருவாக்க முன் வந்தனர். இலங்கைத் தொழிலாளர் கழகம் பிறந்தது. மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளிக்கும் இதர தமிழ் பேசும் தொழிலாளருக்கு மிடையே இரத்தபாசம் பெருக்கெடுத்தோடவாய்ப்பு ஏற்பட்டது. இன்று இலங்கைத் தொழிலாளர் கழகமும் எமது சங்கமும் ஒரு இணைப்புக் கழகத்திலே குடும்ப பாசத்தை நுகருகின்றன.

புதிய சங்கங்கள் மலர்ந்த மகிழ்ச்சியிலே திளைத்த எங்களுக்கு ஒரு சின்ன ஏமாற்றம். இந்த ஏமாற்றம் அடுத்தடுத்துச் சில நாட்கள் ஏற்பட்டுக் கொண்டே வந்தது. இதன் இடையில் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவெய்தி மூன்றுவது ஆண்டிலே சங்கம் தனது காலடியை எடுத்து வைத்தது.




# எனது....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை, ஏன் நான் கவலைப்பட வேண்டும்?

இன்றைய பிரச்சினைகளே எனக்குப் போதும். எனக்கோ எனது புகழுக்கோ எனது மரணத்துக்குப் பின் எது நடப்பினும் அது பற்றி எனக்கு அக்கறை கிடையாது. நான் இறந்த பின், அவற்றினால் எனக்கு என்ன பிரயோசனம்? எனக்குள்ள அக்கறை என்னவென்றால், நான் உழைத்த கொள்கைகள் நிலைத்து, வளர வேண்டும். இதே வழியில் நாடு முன்னேற வேண்டும் அல்லது இதை விட நல்ல பாதை அமைக்க முடியுமெனில், அவ்வழி செல்ல வேண்டும் என்பதே.

முடிவில், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரை, எந்த நாட்டின் மீதோ, மக்கள் அல்லது தனி மனிதன் மீதோ எனக்கு எவ்வித வெறுப்புணர்ச்சியும் கிடையாது. சில சமயங்களில் இந்தக் காரணத்துக்காகவோ, அந்தக் காரணத்துக்காகவோ இதைச் சொல்லி விட்டார் அல்லது அதைச் செய்துவிட்டார் என்பதற்காகவோ நான் யாரையாவது விரும்பாது இருக்கலாம்—ஆனால், அது மறைந்து போகும் தற்காலிக உணர்ச்சியேயாகும். உண்மையில், எனக்கு யார் மீதும் வெறுப்புக் கிடையாது.

—

காந்தி யார்? இவர் ஒரு வசிகர சக்தி; ஆழ்ந்த அஸ்திவாரமுடைய ஸ்தாபனம்; எல்லா மதங்களும் ஒன்று கூடும் தனிமதம். ஆனால் இவரை ஒரு தெய்வமாக வழிபட்டு நின்று விடுவதோடு நாம் திருப்தியடையலாமா? இல்லை. இவர் வாழ்க்கை, நமது தினசரி வாழ்க்கையில் ஐக்கியமாக வேண்டும். இதை அடிகளே ஓரிடத்தில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்:-

'என்னுடைய நண்பர்கள் எனக்குச் செய்யும் சிறந்த கௌரவமானது நான் எந்தெந்த வேலைத் திட்டங்களின் பிரதிநிதியாக இருக்கின்றேனோ அந்த வேலைத் திட்டங்களைத் தங்கள் வாழ்க்கையில் கொண்டுவருவதேயாம். அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லாவிட்டால், தங்கள் முழு பலத்துடன் அவற்றை எதிர்க்கவேண்டும். இது செயல் காலம். இந்தக் காலத்தில் குருட்டுத்தனமாக எதையும் பின்பற்றுவது கூடாது. அதனால் பயனில்லை.'

காந்தியின் இந்த நம்பிக்கைக்கு உதாரண புருஷராக விளங்கினார், காலம் சென்ற பாரதப் பிரதமர் நேரு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




தொடர் கதை:

# சோலை மண்டபம்

—'மாவிட்டபுர ஆனந்தன்'—

ஆரம்பத்திற் பெரியதோர் உருவமாய் இருந்த 'ரொக்கெட்', இப்பொழுது சின்னஞ் சிறிய கோளமாய் விண்வெளியிற் பறந்துகொண்டிருக்கிறது. அதனுள் நாங்கள் ஐவரும் தொலைநோக்கியும் கையுமாக நின்றுகொண்டிருந்தோம். 'ரொக்கட்' மின்னல் வேகத்திற் பறக்கிறது.

பூமியிலிருந்து எத்தனை ஆயிரம் மைல்களுக்கப்பால் வந்துவிட்டோப்! எத்தனை கோள்களை எல்லாம் தாண்டி விட்டோம். எத்தனை கால நிலை வேறுபாடுகளைக்கடந்து வந்திருக்கிறோம். நாங்கள் கண்டு களித்த இயற்கையின் அற்புதமான காட்சிகள் தான் எத்தனை! இவற்றையெல்லாம் எண்ணுகின்ற பொழுது இதயத்தில் ஒரு வித கிளு கிளுப்பு—ஒரு வித இன்ப உணர்வு—உண்டாகிறது.

"காலநிலையெல்லாம் எமக்குச் சாதகமாகவே அமைந்திருக்கிறது" இல்லையா மிஸ்டர் எட்வர்ட்?'

எமது குழுத்தலைவனை நோக்கி மலர்ச்சியுடன் கேட்டேன்.

"ஆமாம்"-தலையைச் சற்று உயர்த்திக்கொண்டே சுருக்கமாக விடை கூறினர்.

அவரது கவனம் மீண்டும் தொலைநோக்கியிற் பதிகிறது. மேலும் பேச்சுக் கொடுக்க நாம் எவரும் விரும்பவில்லை; பூரண மௌனம் ஆட்சி கொள்ளுகிறது.

நிமிடங்கள் சில பறந்தன. 'ரொக்கட்' செவ்வாய் மண்டலத்தில் இறங்கி, ஒரு நிலைக்கு வந்துவிட்டது. எட்வர்ட் முதலில் இறங்கினர்; தொடர்ந்து நாங்கள் நால்வரும் செவ்வாய் மண்டலத்திற் கால் வைத்தோம். இறங்கி ஒரு நிமிடநேரம் கூட ஆகியிருக்காது. சுமார் பத்துப்பேர்கொண்ட கூட்டமொன்று எம்மை நோக்கி விரைவாக வந்துகொண்டிருந்தது.

அவர்களின் தோற்றமே எமக்குப் புதுமையாகவிருந்தது. அந்தக் குட்டை மனிதர்களின் கைகளில் ஏதோ ஒரு பொருள் இருந்தது. அது செவ்வாய் மண்டலத்தில் உபயோகிக்கப்படும் துவக்கு என்பதை அறிய எமக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. கிட்டத்தட்ட, பூமியிலுள்ள துவக்குகளைப் போலத்தான் அவையும் அமைந்திருந்தன வெனினும் இரண்டிற்கும் பலவித வேற்றுமைகள் இருந்தன.

(2)

செவ்வாய் மனிதர்கள் எம்மை நோக்கி வந்துகொண்டிருந்த முறையைப் பார்த்தபொழுது, அவர்கள் எமக்குச் சாதகம் செய்யக்கூடியவர்களாகவோ, எம்மை வரவேற்கக் கூடியவர்களாகவோ படவில்லை. பதிலாக, எமக்குக் கெடுதிகள் செய்யக்கூடியவராகத் தோன்றினர்.

'மிஸ்டர் எட்வர்ட், இவர்களிடமிருந்து நாம் தப்பிக் கொள்ளவேண்டும். இந்தக் குட்டை மனிதர்கள் எமக்கு நிகராக ஓடமாட்டார்கள். இவ்விடத்தை விட்டே மிக விரைவாக நாம் ஓடிப்போய் விடுவோம். அப்படியானல் தான் நாம் பிழைக்கமுடியும்'—விநயமாகக் கூறினேன்.

'இது என்ன ஐயனே, உன் மூளை எங்கே போய்விட்டது? நாம் ஓடத் தொடங்கினல் அவர்கள் எம்மைச் சுட்டு வீழ்த்திவிடுவார்களே! நன்கு யோசித்துப் பாரும்—'

நான் கூறிய கருத்துத் தவறென்பதை உணர்ந்து கொண்டேன். 'நாங்கள் தப்புவதற்கு வழியே இல்லையா? தெய்வமே, நீதான் துணை...' தெய்வத்தின் மேற் பழியைப் போட்டது என் மனம்.

செவ்வாய் மனிதர்கள் அருகில் வந்துவிட்டார்கள். 'சடார்' என்று நிமிர்ந்து நின்றார்கள், ஆடாமல் அசையாமல்! அவர்களின் பத்துத் துப்பாக்கிகளும் எம்மை நோக்கி நீண்டன.

(தொடரும்)



இலங்கைக்கு கடைசியாக விஜயம் செய்து விட்டுத்திரும்புகையில், நேருவின் இப்படத்தை 'வளர் மதி'யில் பிரசுரித்து, 'போய் வரட்டுமா, மருமக்களே?' என்று கேட்பதாக எழுதியிருந்தோம்.

இன்று, இதே படத்தைப் பிரசுரிக்கும் போது, நெஞ்சம் நெகிழ்கின்றது, துக்கம் தொண்டையை அடைக்கின்றது.

நிரந்தரமாகப் போய் விட்டாரே!

## நீங்கள் ஒரு கணக்குப் புலியா?

'நீங்கள் ஒரு கணக்குப் புலியா?' என்ற 17-5-64-ம் இதழ் புதிருக்குச் சரியான விடை அனுப்பிய நூற்றுக் கணக்கான மருமக்களில், முதல் கிடைக்கப் பெற்ற மூன்று சரியான விடைகள் அனுப்பியதன் மூலம் முதல் மூன்று புத்தகப் பரிசுகளைப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம் இதோ:

(1) ஆ. தேவராசா, 210, ஹல்ஸ்டோவ் வீதி, கொழும்பு-12.

(2) த. யோகராசா, 137/21, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12.

(3) ஜெயமலர் சண்முகராசா, முருகமூர்த்தி கோவிலடி, தாவடி தெற்கு.

[மேற்கண்டவர்களுக்கு இரு வாரங்களில் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.]

## இவர்கள் யார் தெரியுமா?

'இவர்கள் யார் தெரியுமா?' என்ற கேள்விக்குச் சரியான விடை அனுப்பியோர் விபரம் பின்' வருமாறு:

1. வை. ச. ஆனந்தன், சிவன் கோவிலடி, காரைநகர்.

2. சி. யோகேஸ்வரி, மூளாய், சுழிபுரம்.

3. எஸ். ஆர். ஸ்டீவன், 103/2, ஹல்ஸ்டோவ் தெரு, கொழும்பு-12.

4. சி. பரராசசிங்கம், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# மேருமலையன்ன மாபெரும் தலைவன்

அன்புள்ள மருமக்களே!

வாழ்விலே என்றும் இளமையுடனும், இனிமையுடனும், இன்முகத்துடனும் காட்சியளித்து, ஆயிரம் பிரச்சினைகள் தொல்லைகட்குமிடையே மனம் குன்றுது, மாநிலம் வாழ, மானிட இனம் வாழ, மகிழ்ச்சி ததும்பும் வதனத்துடன் மண்ணுலகோர் யாவரையும் தமது மாண்பு மிக்க தலைமையினுல் கொள்ளைகொண்ட மாபெரும் தலைவர், மாதருள் மாணிக்கம், மேருமலையென்ன மாந்தருள் நெடிதுயர்ந்து நின்ற மாமலை, உலக சுபீட்சத்திற்கும் சமாதானத்துக்கும் அயராதுழைத்த ஆசிய ஜோதி, உலகத்தலைவர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஏற்றிப் போற்றி, தமது நண்பனென அழைப்பதிலேயே பெருமைகொள்ளும் பேறு பெற்ற பெரியவர், 'எனது வாரிசு இவனே' என மாந்தருள் ஒரு தெய்வம் மகாத்மா தனது நாட்டுமக்களுக்கு அர்ப்பணித்த அன்புச் செல்வம், பாரத நாட்டின் பழமையைக் காக்கும் அதே வேளையில், பிற நாடுகளுக்கு எவ்விதத்திலும் சளைக்காத வகையில் புதிய, விஞ்ஞான, தொழில் அபிவிருத்திப் பாதையிலும் அதை முன்னேற வழிவகைகள் செய்த பேராசான், நாற்பதுகோடி மக்களையும் தனக்குப் பின் தன் நாட்டின் வாரிசுகள் என்று, தனக்குஅவர்கள்மீதிருந்த அழியாதஅன்பைஉலகுக்கு எடுத்துரைத்த அண்ணல், எந்தவொரு கொள்கைக்கும் அடிமைப்படாது, தனக்கெனத் தனி வழி வகுத்து, அந்தப்பாதையில் அகிலம் வியக்க முன்னேறிய கர்ம வீரன், பெருங்குடிப் பிறந்தும் அரும்குடி மக்களின் இன்னல்களைக் கண்டு அவதியுற்று, அவர் தம் கஷ்டங்களைப் போக்குவதே தமது கடமை என இத்தனை ஆண்டுகளாக இடைவிடாது உழைத்த உத்தமர், உலக மக்கள் அனைவரும் தமது தலைவன் என இனம், மதம், நாடு என்னும் எல்லைகளையெல்லாம் கடந்து நின்று போற்றும் பெற்றி வாய்ந்த பாரதத்தினன்—ஜவகர்லால் நேரு—உலகத்துக் குழந்தைகளுக்கெல்லாம் 'சாச்சா' (மாமா) வான நேரு—எம்உள்ளங்களில் பேசாமல், புலம்பாமல் அனலை அள்ளிக் கொட்டிவிட்டு, அந்தகோ! மறைந்துவிட்டார்.

மறைந்தாலும், அவரது செயல்கள், பொன்மொழிகள் இப்பூவுலகை விட்டு என்றும் மறையா; என்றுமே மறையா.

'அவர் ஆத்மா சாந்தியடைக', என்று சொல்லிவிடுவதுடன் நின்றுவிடாது, அவர்காட்டிய வழியில் சென்று அவரது இலட்சியங்கள் ஈடேற நாமும் அவரைப் போன்று 'மனிதரா'க வாழ்ந்தோமானுல், உண்மையிலேயே அவர் ஆத்மா சாந்தியடையும்.

[signature]

## 'வளர்மதி' புதிய மருமக்கள்

3863 எஸ். பி. மகேஸ்வரன், பெ. நாகவத்தை, அக்கரப்பத்தனை.

3864 பி. பெருமாள், பெ. நாகவத்தை, அக்கரப்பத்தனை.

3865 பொ. காந்தகுமார், 93/7, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம்.

3866 ஆர். பி. சிவனு, மச்சகந்தை, செட்நூல் பிரிவு, பலாங்கொடை.

3867 வீரசக்தி கணேசன், அரசினர் மகா வித்தியாலயம், பளை.

3868 பி. வி. நடேசன், சரஸ்வதி வித்தியாலயம், சாமிமலை.

3869 பி. எம். சந்திரேஸ்வரன், இந்துராணை தோட்டம், வாக்குல.

3870 சி. சண்முகநாதன், கோணவலை, கெங்காலை.

3871 ச. ஸ்ரீரங்கன், மஞ்சத்தடி தெற்கு, இணுவில், சுன்னுகம்.

3872 உதயவன், 46/1, பஸல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை.

3873 சி. பழனிவேல், மே/பா, ஆர். எஸ். மாரிமுத்து, 7வது பிரிவு, ஸ்பிரிங் வெளி தபால்.

3874 ஞா. ஆ. விக்டர்ராஜ், அர்ச். சாந்தமரிய நாயகிக் கல்லூரி, அவிசாவலை.

3875 செ சந்திரசேகரம், ஆரையம்பதி 3-ம் குறிச்சி, காத்தான்குடி.

3876 இ. இராசேந்திரன், அ. த. க. பாடசாலை, கெங்கல்ல.

3877 ஆ. கணேசமூர்த்தி, இராமக் கோர்ட் ரோட், திருக்கோயில்.

3878 எம். எம். அலியக்பர், சின்னக் கிண்ணியா, கிண்ணியா-3.

3879 கா. பசுபதிப் பிள்ளை, ஆரையம்பதி, காத்தான் குடி

3880 செல்வி பொன்மணி மயில்வாகனம், 'குமரேசர் வளவு', மல்லாகம்.

3881 த. சிவகணேசமூர்த்தி, க. பொ. த. ஆரம்ப விஞ்ஞான வகுப்பு. மட்/பட்டிருப்பு அரசினர் மா வித்தியாலயம், களுவாஞ்சிகுடி.

## தேசம் வாழ உயிர் கொடுப்பேன்!

—குமார் தனபால், நல்லூர்—

ஆறு குளம் நீர் கொடுக்கும்—தம்பி
ஆலமரம் நிழல் கொடுக்கும்
கார் முகிலும் மழை கொடுக்கும்—தம்பி நீ
கற்றவுடன் எது கொடுப்பாய்?

வான் மதியும் ஒளி கொடுக்கும்—தம்பி
வாசமலர் மணங் கொடுக்கும்
தேன் கதலி கனி கொடுக்கும்—தம்பி நீ
தேசம் வாழ எது கொடுப்பாய்?

காடு மலை மரம் கொடுக்கும்—தம்பி
கடல் கூட மீன் கொடுக்கும்
ஆடு மாடு பால் கொடுக்கும்
ஆளானதும் எது கொடுப்பாய்?

நல்லவர்க்கு துணை கொடுப்பேன்—நான்
நலிந்தவர்க்குப் பொருள் கொடுப்பேன்
தொல்லை வந்தால் தோள் கொடுப்பேன்—
அண்ணு நான்
தேசம் வாழ உயிர் கொடுப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

# தமிழ் பேசும் மக்கள் விடுதலைக்கு நாம் தடையாக இருக்கலாகாது

## மக்கள் முன்னேற்ற மன்றக் கூட்டத்தில் முன்னாள் மூதவை உறுப்பினர்

இலங்கை வாழ் மக்களில் பல துறைகளிலும் பின் தங்கியவர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களே யாவர். இந்நிலையில் அவர்களுக்கு அரசாங்கத்தினதும் தமிழ் தலைவர்களினதும் உதவிகள் இன்றியமையாதவை. எனவே சிறுபான்மைத் தமிழ் மக்கள் தீர்க்க தரிசனத்துடன் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முன் வரவேண்டும். நாமும் தமிழர்களாதலால், தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு இடைஞ்சலாக விருக்கக் கூடாது. எமக்கு எந்தக் கஷ்டங்களிருந்த போதிலும் எமது மொழி, கலை, கலாசாரம் முதலியவற்றைப் பாதுகாக்கும் பணியிலும் நாம் முன்னிற்க வேண்டும்.

கோப்பாயில் நடைபெற்ற மக்கள் முன்னேற்ற மன்றக் கிளை அமைப்புக் கூட்டத்தில் பேசும்போது முன்னாள் மூதவைத் தலைவர் திரு. ஜி. நல்லையா மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசும் போது, துர்அதிஷ்டவசமாக சிறுபான்மை மக்களை சில அரசியல் வாதிகள், குறிப்பாக கொம்யூனிஸ்டுக் கட்சியினர், தமது கட்சியின் வளர்ச்சிக்குப் பயன் படுத்த முனைகிறார்கள். இதற்கு உடந்தையாகவிருக்கும் சிறுபான்மைத் தமிழ் பிரமுகர் சிலர் பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். சிறுபான்மை மக்களின் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் உடுவில் தொகுதியிலும் கோப்பாய்த் தொகுதியிலும் போட்டியிட்ட சிறுபான்மைத் தமிழ் சமூக அபேட்சகர்களுக்கு எதிராக கொம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்குச சேகரித்தமையை எமது மக்கள் மறக்க மாட்டார்கள். இதிலிருந்து அவர்களுடைய அந்தரங்க நோக்கம் என்னவென்று புரிந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சீன-ருஷ்ய கோஷ்டிச் சண்டைக்கும் எமது மக்களை இவர்கள் ஆயுதமாகப் பாவிக்கின்றனர். சிறுபான்மைத் தமிழ் மக்களின் நன்மையைக் கருதி ஆரம்பித்ததுதான் மக்கள் முன்னேற்ற மன்றம். இம் மன்றம் தூரதிருஷ்டியுடன் ஒரு நல்ல பாதையில் பழி நடந்து வருகிறது, என உறுதி கூற விரும்புகிறேன்.

ஆசிரியர் க. முருகேசு, திரு. ஆ. கணபதிநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

### உத்தியோகத்தர்கள்

கோப்பாய்க் கிளை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்:-

தலைவர்: திரு. க. முருகேசு, இணைச் செயலாளர்: திரு. எஸ். கந்தசாமி, திரு. ஆ. மாணிக்கம், பொருளாளர்: திரு. பத்மநாதன்.

25 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

## வடமேல் மாகாண அறபு ஆசிரியர் சங்கம்

கடந்த வாரம் கூடிய வடமேல் மகாண அறபு ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

(1) முஸ்லிம்களின் போதனு மொழி தமிழாகவும், சிங்களம் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப் படுவதுடன் இஸ்லாமிய நீதி நெறிகளைச் சரியாக அனுஷ்டிப்பதற்கு அறபு மொழியும் சர்வதேசத் தொடர்புகளுக்காக ஆங்கில மொழியும் தொடர்ந்திருக்க வேண்டும்.

(2) முஸ்லிம் பயிற்சிக் கல்லூரிகளில் இஸ்லாமிய ஷரியத், இஸ்லாமிய கலாச்சாரம், நாகரிகம், இஸ்லாமிய தத்துவஞானம் ஆகிய பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(3) முஸ்லிம் பாடசாலைகளில், இஸ்லாமிய கலாச்சாரத்திற்கு முரணான (நாடகம், நாட்டியம் போன்ற) விடயங்கள் நடைபெறுகின்றன. அவ்வப்போது அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் இஸ்லாமிய சூழலை வளர்ப்பதற்கும், வழிவகைகள் செய்யப்படல் வேண்டும்.

(4) அறபு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்கும் சமபாட நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்.

(5) இஸ்லாமிய சூழலுக்கு அமைய தமிழ், சிங்கள பாடப் புத்தகங்கள் ஆக்கப்படவேண்டும்.

(6) மௌலவிமார்களுக்குப் பயிற்சிக் கல்லூரிகள் காலதாமதமின்றி நிறுவப் படவேண்டும்.

(7) முஸ்லிம் ஆண் பெண் இரு சாரருக்கும் தனித்தனி கலாநிலையங்கள் நிறுவப்பட வேண்டும்.

(8) திறமையுள்ள வறிய மாணவர்களுக்கு நிதியுதவியளிப்பதற்காக மாகாண வாரியாக சகாய நிதி சபைகள் நிறுவப்படல் வேண்டும்.

(9) முஸ்லிம் பாடசாலைகளின் முன்னேற்றத்தைக் கருதி, கண்காணிப்புச் செய்வதற்காக அறிஞர்களைக் கொண்டு ஒரு சபை நிறுவப் படல் வேண்டும்.

(10) கல்லூரித்தரத்திலும், சர்வகலாசாலைத் தரத்திலும் பகிரங்கப் பரீட்சைகளிலும், இஸ்லாமிய சரித்திரம், இஸ்லாமிய ஷரீஅத், இஸ்லாமிய தத்துவ ஞானம், கலாச்சாரம் போன்ற பாடங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(11) அரசினர் சிம்மாசனப் பிரசங்கத்தில் முஸ்லிம்களுக்கென தனிச் சர்வகலாசாலை அமைத்துத்தருவதாக வாக்களித்திருப்பது கூடிய கெதியில் நிறைவேற்றப்படவேண்டும்.

---

## உடுப்பிட்டியில் கலை விழா

இலங்கைத் தமிழரசுக் கட்சி உடுப்பிட்டி மாவட்ட சபையினர் 1-5-64ல் நடாத்த விருந்த கலைப் போட்டி, அரசாங்க எழுது வினைஞர் சங்க மேநாள் விழாக் காரணமாக ஒத்திப் போடப்பட்டது. போட்டிகள் ஜூன் 20ம், 21ம் நாட்களில் நடைபெறும். கட்டுரை அனுப்புவோரும், மற்றைய போட்டிகளில் பங்கு பற்றுவோரும் 15-6-64க்கு முன் அறிவிக்க வேண்டும். முன் அறிவித்தவர்கள் மீண்டும் அறிவிக்க வேண்டியதில்லை.

### போட்டி விபரம்

1. பேச்சு (அ) 16 வயதுக்கு மேல் 15 நிமிஷத்துள்.

### விஷயம்

பெண்கள்:(அ) அரசியலும் பெண்ணும் (ஆ) எம் கடன் (இ) சமஷ்டி அரசு (ஈ) சீதனம் (உ) விடுதலை.

ஆண்கள்: (அ) எம் எதிர் காலம் (ஆ) அரசாங்கத்தின் கல்வி அறிக்கை (இ) தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரம் (ஈ) சமஷ்டி அரசு (உ) சீதனம்.

(ஆ) 16 வயதுக்குள் ஆண் பெண் 10 நிமிஷத்துள்.

(அ) மகாத்மா காந்தி (ஆ) செல்வநாயகம் (இ) இன்பத் தமிழ்(ஈ) சுதந்திரம் (உ) தீண்டாமை.

2. கட்டுரை 16 வயதுக்கு மேல் ஆண் பெண் 1000 சொற்களுள்.

1. சத்தியாக்கிரகம் 2. சீதனம் 3. சிக்கன வாழ்வு 4. சமஷ்டி அரசு.

16 வயதுக்குள் ஆண் பெண் 500 சொற்களுள்.

1. கஸ்தூரிபாய் காந்தி 2. பாரதி 3. தமிழ் 4. கமத் தொழில் 5. ஈழநாடு.

### வாய்ப்பாட்டு

3. சங்கீதம்: (அ) 16 வயதுக்கு மேல் 30 நிமிஷம் (ஆ) 16 வயதுக்குள் 15 நிமிஷம்.

4. நடனம்: (அ) 16 வயதுக்குமேல் 30 நிமிஷம் (ஆ) 16 வயதுக்குள் 15 நிமிஷம்.

5. நாடகம்: 60 நிமிஷத்திற்குள்

6. தையல்: (ஆ) 21 வயதுக்குட்பட்ட பெண்கள்

(ஆ) 21 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் செய்து காட்ட வேண்டிய உடைகள் (1) 5 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைச் சட்டை (2) 5 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைச் சட்டை (3) தலையணை உறை.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:-

வ. கணேசலிங்கம், கலைப் போட்டிக் காரியதரிசி, நாவலர் மடம், கரவெட்டி.

---

## வெல்லா வெளி சன சமூக நிலையம்

'காலம் மாறக் கூடியது. [illegible] கும் ஆனல் காலத்திற்கேற்ற போல் கருத்திலும் மாற்றம் வேண்டும். அவ்வாறு மாற்றம் வையாத சமுதாயம் நிச்சயம் அழிந்தொழிய நேரிடும். இதை மனதிலே வைத்துக்கொண்டு இளைஞர்களாகிய நாம் புதுப் புது ஆக்க வேலைகளில் ஈடுபடுவோம். அவை வீழ்ந்துபட்ட எம்மினத்திற்கு விடிவு தேடித் தருவதாக அமையட்டும்'.

இவ்வாறு செல்வன், 'வெல்லலூர்க் கோபால்' வெல்லா வெளி சன சமூக நிலையத்தில் 9-5-64ல் நடைபெற்ற இளைஞர் மன்றக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மறைந்ததின் பொருட்டு ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் 'வெல்லலூர் கோபால்' அவர்களால் இரங்கற்பாக்கள் பாடப்பட்டன. அதைத் தொடர்ந்து செல்வர்கள் மா. நாகமணி, சோ. சண்முகராசா, இ. குருகுலசிங்கம். த. இராசையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

---

## திருவள்ளுவர் திருநாள்

கண்டி, கெங்கல்ல அரறணர் தமிழ்க் கலவன் பாடசாலையில் (20-5-64) புதன் நாள் முற்பகல் 11 மணி முதல் தலைவர் திரு.இ. தம்பிராசன் தலைமையாசிரியர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாள் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவில், திருக்குறள் மனனப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கட்கும் சொற் சித்திரத்திற் பரிசு பெற்ற மாணவர்கட்கும் அழகிய திருக்குறள் நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன. தொடர்ந்து ஆசிரியர் திரு. ம. சபாரத்தினம் அவர்கள் 'வள்ளுவன் வழங்கிய முத்துக்கள்' என்ற தலைப்பில் வள்ளுவரின் தெள்ளுதமிழ்க் குறட் கருத்துக்களை அள்ளி யள்ளி இன்றைய வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி வழங்கினார். அடுத்துப் பேசிய திரு. ஏ. எம். றிஸா ஆசிரியர் அவர்கள், 'வள்ளுவன் கடவுளின் பிரதிநிதி' என்பதை அழகுற எடுத்துக் காட்டினார்கள்.

ஈற்றில் முத்தமிழ் மன்ற வெளியீடான 'மலைமலர்' கையெழுத்திதழ் - வள்ளுவர் மலராக வெளியிடப்பட்டது மன்றப் பாதுகாவலர் திரு. ம. வெங்கடாசலம் பிள்ளை ஆசிரியர் நன்றி நவின்றார். மாணவ, மாணவிகட்குச் சிற்றுண்டி வழங்கலுடன் விழா பி. ப. 2 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

---

## மாணவ முத்தமிழ் மன்றம் எட்டியாந்தோட்டை

எட்டியாந்தோட்டைப் புனித கபிரியேல் கல்லூரி மாணவ முத்தமிழ் மன்றத்தினரின் கூட்டமொன்று, இயக்குநர், திரு. ஏ. பி. வி. கோமஸ், ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், இத்தவணைக்கான அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: செல்வன் கே. செல்வராஜ், துணைத் தலைவர்: செல்வன் சி. மத்யூ, செயலாளர்: செல்வி பி. எம். மனோகரி, துணைச் செயலாளர்: செல்வன் கு. செல்வநேசன், இதழாசிரியர்: செல்வன் எஸ். யேசுதாசன், துணை இதழாசிரியர், செல்வன் அ. செல்வரெட்ணம், பொருளாளர்: ஆசிரியர் திரு. எஸ். சுந்தரலிங்கம் பி. ஏ. துணைப் பொருளாளர்: செல்வன் கே. சந்திரராஜ், நூலக பொறுப்பாளர்: ஆசிரியர் திரு. ஜ். பொன்கலன் பி. ஏ., துணைப் பொறுப்பாளர்: செல்வன் பி. சாமிஐயா, இயக்குநர்: ஆசிரியர் திரு. ஏ. பி. வி. கோமஸ் பி. ஏ.

---

## களுவாஞ்சிக்குடியில் சமூக சேவை இணைப்புச் சபை அங்குரார்ப்பணம்

களுவாஞ்சிகுடி ஆண்கள் கிராம முன்னேற்றச் சங்கத்தில் முயற்சியினுல் களுவாஞ்சிகுடியிலுள்ள கவின் கலைமன்றம், கிராம முன்னேற்றச் சங்கம், சன சமூக நிலையம், சாரதா மாதர் மன்றம், சைவ மகா சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் பதின்மரைக் கொண்ட மேற்படி சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தைக் கடந்த 2-5-64ல் திரு. டி. பி. மயில்வாகனம் தலைமையில், க. ஆ. கி. மு. சங்கச் செயலாளர் திரு. பொ. செல்வரெத்தினம் தொடக்கிவைத்தார்.

அவ்வமயம் சங்கப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பாராளுமன்றப் பிரதிநிதியும், ஆண்கள் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கமவர்கள் இவ்விணைப்புச் சபையின் அமைப்பு களுவாஞ்சிகுடியின் வருஇகால முன்னேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாய் இருக்குமென்றும் இம் முயற்சி ஏனைய கிராமங்களைத் தூக்கத்திலிருந்து கட்டாயம் தட்டி எழுப்பி விழிப்படையச் செய்யுமென்றும் குறிப்பிட்டார்.

பின்வருவோரைக் கொண்ட உப குழுவொன்று திரு. எஸ். எம். இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டது:

திருவாளர்கள்: சி. அரசரெத்தினம் கி. சே. (சைவ மகாசபை), க. இராசையா ஆசிரியர் (கவின் கலை மன்றம்), சா. நாகமணி ஆசிரியர் (சனசமூக நிலையம்), திருமதி க.சகுந்தலா தெய்வநாதன் (சாரதா மாதர் மன்றம்).

---

## திருநாவுக்கரசுநாயனார் குருபூசை

கொழும்பு இசிப்பத்தான மகா வித்தியாலயத்தில் மத்திய இந்து மாணவர்கள், மகா வித்தியாலய இந்து சங்கச் செயலாளர் ஆசிரியர் திரு. எம். வடிவேல் அவர்கள் தலைமையில் 6-5-64 புதன்கிழமை பிற்பகல் சிறப்பாகத் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையைக் கொண்டாடினார்கள்.

ஆசிரியர் திரு. க. கந்தசுவாமி, ஆசிரியர் திரு. எம். வடிவேல் ஆகியோர் நாயனார் பெருமையைப் பற்றிப் பேசினர். பிரசாதம் யாவருக்கும் வழங்கப்பட்டது. ஈற்றில் உதவி புரிந்த ஆசிரியர்களுக்கும், அனுமதிவழங்கிய மகா வித்தியாலய அதிபருக்கும் நன்றியுரை கூறப்பட்டது.

---

## கல்யாணசுந்தரம் கலாமன்றம்

புதுமைக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக, பண்டாரவளையில் ஒரு கலாமன்றம் நிறுவப்பட்டுள்ளது.

இம் மன்ற முழுப் பொறுப்பாளராகத் திரு. எம். எஸ். நாதன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

மன்ற சார்பாகச் சீர்திருத்த நாடகங்கள், கலை விழாக்கள் நடாத்துவதுடன் கலையார்வமுள்ள இளைஞர்களுக்கு நல்லாதரவு கொடுத்து அவர்களை முன்னணிக்குக் கொண்டு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வெகு விரைவில் பண்டாரவளையில் ஒரு சமூக சீர்திருத்த நாடகமும் நடாத்த முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற உன்னத சித்திரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனிவீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
ஜுபிடர் (குருணுகல்)
தாஜ்மஹால் (கல்முனை)



ஏழைக் குடும்பத்தில்பிறந்த சகோதரிகள் கல்யாணியும் மாலதியும். கல்யாணி கல்வி யறிவு இல்லாததோடு கருநிற முடையவள். மாலதி கல்வி அறிவும் அழகும் கொண்டவள். குபேர வீட்டு மகனை பாஸ்கருக்கு அழகுப் பதுமையான மாலதியைக் காட்டிக் கல்யாணம் செய்து வைக்கிருன் அவர்களின் மூத்த சகோதரன். அன்புள்ளங் கொண்ட பாஸ்கர் தனது தந்தையின் வெறுப்புக்கு மத்தியில் கல்யாணியைத் தன் வீட்டுக்கு அழைத்து வருகிருன். பெற முடியாத அந்தஸ்தைப் பெற்ற அப்பேதை கல்யாணிக்கு மாமனின் வெறுப்பு பேரிடியாக உருவெடுக்கின்றது. மணவாழ்வு சோதனைக்குள்ளாகிறது. இந்தத் துர்ப்பாக்கியவதியின் முடிவைத் தெரிந்து கொள்ள இன்றே பாருங்கள்.

ஏவி எம் புரொடக்ஷன்ஸ் முருகன் பிரதர்ஸ் அளிக்கும்

## நானும் ஒரு பெண்

வசனம்: ஆரூர்தாஸ்
இசை: R. சுதர்சனம்
டைரக்ஷன்: A.C. திருலோகசந்தர் M.A.
MB முருகன் பிரதர்ஸ்

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—ரங்கராவ்
சுப்பையா—ராதா—ராஜன்—நாகேஷ்—நாகையா
புஷ்பலதா—மனோரமா—அசோகன்—சரஸ்வதி — நாராயணசாமி—ராமதாஸ்

10வது வாரம்!
மைலன் (கொழும்பு)
மற்றும் 6 திரைகளில்
எம். ஜி. ஆர், சரோஜாதேவி நடித்த



பெரிய இடத்துப் பெண்

# 2வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

செண்ட்ரல் (மருதானை)
ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருமலை) லிபேர்ட்டி (பதுளை)
ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஆனந்தா (கம்பளை)

ஜெமினி கணேசன் * ராகினி * எம். என். நம்பியார்
எஸ். ஏ. அசோகன் * நாகேஷ் * மனோரமா
ஆகியோர் நடித்த
ராஜலட்சுமி பிக்சர்ஸ்

## ஏழை பங்காளன்



டைரக்ஷன்: கே. சங்கர்
கதை வசனம்: மா. லட்சுமணன்
பாடல்கள்: கண்ணதாசன்
சங்கீதம்-வயலின்-தயாரிப்பு: கே. வி. மகாதேவன்

இன்னிசை நடன விருந்து! மகிழ்ச்சிச் சித்திரம்!!
பரவசமூட்டும் பாடல்கள்!!! பார்க்க வேண்டிய படம்!!!!

# கெயிட்டி – 4வது சனத்திரள் வாரம்!
மற்றும் 7 திரைகளில்!




சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன்,
விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ்,
எஸ். வி. சகஸ்ரநாமம், ஓ. ஏ. கே. தேவர்,
மனோரமா, எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த

## குங்குமம்

டைரக்ஷன்: கிருஷ்ணன்—பஞ்சு
இசை: கே. வி. மகாதேவன்
பாடல்கள்: கண்ணதாசன்—அருணாசலம்

பின்னணி : சௌந்தரராஜன்—



எதிர்பாருங்கள்!

கல்யாண் குமார்—தேவிகா—புஷ்பலதா
சந்திரபாபு—பி. எஸ். சரோஜா—ராஜஸ்ரீ
நடித்த

## யாருக்கு சொந்தம்

செல்லமஹால் 8வது வாரம்!
எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி
நடித்த

## தர்மம் தலை காக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மே மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.